இனியும் தாமதிக்கலாமா ஜனாதிபதி? பக். 12

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

33°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 116 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 08, திங்கட்கிழமை 21.03.2016

## ஹக்கீமுக்கு எதிராகச் சதி

### மு.கா. கட்சியிலிருந்து இருவர் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 21
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு எதிராகக் கொழும்பில் சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளதாகவும், இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கட்சி கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இந்தச் சதித் திட்டத்துக்காக, கொழும்பில் இரகசியச் சந்திப்பொன்று நடத்தப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்டதாகக் கூறப்படும் கட்சி பக். 23

# அரசமைப்பு உருவாக்கத்தில் தலையிடுகிறதா அமெரிக்கா?

## கேள்வியெழுப்புகிறது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 21
அரசமைப்புத் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கை அமெரிக்கா நடத்துவது குறித்து, மகிந்த ராஜபக்ச ஆதரவு பொது எதிரணி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.
அரசமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்கா ஏன் தலையிடுகிறது? என பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கேள்வியெழுப்பியுள்ளார்.
அரசமைப்புத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பத்தரமுல்ல வோட்டர் எட்ஜ் விடுதியில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்குக்கு, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.
ஏற்கனவே, யு.எஸ். எய்ட் உதவியுடன் நாடாளுமன்றத்தின், பொதுக் கணக்கு குழு மற்றும் பொதுத்துறை குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்குக் கடந்த 14 ஆம் திகதி நல்லாட்சி தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டிருந்தது.
இந்த நிலையிலேயே, அரசமைப்புத் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூட்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.
அரசமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்கா ஏன் தலையிடுகிறது? இது ஒரு உள்நாட்டுச் செயல்முறை, இது இலங்கையர்களால் தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த-வ-5)

### முச்சந்தி முரளி



கவனித்துப் பாருங்கள்
கடுகதியாச் செய்வார்கள்

## கொள்ளையரை இனங்காட்டியும் கைது செய்யவில்லை பொலிஸ்

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21
பருத்தித்துறை திக்கத்தில் 2 துப்பாக்கிகளுடன் கோயில் பூசகர் ஒருவரது வீடு புகுந்து நகைகள் மற்றும் பணம் கொள்ளையடித்தவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களில் சிலரைக் குறித்த பூசகர், 3 தடவைகள் அடையாளம் காட்டியும் பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
குறித்த இடங்களில் கொள்ளையர் நடமாடுகின்றனர் என்று கூறியும் அவர்களைக் கைது செய்ய முற்படாமையானது, கொள்ளையர்களுக்கும் பருத்தித்துறைப் பொலிஸாருக்கும் பக். 25

## பரீட்சையில் சித்திபெறவில்லையென தவறான முடிவு எடுத்த மாணவிகள்

### ஒருவர் சாவு: இருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 21
ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுக நேற்றுமுன்தினம் வெளியாகிய நிலையில், அதில் சித்தியடையவில்லை எனத் தவறான முடிவு எடுத்த 3 மாணவிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
பரீட்சையில் சித்தியடையவில்லை என்ற காரணத்தினால்தான் குறித்த மாணவிகள் மூவரும் தவறான முடிவு எடுத்ததாகப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றுள்ளன.
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பக். 25

## ராணுவத்தை சர்வதேசம் விசாரிக்க அனுமதிக்கமாட்டாது ஹெல உறுமய

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 21
ஜாதிக ஹெல உறுமய அரசில் இருக்கும் வரையில், எந்தவொரு சூழ்நிலையிலும், போர் வீரர்களை சர்வதேச சமூகம் விசாரணை செய்ய அனுமதிக்காது என்று, அந்தக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
பத்தரமுல்லயில் நேற்று முன்தினம் நடந்த ஜாதிக ஹெல உறுமயவின் மக்கள் மன்றம் நிகழ்வில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது, அவர் கூறியுள்ளதாவது:-
தற்போதைய அரசு இன்னமும் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. தற்போதைய அரசின் முற்போக்கான நகர்வுகளுக்கு, முன்னைய ஆட்சியாளர்கள் இன்னமும் இடையூறு செய்து பக். 23

## போர்ட்சிற்றி குறித்துச் சீனாவுடன் இணக்கம் காண அரசு பிரயத்தனம்

### பிரதமரின் சீனப் பயணத்துக்கு முன்பாக

கொழும்பு, மார்ச் 21
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 6 ஆம் திகதி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக, கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக, அரசுக்கும், சீன முதலீட்டாளருக்கும் இடையில் இணக்கம் ஏற்படுத்தப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள, பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிகால் ரூபசிங்க:-
சீன முதலீட்டாளருடன் தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. குறித்த திட்டத்துக்கான உடன்பாட்டைச் செய்துள்ள சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனத்துடன், மீள இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டு, உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது.
ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு முன்னதாக, சீன முதலீட்டாளருடன் இறுதியான இணக்கப்பாட்டை எட்டுவதற்காக அரசு அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்துகிறது. முக்கியமாகக் குத்தகைக் பக். 25

## தேசிய ரீதியில் முதல் 12 இடங்களில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இல்லை

### ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில்

கொழும்பு, மார்ச் 21
ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ள நிலையில், அகில இலங்கை ரீதியில் முதல் 12 இடங்களுக்குள், தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எவரும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்ட பக். 23

## ஏழு கிலோ கஞ்சாவுடன் இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 21
இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கஞ்சா கடத்திய குற்றச் சாட்டில், 7 கிலோ கிராம் கேரளாக் கஞ்சாவுடன் இந்திய மீனவர்கள் இருவரைக் கடற்படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நேற்றுக்காலை சந்தேகத்துக்கிடமான முறையில் இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த படகு ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோது, அவற்றில் பக். 24

## மின்மாற்றிகள் வெடிப்பு குறித்து ஆராய வருகின்றது ஜேர்மன் குழு

கொழும்பு, மார்ச் 21
பியகம மற்றும் கொடுகொட உப மின் நிலையங்களில் வழமைக்கு மாறான முறையில் இரண்டு மின்மாற்றிகள் வெடித்தமை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜேர்மனியில் இருந்து நிபுணர்கள் குழுவொன்று இன்று இலங்கை வரவுள்ளது.
இந்த மின்மாற்றிகள் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டவை. எனவே, இந்த வழமைக்கு மாறான வெடிப் பக். 23

## குளிக்கச் சென்ற மாணவன் வாய்க்காலில் மூழ்கிச் சாவு

கிளிநொச்சி, மார்ச் 21
இரணைமடுவில் வாய்க்காலில் குளிக்கச் சென்ற மாணவன், நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த மாணவன் நண்பர்களுடன் வாய்க்காலில் குளிக்கச் சென்றிருந்தார். இதன் போதே குறித்த மாணவன் வாய்க்காலின் மேலே உள்ள வரம்பில் நின்றிருந்தபோது, நீரோடும் வாய்க்காலில் எதிர்பாராமல் தவறி விழுந்துள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தில் மலையாளபுரத்தைச் சேர்ந்த சாளின் (வயது - 20) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.
குறித்த மாணவனின் சடலம் விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் பாதுகாப்பு, சிற்றுண்டிச் சாலையை வைத்தியசாலை நலன்புரி சங்கங்களே நடத்தும்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

சைக்கிள் பாதுகாப்பு மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றை நடத்தும் பொறுப்பை வைத்தியசாலைகளின் நலன்புரி சங்கங்களுக்கே கையளிக்க வேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவற்றை கேள்வி கோரலில் வழங்குவதற்காக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ள நிலையிலேயே, அமைச்சர் சத்தியலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் என்பனவற்றை அந்தந்த வைத்தியசாலைகளின் நலன்புரி சங்கங்களே நடைமுறைப்படுத்தி வந்தன. இந்த நிலையில் வடக்கு மாகாண பொதுக் கணக்குகள் குழு, நலன்புரி சங்கங்கள் இவற்றை நடத்துவதால் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்து இதனை திறந்த கேள்வி கோரல் முறையிலேயே வழங்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

இதனை எதிர்த்து தெல்லிப்பழை வைத்தியசாலையின் நலன்புரி சங்கம், வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவுக்கு தனது முறைப்பாட்டை வழங்கியிருந்தது. இதனை ஆராய்ந்த பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழு, வைத்தியசாலைகளின் நலன்புரி சங்கங்களின் செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அதனை அவர்களுக்கே வழங்க வேண்டும் என்ற முன்மொழிவை, கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி இடம் பெற்ற மாகாணசபை அமர்வில் சமர்ப்பித்திருந்தது.

அத்துடன் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றுக்கான இடத்துக்குரிய வாடகையை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடுகளை மேற்கொள்வது என்ற முன்மொழிவும் மாகாணசபையில் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை வடக்கு மாகாண சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருந்தது.

இந்தநிலையில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நேற்று முன்தினம், வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலை மற்றும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை திறந்த கேள்வி கோரல் மூலம் வழங்குவதற்கான விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை மீறி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் வட்க்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே செயற்பட்டேன் என்று குறிப்பிட்டார். சுகாதார அமைச்சரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தையே நடைமுறைப்படுத்துமாறு சுகாதாரத் திணைக்களத்துக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

(ற-5)

## இலக்கிய ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் தூண்டி இலக்கிய வட்டம் நடத்தும் எஸ்.பொ. என்னும் ஆளுமை இலக்கிய ஆய்வரங்கு நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு தெ.மதுசூதனன் தலைமையில் காலை அமர்வும், குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் மாலை அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

(ற-ரி)



குருத்தோலை ஞாயிறு தினமாகிய நேற்று அனைத்து கத்தோலிக்க கிறிஸ்தவ ஆலயங்களிலும் குருத்தோலைப் பவனியுடன் கூடிய திருப்பலிகள் இடம்பெற்றன. கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் குருவானவர் ஆலயத்தை நோக்கி பவனியாக அழைத்துச்செல்லப்பட்டுதிருப்பலி இடம்பெற்றது. (ற-ஜ-135)

## சந்தைக்குச் சென்றவரை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 21

அச்சுவேலி மகிழடி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்துரை இராசமணி (வயது – 65) என்பவரைக் கடந்த 3 நாள்களாகக் காணவில்லை என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் தனது வீட்டில் இருந்து கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு வியாபாரத்துக்கு என அச்சுவேலி மரக்கறிச் சந்தைக்குச் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை எனவும், அவர் அச்சுவேலி, நெல்லியடி, கொடிகாமம் மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களில் முருங்கைக்காய் வியாபாரம் செய்பவர் எனவும் அவரது மகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

# பாடசாலை மாணவர்களை கட்டாயம் அரச பஸ்கள் ஏற்றிச் செல்ல வேண்டும்

## நகருக்குள் 30 கி.மீ. வேகத்தில் பயணிக்க வேண்டும் சகல சாரதிகளுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 21

பாடசாலைச் சீருடையுடன் வீதியில் காத்திருக்கும் மாணவர்கள் அனைவரையும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் கட்டாயம் ஏற்றிச் செல்ல வேண்டும். யாழ். நகருக்குள் நுழையும் சகல பஸ்களும் 30 கிலோ மீற்றர் வேகத்தில் தான் பயணிக்க வேண்டும். இவை பற்றி இனிமேல் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படமாட்டாது. ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை தான் எடுக்கப்படும். – இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் விபத்து ஏற்படாது சாரத்தியம் செய்ய வேண்டும் என்பது போன்ற பல விடயங்களையும் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி யாழ்.நகருக்குள் நுழையும் சகல பஸ்களும் 30 கிலோ மீற்றர் வேகத்தில் தான் பயணிக்க வேண்டும் என்று பஸ் சாரதிகள் சகலருக்கும் அறிவுறுத்தப்படுகின்றது.

அந்த வகையில் ஏ–9 வீதியில் கைதடிப் பாலம் கடந்த பின்னரும், பலாலி வீதியில் ஆரிய குளம் கடந்த பின்னரும், பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்தி கடந்த பின்னரும், காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோயிலடி கடந்த பின்னரும், காரைநகர் வீதியில் சுடுகாட்டு ஆலடிச் சந்தி கடந்த பின்னரும், தீவகம் செயலாற்றும் பஸ்கள் பண்ணை கடந்த பின்னரும் 30 கிலோ மீற்றர் வேகத்தில் தான் யாழ்.நகருக்குள் நுழைய வேண்டும் என்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதனை மீறும் சாரதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் – என்றும் அவர் குறிப்பிட்டார்.

> ❝ ஏ–9 வீதியில் கைதடிப் பாலம் கடந்த பின்னரும், பலாலி வீதியில் ஆரிய குளம் கடந்த பின்னரும், பருத்தித் துறை வீதியில் ஆனைப்பந்தி கடந்த பின்னரும், காங்கேசன் துறை வீதியில் நாச்சிமார் கோயிலடி கடந்த பின்னரும், காரைநகர் வீதியில் சுடுகாட்டு ஆலடிச் சந்தி கடந்த பின்னரும், தீவகம் செயலாற்றும் பஸ்கள் பண்ணை கடந்த பின்னரும் 30 கிலோ மீற்றர் வேகத்தில்தான் யாழ்.நகருக்குள் நுழைய வேண்டும். ❞

இதன் பிரதிகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் சகல மாகாணங்களினதும் பஸ் டிப்போக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன என்று குலபாலச்செல்வம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இது மட்டுமன்றி பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்தை மையப்படுத்தி மாணவர்கள் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நிலையில் அவர்களை ஏற்றாமல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் எந்தவொரு பஸ்ஸும் செல்லக்கூடாது.

வீதியில் மாணவர்கள் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் போது அவர்களை ஏற்றாது சென்றால் அவர்களதும், மாணவர்களது பெற்றோர்களினதும் மனநிலையை சாரதிகள் எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? அவர்களதும் மாணவர்களதும் மனக்குமுறலை எவராவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? இது பற்றி ஒவ்வொரு சாரதியும் கவனம் செலுத்துங்கள் அப்போது தான் அதன் தார்ப்பரியம் உங்களுக்குப் புரியும்.

பாடசாலை மாணவர்கள் பஸ்களை மறிக்கும் பட்சத்தில் அவர்களைக் கட்டாயம் ஏற்றிச் செல்ல வேண்டும். இது தொடர்பில் இனிவரும் காலத்தில் எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்படாது. இனிவரும் காலங்களில் வீதிப் பரிசோதனை அணியினர் இவ்வாறான முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பஸ் குழுவினர்களுக்கு எதிராக இலங்கைப் போக்குவரத்துச் சபை விதிமுறைகளின்படி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்– என்று தெரிவித்துள்ளார்.

(ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்தகைக் காணிகளில் சிறுபோகம் செய்வதில் விவசாயிகளுக்குச் சிக்கல்

## காணி உரிமையாளர்களைக் குற்றஞ்சாட்டுகிறார் கிராம அலுவலர்

முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசத்தில் வாழும் விவசாயிகள், சிறுபோக பயிர்ச்செய்கைக்காக, குத்தகைக்குப் பிறரிடமிருந்து பெற்றுச் செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனினும் குறித்த காணிகளை குத்தகைக்கு வழங்குவோர், துணுக்காய்ப் பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, தமது காணிகளைத் துப்புரவு செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தலைப் பின்பற்றாததனால், இந்தநிலை உருவாகியுள்ளதாக அந்தப் பகுதி கிராம அலுவலர் கூறுகிறார்.

துணுக்காயில் பெரும்போக நெற்செய்கை முடிந்ததும், சிறுபோகச் செய்கை ஆரம்பமாகும். அதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால், தமக்குத் தண்ணீருக்கான பதிவும், உரமானியமும் வழங்கப்படுகின்றன. எனினும் தமக்கு அவை கிடைத்தாலும், பிறரிடமிருந்து பங்குகளைப் பெற்றுச் செய்வதற்கே, தண்ணீருக்கான மானியமும் உர மானியமும் கிடைப்பதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் வசித்த பலர் தற்போது, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களில் வசிக்கின்றனர். அவர்கள் சிறுபோகம், பெரும் போகம் என்பனவற்றை துணுக்காயிலுள்ள விவசாயிகளுக்கு ஒரு போகப் பயிர்ச்செய்கைக்கு என்ற அடிப்படையில் குத்தகைக்கு வழங்கி, அவர்களிடம் பணம் பெற்றுச் சென்றுவிடுவர். போகங்களின் உற்பத்தி, வருமானங்களை அந்தப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வோர் பெறுவர்.

இவ்வாறு பணத்துக்குப் பங்கு பெற்று சிறுபோகம் செய்ய இந்த முறை முயன்ற போதும், குறித்த பங்குக்கு எடுக்கப்படும் வயல் நிலங்களுக்கான தண்ணீர் மற்றும் உர மானியங்கள் இந்த முறை வழங்கப்படவில்லை.

இதனால் தாம் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதோடு, காலதாமதமாகினால் உற்பத்தி அறுவடைக்கு முன்னர் மாட்டுக்காலம் என்று கூறப்படுகின்ற மாடுகளைக் கட்டி வளர்க்காது, மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடும் காலம் நெருங்கிவிடும். அந்தக் காலம் வந்துவிட்டால் கால்நடைகள் சிறுபோக பயிர்ச்செய்கையை மேய்ந்து முடித்துவிடும். அதனால் உடனடியாகத் தண்ணீர் மற்றும் உர மானியம் வழங்கப்படவேண்டும் என்று துணுக்காய் விவசாயிகள் கோருகின்றனர்.

ஆனால் அந்த மானியங்களை வழங்காமைக்கு, குறித்த காணிகளை குத்தகைக்கு வழங்குபவர்களின் அசண்டையீனமே காரணம் என்று கூறுகின்றார் ஆலங்குளம் கிராம அலுவலர் அசோகன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது,

காணிகளை குத்தகைக்கு வழங்குபவர்களின் வீடுகள், வீட்டுக் காணிகள் என்பன பற்றைகளால் நிறைந்துள்ளன. அங்குள்ள மக்களின் நலன்கருதி அந்தக் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டபோதும், அவர்கள் அதனைச் செய்யவில்லை. இதனால் அங்குள்ள மக்களுக்கே பாதிப்பு ஏற்படுகிறது. அங்குள்ள மக்கள் சில தடவைகள் சிரமதானம் செய்திருந்தனர். எனினும் தற்போது மீண்டும் பற்றைக்காடுகளாக உள்ளன.

எனினும் அந்தக் காணிகளை அவற்றின் உரிமையாளர்கள் மூலமாகத் துப்புரவு செய்ய வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி வெளிமாவட்டங்களில் வசிக்கும் குறித்த மக்களுக்கு அது பற்றித் தெரிவிக்கப்பட்டு, அவர்களது காணிகளைத் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அப்படிச்செய்தால் தான் அவர்கள் குத்தகைக்கு வழங்கும்காணிகளுக்கு மானியம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் காணிகளை குத் தகைக்கு ஆயிரக்கணக்கில் பணம் பெற்றுச் சென்றுவிடுவார்கள். அந்தப் பணத்தில் ஒரு பகுதியைச் செலவழித்தாவது, அவர் கள் தங்களது காணிகளைத் துப்புரவு செய்யலாம். இவ்வாறு அவர்கள் தமது காணிகளை துப்புரவு செய்யாமையால், அந்தப் பகுதி மக்களே கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர். இதனால் தான் காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர், தமது வீட்டுக்காணி மற்றும் காணிகளைத் துப்புரவு செய்ய வேண்டுமெனத் தீர்மானமெடுக்கப்பட்டது. இதன்படி பிற மாவட்டங்களில் வசிக்கும் சிலர், அங்கு வந்து தமது காணிகளைத் துப்புரவு செய்கின்றனர் என்றார். (வ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சைவ குருமார்கள் அர்சகர் சபை செயலாளர் ஆகமகிரியா ஜோதி. துவஜாரோகன துரந்தனனர் பதிபசு பாசகர்

**சிவஸ்ரீ சதாசிவ குருக்கள்**
**மகாலிங்கக் குருக்கள்** (J.P)

(பிரதமகுரு யாழ் நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார்ஆலயம்)

அவர்களுக்கு இலங்கை சமாஜசேவா நலன்புரி சம் மேளத்தினால் 19.03.2016 அன்று அனுராதபுரத்தில் "**தேசமான்னிய**" என்னும் கௌரவபட்டம் வழங்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வ.வே. தியானந்தராசாக்குருக்கள்
பிரதம குரு தம்புருவளை சித்திவிநாயகர் ஆலயம் தும்பளை.
தும்பளை ஸ்ரீ வரதவிநாயகர் ஆலயம்.
வல்லை ஆஞ்சநேயர் ஆலயம்



**வரலாற்றுச் சிறப்பு மிக்க கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா**
**23.03.2016 புதன்கிழமை**



கரைச்சி புளியம்பொக்கணை அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் பண்டைய மரபிற்கு அமைய மீசாலை புத்தூர் சந்தியில் இருந்து பண்டம் மாட்டு வண்டிகளில் எடுத்து வரப்பட்டு 23.03.2016 ஆம் திகதி பகலும் இரவும் பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும்.

**சகல இடங்களில் இருந்தும் பஸ் போக்குவரத்து ஒழுங்குகள், பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**தயவு செய்து தங்களின் பாதுகாப்புக் கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளவும்.**

**ஆலயபரிபாலன சபையினர்**
**புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மார்ச் 21
2015 ஆம் ஆண்டுக்கான ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வுக்கு உட்படுத்த எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதனடிப்படையில் பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
தனியார் விண்ணப்பதாரிகளுக்கான மாதிரி விண்ணப்பங்களை எதிர்வரும் நாள்களில் ஊடகங்கள் ஊடாக வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(வ)

## காணவில்லை



**சின்னத்துரை இராசமணி**
**65 வயது** உடைய இவர் கடந்த **(18.03.2016) வெள்ளிக்கிழமை** காலை 5 மணியளவில் வியாபாரத்துக்கென சந்தைக்குச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் முகவரி அல்லது தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**க.உதயகுமாரி** -(மகள் - குண்டு)
**கந்தசுவாமி கோயிலடி,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**
**077 101 1423,**
**077 071 3550**

## ST.JOHN'S COLLEGE,JAFFNA
## CHUNDUKULI GIRLS COLLEGE, JAFFNA
## ADMISSION - 2017 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2017

01. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து **02.03.2016 முதல் 24.03.2016** வரை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
இ. விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் **24.03.2016 வியாழக்கிழமை.** அந்தத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ( Photo copy ) இணைக்கப்பட வேண்டும்.
03. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் முற்பகல் **9.00** மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்துக்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா **1000.00**
5. **வயதெல்லைகள் :**
அ. **தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2011 இற்கும் 31.01.2012** இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. **தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2008 இல்** அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ. **தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2006 இல்** அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. **தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2002 இல்** அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. **தரம் 12** (A/L 2019 Batch) விண்ணப்பதாரி **01.02.2000 இல் அல்லது** அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. **தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 15.10.2016 சனிக்கிழமை காலை 8 மணிக்கு** ஆரம்பமாகும்.

**குறிப்பு:**
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கும் (A/L 2019 Batch) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ் மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் , கலை, தொழிநுட்பவியல்) Londan A/L 2017 / 2018 இற்கும் விண்ணப்பப் படிவங்கள் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை **02.01.2017 திங்கட்கிழமை காலை 8.30** மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் **09.01.2017** ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கைநெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L/தமிழ் /ஆங்கில மொழி மூலம் 2018 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்கள்.** (சி/29871)(11,18)

# பெறுமதி சேர் வரியை ஏப்ரலில் நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

## நிதி ராஜாங்க அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21
ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் விதமாக அதிகரிக்கப்பட்டுள்ள 15 வீதமான பெறுமதி சேர் வரியை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று நிதி ராஜாங்க அமைச்சரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.
அதே போன்று அந்தத் திகதியிலிருந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் நூற்றுக்கு இரண்டு வீதமான வரியும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆனாலும் சீனி, பருப்பு போன்ற பத்து அத்தியாவசியப் பொருள்கள் மீதான பெறுமதி சேர் வரி விதிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அந்த பத்து அத்தியாவசியப் பொருள்களும் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.
கடந்த 16 ஆம் திக்தி அரச தகவல்கள் திணைக்களத்தில் இடம் பெற்றிருந்த ஊடகச் சந்திப்பில் வைத்தே ராஜாங்க அமைச்சர் இவற்றை வெளிப்படுத்தியிருந்தார்.
ஒரு சில தொழில் துறையினர் தனியார் வைத்தியசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனிப்பட்ட ரீதியில் 'ரியூசன்' வகுப்புக்களை நடத்திச் செல்வோர் பெருமளவு பணத்தை சம்பாதித்துக் கொள்வதால் அவர்களுக்கும் வரிகள் விதிக்கப்படவுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.
நூற்றுக்கு 5.8 வீதமாக இருந்துள்ள வரவு செலவுத்திட்ட இடைவெளி,நூற்றுக்கு5.4ஆகக்கொண்டு வரப்படுமெனவும் அது 2020 ஆம் ஆண்டால் நூற்றுக்கு 3 வீதம் வரையில் குறைத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
தற்போது 6.6 மில்லியன் டொலராக நிலவும் வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பானது அடுத்து வரும் நான்கு மாதங்களுக்குப் போதுமானது எனவும், அத்தோடு இன்னும் மூன்று நான்கு மாதங்களில் சர்வதேச நாணயநிதியத் திடமிருந்து இரண்டு மூன்று ஆண்டுகளில் செலுத்தும் முறைமையில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்படவுள்ளன என்றும் அமைச்சர் அமுனுகம தெரிவித்தார்.
இவற்றுக்கு மேலதிகமாக அம்பாந்தோட்டையில் 100 சீனத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள சீன முதலீடுகள் வலய மொன்று உருவாக்கப்படும் என்றும் இந்திய முதலீடுகள் வலயமொன்றுக்கும் அங்கு இடவாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-22)

# ஜெனிவா பயணிக்கின்றது ஒன்றிணைந்த எதிர்க்கட்சி

## நல்லாட்சி அரசுக்கு எதிராக முறையிட

கொழும்பு, மார்ச் 21
நல்லாட்சி அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காக ஜெனிவாவில் அமைந்துள்ள அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்துக்கு செல்லவுள்ளனர் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.
எதிர்வரும் 31 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினருக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற அடக்கு முறைகள் மற்றும் நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படுகின்ற ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் முறைப்பாடு செய்யவுள்ளனர்.
ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் மீது அரசு தொடர்ந்தும் பல நெருக்கடிகளை முன்னெடுக்கின்றது. தொடர்ச்சியாக அரசால் முன்னெடுக்கப்படும் நெருக்கடிகளை ஏற்றுக் கொள்ள முடியாமல் நல்லாட்சி அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காக ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் கூட்டாக ஜெனீவா செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஜ-5)

# பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், பளை(வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக பொருத்த மானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி: களஞ்சிய முகாமையாளர் 208/13

**சம்பள அளவுத்திட்டம் :** 13515-110x10- 120x10-15815

அ. கல்வித்தகைமை:- கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/ க.பொ.த (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்கள/ தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி. சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும், ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபா 20.00 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பப்படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்,ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 04.04.2016 ஆம் திகதிக்கு முன்னதாக " **தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், புலோப்பளை வீதி, பளை"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

19.03.2016

**தலைவர்**
**பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ. சங்கம்**
**பளை**

# ஜப்பானில் மகிந்த ஆதரவு கூட்டம்

கொழும்பு, மார்ச் 21
ஜப்பானில் வசித்து வரும் சிங்களவர்கள் ஒழுங்கு செய்த 'ஜப்பான் நாட்டில் மகிந்த ஒன்றிணைவு' என்ற தொனிப் பொருளில் நேற்றுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.
இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ரோகித்த அபே குணவர்தன, விமல் வீரவன்ச ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.
இந்தக் கூட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச கலந்துகொள்ளவிருந்த போதிலும் வேறு ஒரு காரணமாக அவர் ஜப்பான் செல்லவில்லையென்றுஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

நேற்றுமுன்தினம் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் எமக்குக் கிடைத்த பாடசாலை ரீதியான முடிவுகள்

**யாழ்ப்பாணம்**
**இந்து மகளிர் கல்லூரி**

பா.பரணிதா 9ஏ, ப.தாரகா 9ஏ(ஆங்கில மொழிமூலம்), ஜெ.சாம்பவி 9ஏ (ஆங்கில மொழி மூலம்), பி.தமிழினி 9ஏ, ந.கம்ஷாயினி 8ஏ,சி, கை.கிஷாந்தினி 8ஏ,சி, சி.கோவின்யா 8ஏ,சி, ப.ஜீவிதா 8ஏ,எஸ், சி.மதுஷா 8ஏ,எஸ், வி.கௌஷிகா 7ஏ,2பி, தி.தமிழினி 7ஏ,2பி, பா.ஆர்த்தனா 7ஏ,பி,சி, சோ.மனஸ்வினி 7ஏ,பி,சி, செ.நிஷாந்தி 7ஏ,பி,சி, அ.பரணிதா 7ஏ,பி,சி, சி.சுகந்தினி 7ஏ,பி,சி, பா.அஜந்தா 7ஏ,பி,எஸ், இ.தர்சனா 7ஏ,பி,எஸ், அ.நர்மதா 7ஏ,பி,எஸ், இ.சாய் மீரா 7ஏ,பி,எஸ், க.தாட்சாயினி 7ஏ,சி,எஸ்.

**இராமநாதன் கல்லூரி**

ச.வாகீசா 7ஏ,பி,2சி, கு.குண சர்மிலா 6ஏ,3பி, மோ.லட்சிகா 6ஏ,3பி, கி.கம்ஷாயினி 6ஏ,2பி,சி, க.சயித்தா 5ஏ,3பி,சி, ஞா.சயந்திகா 5ஏ,2பி,2சி, பி.கௌதமி 4ஏ,4பி,எஸ், ஜெ.டிலக்ஷனா 4ஏ,3பி,2சி, சு.ஜனனி 4ஏ,பி,3சி,எஸ், ச.கேதுஷா 4ஏ,பி,2சி,2எஸ், க.மதனப்பிரியா 4ஏ,பி,3சி, ஜெ.விருசிகா 3ஏ,2பி,3சி,எஸ், வ.வர்சனா 3ஏ,2பி,சி,3எஸ், கி.டிலக்சனா 2ஏ,4பி,3சி, வி.விதுஷா 2ஏ,3பி,4சி, ந.சானுஜா 2ஏ,2பி,3சி,2எஸ், ஆ.கௌசல்யா 2ஏ,2பி,5சி, வி.சஜித்தா 2ஏ,5சி,எஸ், ஜீ.நிவேனிகா 2ஏ,5சி,எஸ், பி.கஜேந்தினி 2ஏ,பி,4சி,2எஸ், ஜீ.தனுசியா 2ஏ,2பி,சி,4எஸ், ச.சஜிக்கா 2ஏ,பி,4சி,எஸ், நி.சரண்யா ஏ,2பி,2சி,4எஸ், சி.நிந்துஜா ஏ,7சி,எஸ், றொ.மதுரா ஏ,பி,2சி,4எஸ், செ.தெனிஸ்ரா ஏ,2பி, 2சி,4எஸ், த.தனுசியா ஏ,5சி,2எஸ், வி.கஜனி ஏ,3பி,3சி,எஸ், ர.கார்த்திகா ஏ,3சி,3எஸ்

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

தே.நிவேதிகா, ச.மதுசிகா, கு.தர்மினி மூவருக்கும் 9ஏ, சி.சஞ்சிதா 8ஏ, ரா.சயந்தினி 7ஏ,2பி

**ஹாட்லிக் கல்லூரி**

கே.அனுசன், பி.கஜன், பி.தயாபரன், ஆர்.விருர்ஷ்னன், வை.நிறோஜன்,எஸ்.நிருஷாந், ரி.அபினேஷ், எஸ்.டசிகரன், ஜே.கரிகரன், ஜி.ஸ்ரீபரத் வியசர்மா, பி.பகிசன், ஜே.நிலவன் ஆகியோருக்கு 9ஏ, எஸ்.அசோக்குமார், ரி.கோணேசன், ஜே.மிதுர்சன், எஸ்.சன்ஜித், எம்.அனோஜன், ஆர்.ஜங்கரன், என்.ரசாந்தன், கே.அனுசாந், வி.யதுசன், எஸ்.யதுர்சன், கே.கலைவர்ணன், என்.கரன்ராஜ், எஸ்.கோபிதன், ரி.மனோஜ்பிரபா, எஸ்.சிவதர்சன், கே.உஷாந்தன், ஜே.அனிருத்தனன், ஏ.சுமன்ராஜ், ஆர்.சாருசன் ஆகியோருக்கு 8ஏ, 12 மாணவர்களுக்கு 7ஏ , 7 மாணவர்களுக்கு 6 ஏ.

**நெல்லியடி**
**மத்திய கல்லூரி**

சி.லக்சிகா 8ஏ,பி (ஆங்கில மொழி மூலம்), இ.சோபிகா 8ஏ,சி (ஆங்கிலமொழி மூலம்), எஸ்.சுபா 8ஏ,சி(ஆங்கில மொழி மூலம்), கு.செந்தில் குமரன் 7ஏ,2பி, எஸ்.நிரோசன் 7ஏ,பி,சி, சி.நிதர்சனா 7ஏ,பி,எஸ், பி.பிரவீன் 6ஏ,3பி,

**முள்ளியவளை**
**வித்தியானந்தக் கல்லூரி**

கிசோக் 6ஏ,3பி, எஸ்.ரம்யா 6ஏ,2பி,சி, கே.ரம்யா 6ஏ,பி,2சி, எஸ்.கிஷானி 6ஏ,2பி,எஸ்.

**ஸ்கந்தவரோதயா கல்லூரி**

வி.தனுஜன் 9ஏ, அ.நிருஷா 8ஏ,பி, யோ.தட்சன் 8ஏ,சி, கு.கீர்த்தனா 8ஏ,சி, கு.டிலக்சன் 7ஏ,2பி, ச.அஜந்தன் 6ஏ,2பி,சி, கி.நிருத்திகா 6ஏ,2பி,சி, வி.மதுஷா 6ஏ,பி,2சி, ர.சோபிதா 5ஏ,3பி,எஸ், த.திவியா 4ஏ,பி,3சி,எஸ், ம.நிவேதா 3ஏ,4பி,2சி, ப.துவாரகா 3ஏ,2பி, 3சி,எஸ், க.சஞ்சிதன் 3ஏ,2பி, 2சி,2எஸ்.

**கிளிநொச்சி**
**இந்துக்கல்லூரி**

அ.பிரியங்கா 9ஏ, தி.மைதிலி 9ஏ, த.திலக்சனா 8ஏ பி, சு.அக்சனா 7ஏ,2பி, அ.விதுஷன் 6ஏ,2பி சி, வி.அகிந்தினி 6ஏ,2பி, க.பானுஜன் 3ஏ,4பி,2சி (ஐ-21)

த.சுவப்னா 9ஏ, சி.கபிநயன், சி.யுகப்பிரியா, தீ.கம்ஷவி மூவருக்கும் 8ஏ,சி, வி.தனோசன், தி.தினுசிகா, ப.சோபிகா மூவருக்கும் 7ஏ,2பி, பா.கவிசாளினி 7ஏ,பி,சி, உ.நர்த்தனா,பொ.கம்ஷா சா.கிசோபனா மூவருக்கும் 6ஏ,2பி,சி, வி.வினுஷா 6ஏ,பி,2சி, கு.உமைநந்தி 5ஏ,4பி.

(ஐ-102)

**வல்வை மகளிர் கல்லூரி**

சி. லவேணியா, பி.பகீரதி ஆகியோர் 8ஏ,பி, பா.கிருபா 8ஏ,சி, க.சைலேந்தினி 7ஏ,2பி, க.அஜந்தினி 6ஏ,3பி, தி.டினோஜா 6ஏ, 2பி,சி, க.வைதேகி 6ஏ,2பி,சி, ச. தேவி கௌரி 5ஏ,3பி,சி, ந. தமிழினி 5ஏ,2பி,2சி.

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கொலைச் சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ற)

ENG/TAMIL HOME VISIT CLASSES
HOME VISIT - PERSONAL, GROUP
ACCOUNTING - O/L, A/L
ENG.LANG - ANY GRADE
ENG.LIT - O/L ARTS SUBJECT
077 331 6402

IELTS UK KU Education
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A,G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

தேவை
• DTP, டிசைனிங் தெரிந்த ஆள்கள் வேலைக்குத் தேவை.
• தோட்ட வேலைக்கும் ஆள்கள் தேவை.
தொடர்பு: 077 258 5392


இன்று சுன்னாகம் ஐயனார் சாமி சப்பரத்தில் எழுந்தருளி காட்சி கொடுக்கிறார்
சாமியே சரணம் என்றால் மனச்சாந்தி
கிடைக்கும் ஐயப்பா
தாழையடி கரி, கரி, ஐயப்பனை
நாடித் தேடி வாருங்கள்
ஐயப்பனே வருக, மாணிக்க மணியே வருக
இடர் தீர்க்க சப்பரத்தில் எழுந்தருளி வர வேண்டும் ஐயப்பா
உனது முகம் பார்த்து அழுது தொழ வேண்டும்
கேட்ட வரம் தந்திடுவார்
சாமியே சரணம் ஐயப்பா
சி.சகுந்தலாதேவி
தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர்,
வங்களா ஒழுங்கை, மல்லாகம்.
(70039)(11,17,18)


அழைப்பு
நாயன்மார்களால் திருமுறைப்பாடல் பாடப்பெற்ற
ஸ்ரீ கௌரிஅம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப் பெருமான்
அருள்பாலிக்கும் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில்
இந்திய அரசின் நிதியுதவியுடன் நிகழ்ந்துவரும்
ஆலயத்தின் உட்பிரகார மண்டபத்திருப்பணியில் கருங்கல் பொருத்தும் வேலைகள்
நிகழும் மன்மத வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை (23-03-2016)
பங்குனி உத்தர நன்னாளில்
அமிர்தசித்தயோகமும் பௌர்ணமித் திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய
காலை 11:00 மணிமுதல் 12:00 மணிவரையுள்ள சுபவேளையில்
இறைவழிபாட்டுடன் ஆரம்பிக்கப்படத் திருவருள் கைகூடியுள்ளது.
இப்புனித வேலைகளை
வடமாகாண முதலமைச்சர் மாண்புமிகு நீதியரசர், சத்தியவித்தகர்
சி. வி. விக்னேஸ்வரன் அவர்களும்
யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவராலயத்தின் துணை உயர்ஸ்தானிகர்
உயர்திரு. A. நடராஜன் அவர்களும்
ஆரம்பித்து வைப்பார்கள்.
சிறப்பு அதிதிகள் :
திரு. வே. சிவஞானசோதி
செயலாளர் - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு
திரு. எம். வை. எஸ். தேசப்பிரிய
மாவட்டச் செயலாளர் - மன்னார் மாவட்டம்
இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு
எம்பெருமான் திருவருளைப் பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
மா. தவயோகராஜா, தலைவர், ஆலய அறங்காவலர் சபை
கந்தையா நீலகண்டன், தலைவர், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
எஸ். இராகவன், அ. திருநாவுக்கரசு, இணைச் செயலாளர்கள், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
மன்மத வருடம் பங்குனித்திங்கள் 04ம் நாள்

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைப்பேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
Marcg 26 சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் 26, 27, 28, 29 ஆகிய நான்கு தினங்களிள்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால், ஆசன முன்பதிவு செய்யவும்.
பெறுமதியான Certificate வழங்கப்படும்
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியளித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆசன முன் பதிவுக் கட்டணம் 1000/-
பாடநெறி கட்டணம் 11,500/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
iCS Study Overseas 77, Clock Tower Road, Jaffna
பதிவுகளுக்கு 077-6131358

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம்
சித்தன்கேணியைச் சேர்ந்த
சத்தியசேகரன் வதனா
தம்பதிகளின் புதல்வி
திருமதி
விஜயகுமார்
பபிலா
அவர்கள் (20.03.2016)
ஞாயிற்றுக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தின்
வியாபார முகாமைத்துவமாணி (BBM)
பட்டத்தைப்பெற்றுக் கொண்டார். இவரை மேலும் பல பட்டங்கள் பெற மனமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: பெற்றோர், கணவர் (விஜயகுமார்)
பிள்ளைகள் (அபிஷ்னா, அத்விகன்)
தாத்தா, அம்மம்மா,மாமாமார் (டென்மார்க்)
சித்தப்பா, சித்தி, தங்கைகள் (நோர்வே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ஒருவர் சாவு

காத்தான்குடி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 24 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளானவர் ஆரையம்பதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதன் பின் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கல்முனையிலிருந்து ஏறாவூரை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (ற)

79 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர்
சந்திரசேகரம் நடேசபிள்ளை
(ஓய்வுநிலை அதிபர் - யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

தோற்றம்
21.03.1937

மறைவு
06.06.2010

அப்பா! இன்று உங்கள் பிறந்தநாள்
எங்களுடன் நீங்கள் இல்லையே!
நெஞ்சு பதறுதே உங்களைக் காணமுடியாது
எம் உயிரில் கலந்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவு எங்களுக்கு தாங்க முடியவில்லையே!
எங்களுடன் சேர்ந்து வாழ
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து வாருங்கள் அப்பா...!

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் நீங்கா நினைவுடன்..
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி





மலர்வு
02 . 09 . 1929

உதிர்வு
20 . 02 . 2016

கந்தையா நாகலிங்கம்

அன்புத் தெய்வமே அழகான
எங்கள் குடும்பத்து ஆலமரமே
உங்கள் நிழல்களில் இன்றுவரை
நிம்மதியாய் வாழ்ந்து வந்தோம்
உங்கள் : அன்பில் பிரிவு இல்லை
நடையில் தடுமாற்றம் இல்லை
பாசத்தில் குறைவு இல்லை
பேச்சில் பொய் இல்லை
ஆசைகள் பெரிது இல்லை
உறவுகளை விட்டுக்கொடுப்பது இல்லை
கோபம் வருவது இல்லை
ஆடம்பரம் பிடிப்பது இல்லை
வாக்கு மாறுவது இல்லை
மனம் நோக நடப்பது இல்லை
உறவுகள் கடைசிவரை கைவிடவில்லை
உங்களைப் போல் இன்னொருவர் இல்லை
நல்ல கல்வியைக் கற்க வேண்டும்
உழைப்பை மதிக்க வேண்டும்
ஏழைகளுக்கு உதவ வேண்டும்
நல்ல உறவுகளை நேசிக்க வேண்டும்
என்று எப்போதும் சொல்வீர்கள்...
என்மேல் அன்பான உறவுகள்
அருகில் இருக்க எனது உயிர்
பிரிய வேண்டும் என்ற உங்கள்
ஆசையும் நிறைவேறியது!
நீங்கள் மீண்டும் வந்து எங்கள்
குடும்பத்தில் பிறக்க வேண்டும்
கவிதைக்குப் பொய் எங்கள் குல
தெய்வத்துக்கு மெய் அழகு

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.
உங்கள் பிரிவால் வாடும்...

இல. 2, பிறவுண்றோட்,
யாழ்ப்பாணம்.
077 312 7095

மனைவி,மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

மகிந்த தலைமையில் இடம்பெற்ற கூட்டு எதிர்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்கா தெரிவித்துள்ள நிலையிலேயே, மகிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, கூட்டத்தில்கலந்துகொண்ட எவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையோ விமர்சிக்கவில்லை.

இதனால் கூட்டு எதிர்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ-5)

# பண்பாட்டு அடையாளத்தை பேணுவோராக கல்வியில் உயர்ச்சி வேண்டும் மாணவர்கள்

## வடக்கு மாகாண உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு,மார்ச் 21

மண்ணின் மொழி, கலை, பண்பாட்டுஅடையாளங்களைப்பேணும் மாணவர்களாக எமது மண்ணைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியில் உயர்ச்சியைக் காணவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப் பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

விசுவமடு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற ஒலிபெருக்கிக் கருவிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் 2015ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒரு லட்சம் ரூபா முல்லை. விசுவமடு மகா வித்தியாலயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒதுக்கீட்டில் பாடசாலையின் வேண்டுகோளுக்கமைய ஒலிபெருக்கிக் கருவிகளை வழங்கும் நிகழ்வானது கடந்த புதன் கிழமை பாடசாலையில் அதிபர் அன்ரன் குலதாஸ் தலைமையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு கருவிகளை வழங்கிய வடமாகாணசபைஉறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்ததாவது:-

புலமைப்பரிசில் பெறுபேறுகளில் விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றது. எமது மண்ணின் மொழியையும், கலையையும் பண்பாட்டு அடையாளங்களையும் காக்கும் மாணவர்களாக கல்வியில் சிறந்து சமூகத்தை உயர்விக்கவேண்டும் என்பதே எமது விருப்பு - என்றார். (ற-ஜ-21)

## பிக்குகளுக்கு எதிராக சூழ்ச்சி ஏதும் இல்லை

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

பிக்குகளுக்கோ, பௌத்தர்களுக்கோ எதிராக எந்தவித சூழ்ச்சிகளும் இடம்பெறவில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பல்வேறு குற்றசாட்டுக்கள் தொடர்பில் பிக்குமார் கைது செய்யப்படுவது மற்றும் விளக்கமறியலில் வைக்கப்படுவது தொடர்பாக சிலர் போலியான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர் என்று அந்தக் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

என்றாலும் பௌத்தர் அல்லாத ஒருவரின் ஊழல் மற்றும் முறைகேடுகளை மறைப்பதற்காக ஏதோ ஒரு சக்தி செயற்படுகின்றது என்று ஓமல்பே சோபித தேரர் பத்தரமுல்லை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார். (ற-5)



தவக்காலத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை பாசையூர் அந்தோனியார் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட வீதிச் சிலுவைப்பாதை யாத்திரை மணியம் தோட்டம் கர்த்தர் ஆலயத்தைச் சென்றடைந்து திருப்பலி வழிபாடுகள் இடம்பெற்றன. இயேசுவின் பாடுகள், சாவு என்பவற்றை சிந்திக்கும் தியானங்கள் வீதிகளில் நடைபெற்றன. (ற-ஜ-135)

## புளியம்பொக்கணைக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் பூசை வழிபாட்டை முன்னிட்டு அடியவர்கள் சிரமமின்றி வழிபாட்டுக்குச் செல்வதற்காக, விசேட பஸ் வசதிகளை வடமாகாண இ.போ.ச யாழ். சாலை மேற்கொண்டுள்ளது என சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் புதன் கிழமை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து பயணிகளின் வருகைக்கு ஏற்ப விசேட பஸ்கள் சேவையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கிராமப் புறங்களில் இருந்து புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இ.போ. சாலையில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்துக்கு பஸ் அனுப்பப்பட்டு ஆலயம் சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் கையகப்படுத்திய காணியை மீள பெற்றுத் தருக

## வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 21
பாதுகாப்புப் படையினரால் ஆக் கிரமிக்கப்பட்டுள்ள பண்டத் தரிப்பு காடாப்புலத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமான 40 பரப் புக்காணியை மீட்டுத் தருமாறு வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் வடக்கு மாகாண முத லமைச்சரைக் கோரியுள்ளார்.
அதன்மூலம் திண்மக் கழிவ கற்றலைச் சீராக மேற்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
வலி. தென்மேற்குப் பிரதேசத்தி லுள்ள பிரதேசசபைக்குச் சொந்த மான காக்கை தீவுப்பகுதியில் , யாழ்.மாநகர சபையால் கட்டுப் பாடின்றித் திண்மக் கழிவுகளும், மலக்கழிவுகளும் கொட்டப் படுகின்றன. அதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதுடன், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் வயல் நிலங்களும் மேய்ச்சல் தரை களும் குடிதண்ணீர்க் கிணறு களும் மாசடைந்துள்ளன.
இந்த நிலை குறித்து சம்பந் தப் பட்டவர்களுக்குச் சுட்டிக்காட்டிய போதிலும், எதுவித முன்னேற் றமும் கிடைக்கவில்லை அயற் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல போராட்டங்கள் நடத்திய போதும் கழிவு கொட்டப்படு வதைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. இந்த நிலையில் பண் டத்தரிப்பு காடாப் புலத்திலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் திண்மக்கழிவுகள் கொட்டுவதற்கு வசதியாக மேற் படி காணி சுற்று மதில் கட்டித் துப் புரவு செய்யப்பட்ட போது அந்தக் காணியை பாதுகாப்புப் படை யினர் எதுவித அறிவித்தலும் இன்றி ஆக்கிரமித்துள்ளனர். இதனால் அந்தத் திட்டத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.
எனவே, மேற்படி காணியில் திண் மக்கழிவுகளைக் கொட்டுவதற்கு வசதியாக பாதுகாப்புப் படையி னரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான காணியை மீட்டுத்தர வேண்டும் என்று செயலாளர் முதலமைச்ச ரைக் கோரியுள்ளார். (ற-ஐ-115)

> “ பண்டத்தரிப்பு காடாப் புலத்தி லுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் திண்மக்கழிவு கள் கொட்டுவ தற்கு வசதியாக குறித்த காணி சுற்று மதில் கட்டித் துப்புரவு செய் யப்பட்ட போது அந்தக் காணியை பாது காப்புப் படையினர் எதுவித அறிவித்தலும் இன்றி ஆக்கிரமித்துள்ளனர். ”

## சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
'பெண்கள் சொந்தக்காலில் நிற்கவேண்டும்' என்னும் கருப்பொருளில்பெண்களின் குரல் நடத்தும் சர்வதேச மக ளிர் தினம் நாளை செவ் வாய்க்கிழமை யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண முத லமைச்சர் க.வி.விக்னேஸ்வ ரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட் ணமும் கலந்து கொள்ள வுள்ளனர்.
நிகழ்வில் பெண்களின் குரல் சஞ்சிகை வெளியிடப்படவுள் ளது. (ற-ஐ-ரி)

## மாடியிலிருந்து குதித்ததால் நோயாளியின் கால் முறிவு

கிளிநொச்சி,மார்ச். 21
கிளிநொச்சி மாவட்ட பொது மருத் துவமனையில் உள நல சிகிச் சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் வைத்திய சாலையின் மாடியில் இருந்து குதித்ததில் அவரது கால் முறிவடைந்தது. நோயாளி தெய்வாதீனமாக உயிர் தப்பி யுள்ளார்.
குறித்த நோயாளி தற்கொலை செய்யும் நோக்கிலேயே மாடி யில் இருந்து குதித்துள்ளார் என்றும், அவர் ஏற்கனவே இரண்டு தடவைகள் முயற்சித் துள்ளார் என்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித் தன.
உள நல சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த குறித்த நோயாளி மன நல விடுதியில் இருந்து மாடியில் ஏறிக் குதித் துள்ளார். இதன் போதே அவரு டைய கால் முறிந்துள்ளது. இதனை அடுத்து வைத்திய சாலையில் உடனடியாகவே நோயாளிக்கான சிகிச்சை வழங் கப்பட்டது. சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பா ளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,
குறித்த நோயாளி மதிய வேளையில் வேறு விடுதிக்குள் பிரவேசித்து, அதன் வழியாக குதித்த வேளையில் ஓர் காலில் பாதிப்பேற்பட்ட போதும், வைத்தியசாலைப் பணியாளர் கள் உடன் அவதானித்தமை யால் பெரும் பாதிப்பின்றி காப் பாற்றப்பட்டார்.
குறித்த நோயாளி இதற்கு முன்னரும் இரு தடவைகள் உயிரை மாய்க்க முயன்றுள் ளார் என்றார். (ற-ஐ-101)

## காதலிப்பதாக சிறுமி கடத்தல் இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிறுமியை காதலிப்ப தாகக் கூறி கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்த பருத்தித் துறையைச் சேர்ந்த 23 வயது டைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத் தித்துறை பொலிஸார் தெரிவித் தனர்.
குறித்த சிறுமி காணாமற் போனமை தொடர்பில் சிறுமி யின் பெற்றோரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய் யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து கடந்த சில நாள் களாகத் தேடுதல் நடத்தப்பட்டு வந்த நிலையிலே சிறுமி மீட்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார். தெரிவித்தனர். குறித்த சந்தேக நபரும் சிறுமியும் பருத்தித் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ளனர் என்று பருத்தித்துறை குற்றப்புல னாய்வுப் பிரிவில் பணி புரியும் தமிழ்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிடைத்த தகவலை அடுத்து, குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதோடு சிறுமி மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் இருவரும் மேலதிக விசாரணையின் பொருட்டு கோப்பாய் பொலிசாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளனர் என்றும், சிறுமியைக் கடத்திய குற்றச் சாட் டில் கைதான இளைஞன் நீதி வானிடம் முற்படுத்தப்பட்ட போது அவரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்றும் தெரி விக்கப்பட்டது. (ற-ஐ-4,109)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 21
மூளாய் முத்துக்குமாரசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 14 ஆம்திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து தி ருவிழாக்கள் நடைபெற்று வரு கின்றன. நாளை செவ் வாய்க் கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ற-ஐ-ரி)

## பங்குனி உத்தர பொங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
மூளாய் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் நாளை மறுதினம் புதன் கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்ப மாகி, மாலை 4 மணிக்கு அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் நடைபெற்று பொங் கல் திருவிழா இரவு 8 மணிய ள வில் நிறைவுபெறும். (ற-ஐ-ரி)

## முஸ்லிம் அமைச்சரின் ஆதரவாளருக்கு சமுர்த்தி வங்கியூடாக நிதி பரிமாற்றம்

### முள்ளியவளை சமுர்த்திப் பயனாளிகள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மார்ச் 21
கடந்த நாடாளுமன்றத் தேர்த லில் முஸ்லிம் அமைச்சர் ஒரு வருக்கு ஆதரவாகச் செயற்பட்ட வர்களுக்கு முள்ளியவளை சமுர்த்தி வங்கியூடாக 10 ஆயி ரம் தொடக்கம் 16 ஆயிரம் ரூபா வரையான பணம் வழங்கப் பட்டுள்ளது என்று முள்ளிய வளை சமுர்த்திப் பயனாளிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
இவ்வாறு பணம் வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தரிடம் கேட்ட போது, இது சமுர்த்திப் பணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என் றும் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர், இது வாழ்வாதாரக் கொடுப்பனவாக அந்தக் குறிப்பிட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது என்று தெரிவித் தார்.
முள்ளியவளை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் குறிப்பிட்ட சில பயனாளிகளுக்கு முள்ளியவளை சமுர்த்தி வங்கி ஊடாக மாதாந்த சமுர்த்திக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக கடந்த 17 ஆம் திகதி 10 ஆயிரம் ரூபா முதல் 16 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது. இவ் வாறு குறிப்பிட்ட சிலருக்கு மாத் திரம் நிதி உதவி வழங்குவது தொடர்பில் ஏனைய சமுர்த்திப் பயனாளிகள் சமுர்த்தி உத்தி யோகத்தரிடம் கேள்வி எழுப்பி யுள்ளனர்.
அதற்குப் பதிலளித்த சமுர்த்தி உத்தியோகத்தர் இது சமுர்த்தி நிதி அல்ல. முஸ்லிம் அமைச் சர் ஒருவரால் வழங்கப்பட்ட நிதி. கடந்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலின் போது அவருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர் களுக்கு வழங்கப்பட்டது என்று கூறினார் என்று பயனாளிகள் தெரிவித்தனர்.
சமுர்த்தி நிதி இல்லையாயின், எந்த வகையில் சமுர்த்தி வங்கி யூடாக இந்த நிதியை வழங்க முடியும். இது தொடர்பாக உரிய வர்கள் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். உரிய முறை யில் விசாரணைகளை மேற் கொண்டால் இதன் உண்மை நிலை புரியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
அத்துடன் இது தொடர்பில் முல் லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் [illegible] னிடம் பயனாளிகள் முறைப் பாடு செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தரின் கருத்தை அறிந்து கொள்வ தற்காக அவரது கைத்தொலை பேசி இலக்கத்துக்கு பலமுறை அழைப்பு எடுத்த போதும் அவர் பதிலளிக்கவில்லை.
இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணை யாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, எல்லா சமுர்த்திப் பயனாளிகளுக்கும், எல்லா உதவிகளும் வழங்கப்படுவ தில்லை. மாறுபட்ட தொகையில் நிதி வழங்கப்படுவதற்கு அவர் களது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை காரணமாகும். அவர்களது வாழ்வாதார உத வித்தொகையே வழங்கப்பட்டுள் ளது - என்றார். (ற-ஐ-5-21-102)

## மணவாளக் கோலத் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச். 21
வடஅல்வை குச்சம் ஞான வைரவர் ஆலய மணவா ளக்கோலத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடை பெறவுள்ளது. காலை 5 மணிக்கு யாகபூசைகள் ஆரம் பமாகி காலை 8 மணிக்கு சுவாமி கிராம ஊர்வலம் இடம் பெறும். (ற-ஐ-ரி5)

## திருக்குட பெருஞ்சாந்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச். 21
அல்வாய் ஸ்ரீ லக்சுமி நாரா யண மனோன்மணி அம்பாள் ஆலயத் திருக்குடப் பெருஞ் சாந்தி விழா நாளை மறுதினம் புன்கிழமை நடைபெறவுள் ளது. இதனை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ற-ஐ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

### கிளி. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 21

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உணவுவகைகளைக்கையாளுபவர்கள், உணவுச் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது போனால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம். ஜெயராசா தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் கண்டாவளை புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ள உற்சவத்தை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டுஉணவுகையாள்வோருக்கான மருத்துவப் பரிசீலனை அறிக்கை வழங்கப்படுவதுடன், தனிநபர் சுகாதாரம் மற்றும் உணவு கையாள்வோருக்கான சீருடை தொடர்பான விழிப்புணர்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவு கையாள்வோர் மற்றும் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப்பிரிவுகளில்இருந்து வருகை தரும் உணவு கையாள்வோர்தமது உணவு உற்பத்தி நிலையத்தின் வியாபார உரிமம், மருத்துவ பரிசீலனை அறிக்கை என்பனவற்றைத்தம்வசம் வைத்திருக்க வேண்டும். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த விடயத்தில் இருந்து மீறுவோர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-21)

## இராணுவ முகாமிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

### முள்ளியவளை மக்கள் விசனம்

முல்லைத்தீவு,மார்ச் 21

முல்லைத்தீவு முள்ளியவளையில் உள்ள இராணுவ முகாமில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஊர் மக்களுக்கு உபதேசம் செய்யும் அதிகாரிகள், கிராமங்களிலே முகாமிட்டு இருக்கும் இராணுவத்தினர் விடும் தவறுகளையும் கண்டிக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் முகாம் அமைத்து அங்கு நிலைகொண்டுள்ள படையினரால் வெளியேற்றப்படும் அனைத்துக் கழிவு நீரும் அருகேயுள்ள முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் பிரதான நுழை வாயில் வீதியோரம் ஆரம்பித்து முள்ளியவளை பிரதான வீதி வரை திறந்த தற்காலிக வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படுகின்றது.

கழிவு நீரால் கிளம்பும் துர்நாற்றத்தால் அருகேயுள்ள றோ.க.த.க பாடசாலைக்குச் செல்லும் ஆரம்பப் பிரிவுச் சிறார்களும், முள்ளியவளையிலிருந்து வித்தியானந்தக் கல்லூரிக்குச்செல்லும்மாணவர்களும்மூக்கை மூடிய வண்ணமே செல்லவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

> “கழிவு நீரால் கிளம்பும் துர் நாற்றத்தால்அருகேயுள்ள றோ.க.த.க பாடசாலைக்குச் செல்லும் ஆரம்பப் பிரிவுச் சிறார்களும், முள்ளியவளையிலிருந்து வித்தியானந்தக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும் மூக்கை மூடிய வண்ணமே செல்ல வேண்டியுள்ளது.”

இது மட்டுமன்றி இந்த இராணுவ முகாமுக்கு மிக அருகில் றோ.க.த.க பாடசாலை இயங்குவதால் இந்தத் துர்நாற்றத்தைச் சுவாசித்த வண்ணமே சிறார்கள் தமது கல்வி நடவடிக்கையைத் தொடர வேண்டிய அவல நிலையில் உள்ளனர். அத்துடன் இந்தக் கழிவு வாய்க்கால் , பிரதான வீதியோரம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கழிவு நீர் சென்றடைவதற்கான வழி இன்மையால் கழிவு நீர் வாய்க்காலுள் தேங்கியுள்ளது.

இதனால் அதிக துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் நோய்த்தாக்கமும் ஏற்படலாம் என்று குற்றஞ்சாட்டியுள்ள மக்கள், முல்லைத்தீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளும் பிரதேச சபையினரும் ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யாது படையினருக்கும் உபதேசம் செய்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது குறுகிய காலத்திலேயே நான் நியமனம் பெற்று வந்தேன். இது தொடர்பாக எனக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கப்படவில்லை. இருந்தாலும் இந்த விடயத்தில் கவனம் எடுப்பேன்.- என்றார். (ஐ-21,102)

## முல்லைத்தீவு கடற்கரையில் சவுக்கு மர நடுகைத் திட்டம்

### 3.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு,மார்ச் 21

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கடற்கரை பகுதியில் 3.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சவுக்குமரங்கள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலர் குணபாலன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆயிரம் ஏக்கரில் 5 ஆயிரம் பனம் விதைகள் நடப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம,மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூக மட்ட அமைப்புக்களின் பூரண ஒத்துழைப்புடன் மட்டுமே சிறந்த சேவைகளை ஆற்ற முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தினதும் பிரதேசத்தினதும் முதன்மை நகரமாக முல்லைத்தீவு நகரம் விளங்குகின்றது. நகரை அழகுபடுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டியது பிரதான கடமையாகும்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதியில் 3.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சவுக்கு மரம் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு ஆயிரம் ஏக்கரில் 5ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலத்தில் தூர நோக்கத்தோடு மாங்குளம் பகுதியில் பல புளிய மரங்கள் நடப்பட்டன. இதனால் தற்போது பல மக்கள் அம்மரங்களிளிருந்து பயன்பெற்று வருகின்றனர்- என்றார், (ற-ஐ-21,102)



மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தால் பிரதேச மக்களுக்கான இலவச நீரிழிவு மருத்துவப் பரிசோதனை முகாம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இந்த மருத்துவப் பரிசோதனை முகாமில் 75க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். (ற-ஐ-9)

## மாந்தை மேற்கு பிரதேச சபையின் அலுவலகத்துக்கு அடிக்கல்

மன்னார், மார்ச் 21

புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மாந்தை மேற்குப் பிரதேச சபையின் பிரதான அலுவலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி புண்ணியலிங்கம், மாந்தை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் ச.ஜெனிங்ஸ், மாந்தை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சு.வரப்பிரகாசம், முன்னாள் உப தவிசாளர் .சீ.சௌந்தர நாயகம், அடம்பன் பங்குத் தந்தை அருட்பணி நியூட்டன் அடிகளார், ஆட்காட்டிவெளிபங்குத்தந்தை டெஸ்மன் ஆஞ்சலோ அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர். (ற-ஐ-56)

## இளைஞர் சேவை மன்றம், நூலகம் குமுளமுனையில் திறக்கப்பட்டன

முல்லைத்தீவு குமுள முனைப் பகுதியில் அமைக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம், பொது நூலகம் என்பவை வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

சமூகத்துடன் இணைந்து பொதுமக்களின் அபிலா சையை நிறை வேற்றும் வகையில் இந்த நூலகம், தேசிய இளைஞர் சேவை மன்றம் ஆகியவற்றின் பயுன்பாடு அமைய வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் நாடாளுமன்றச் செயற்றிட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று இளைஞர்சம்மேளனத்தினர்குமுள முனை மத்தி கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட குறித்தபொதுநூலகத்தின்உருவாக்கத்துக்கு உதவி வழங்கியிருந்தனர்.

இளைஞர் கழகத்தின் தலைவர் குமணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இளைஞர் நாடாளுமன்ற உறுப் பினர் சதீஸ்கரன், ஓய்வு பெற்ற அதிபர் இராஜேஸ்வரன், கரைதுறைப் பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் மயூரன், மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21)

## கரைதுறைப்பற்று மத்தியஸ்தர் சபையில் இரு வருடத்தில் 2,348 பிணக்குகள் பதிவு

முல்லைத்தீவு, மார்ச் 21

கரைதுறைப்பற்று பிரதேச மத்தியஸ்தர் சபையில் கடந்த 2 வருடத்தில் 2 ஆயிரத்து 348 பிணக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கரைதுறைப்பற்று மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் சிவபாதம் தெரிவித்தார். அதில் ஆயிரத்து 594 பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரி வித்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நீதிப் பிணக்குகள் தொடர்பான மூன்று நாள் விசேட பயிற்சிகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதி அமைச்சின் அதிகாரிகளான்
நீதி அமைச்சின் அதிகாரியாகிய ஜிசுபால ஒருங்கிணைப்பில் அண்மையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச. செயலர் குணபாலன் தலை மையில் குறித்த பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இதன் போது கரைதுறைப்பற்று மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் சிவபாதம் தெரிவித்ததாவது-

நாம் செயற்பட ஆரம்பித்த இரண்டு வருட காலப்பகுதியில் விசாரணைக்கென 2 ஆயிரத்து 348 பிணக்குக்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் ஆயிரத்து 594 பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டன.

பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 348 பிணக்குகளில் மக்களால் நேரடியாக ஆயிரத்து 143 பிணக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்களால் 243 பிணக்குகளும், அரச தனியார் வங்கிகளால் 893 பிணக்குகளும், நீதி மன்றத்தால் 40 பிணக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.- என்றார். (ற-ஐ-21,102)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வியாபார விதிமுறை மீறல்; நிறுவனங்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
கடந்த இரண்டு வார காலங்களுக்குள் விதிமுறைகளை மீறி வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட 5 மருந்தகங்கள், 2 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட 35 நிறுவனங்களுக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
பாவனையாளர்களுக்கு சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுக்களுக்காகவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மற்றும் உணவு மருந்துக் கட்டுப்பாட்டுச் சபையால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
யாழ்.நகரப்பகுதி, கோப்பாய், உரும்பிராய் பகுதிகளில் குறித்த உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் இனங்காணப்பட்ட வியாபார நிலையங்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
காலாவதியான உணவு, மருந்து மற்றும் பால்மா பொருள்களை விற்பனை செய்தமை, அதிக விலைக்கு விற்பனை செய்தமை, விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, உரிய முறையில் உணவுப்பொருள்களை கையாளாமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இந்த நிறுவனங்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தன. காலாவதியான பால்மா பொருள்கள், மருந்துகளை விற்பனை செய்த யாழ். நகரிலுள்ள 5 மருந்தகங்களுக்கு நீதிமன்றால் தலா 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.
அதேவேளை காலாவதியான ஏனைய பொருள்களை விற்பனை செய்த 15 வியாபார நிலையங்களுக்கு நீதிமன்றால் ஒவ்வொருவருக்கும் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, உரிய முறையில் உணவுப் பொருள்களைக் கையாளாமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக ஏனைய வியாபார நிலையங்களுக்கு ரூபா 3 ஆயிரம் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ந-ஐ-103)

# வலிகாமம் தென்மேற்குக்கு முதற்கட்டமாக 100 வீடுகள்

## மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தின் கீழ்

யாழ்ப்பாணம், மார்ச் 21
மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டங்களில் வலி.தென்மேற்குக்கு முதற்கட்டமாக 100 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
அவற்றுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கையை கிராம உத்தியோகத்தர்களும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஆரம்பித்துள்ளனர்.
போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து வருகின்றனர். அவர்களுக்காக வடக்கு மாகாணத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அந்த வரிசையில் வலி. தென்மேற்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு முதற்கட்டமாக 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. சில்லாலை வடக்கு, தெற்கு சிறுவிளான் ஆகிய கிராமங்களில் 148, 149, 153 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
பயனாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் தற்போது கிராம உத்தியோகத்தர்களும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுள்ளனர். (ந-ஐ-115)



தேசிய சேமிப்பு வங்கியின் 44 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாவகச்சேரிக் கிளையினர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். கிளை முகாமையாளர் தலைமையிலான வங்கி அலுவலர்கள் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் கடந்த புதன்கிழமை இதனைக் கையளித்தனர். (ந-ஐ-9)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 21
புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளும் மக்களின் எதிர்பார்ப்புக்களும் எனும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கும் கலந்துரையாடலும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்று வடபிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச – லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது. கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் இ.முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பு.ஜ.மா.லெ.கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ. மகேந்திரன் தலைமை வகிக்கவுள்ளார். இந்தக் கருத்தரங்கில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், அரசியல் ஆய்வாளர் தெ.ஞானசீர்த்தி கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ந-ரி)

# வலி.தென்மேற்கு வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்தும் பணி

## பிரதேச சபை முன்னெடுக்கின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 21
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கிராமத்துக்கு 5 மின் விளக்குகள் வீதம் வீதிகளுக்கு மின் விளக்குப் பொருத்தும் நடவடிக்கை துரிதமாக நடைபெற்று வருகின்றது. அதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.
காக்கை தீவிலிருந்து மாதகல் வரையான 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதான வீதிகள் உட்பட பெரும்பாலான உள்ளக வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாததாலும், பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் ஒளிராததாலும் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன. அதனால் மக்கள் இரவு நேரங்களில் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.
இந்த நிலை குறித்து வரியிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியதுடன் திருட்டுக்கள், வழிப்பறிகள் அதிகரித்துள்ள இந்த நேரத்தில் மக்கள் நிம்மதியாக நடமாடுவதற்கு வசதியாக வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்துமாறும் கோரியிருந்தனர்.
அதையடுத்து முதற்கட்டமாக ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு 5 மின்குமிழ்கள் வீதம் 28 கிராமத்துக்கும் 140 மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும் என்று கடந்த இரு வருடங்களுக்கு முன் பிரதேச சபையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.
இந்த நிலையில் தற்போது 28 கிராமங்களுக்கும் 5 மின்குமிழ்கள்வீதம்முக்கியமானஇடங்களில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. (ந-ஐ-115)

# சமாதான நீதிவான்களுக்கான கூட்டம்

கொழும்புத்துறை, மார்ச் 21
சர்வோதயத்தின் தேசோதய அமைப்பின் ஒன்றுகூடலும், சமாதான நீதிவான்களுக்கான சபையின் கூட்டமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சர்வோதய தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளன.
லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் சமய, சமூக சமாதான நீதிவான்கள் எனப் பலதரப்பட்ட சேவையாளர்களுக்கு விருது வழங்குவதற்கான படிவமும் வழங்கப்படவுள்ளன. அதேவேளை மக்கள் மத்தியில் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்களை எழுத்து வடிவில் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-ஐ-135)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 21
கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று காலை 8 மணிக்கு அம்பாளின் தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 5.30 மணிக்குக் கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ந-ஐ-ரி5)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமான யாழ். நீர்வையம்பதி வீரபத்திரர் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது என ஆதீனகர்த்தா த.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், மறுநாள் 23 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

# 2016ஆம் ஆண்டு புத்தாக்கல் முயற்சி சாவகச்சேரி வைத்தியசாலை தெரிவு

சாவகச்சேரி,மார்ச் 21
2016 ஆம் ஆண்டில் வைத்திய சேவையில் புத்தாக்கல் முயற்சிகளும், வைத்திய மேம்பாட்டுத் திட்டமும் என்னும் தலைப்பில் சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
அங்கு கடமையாற்றும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியநிபுணர் மற்றும் தாதியர் வெளிநாடொன்றில் மூன்று வார வதிவிடப் பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர். சுகாதார அமைச்சால் நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தக்கூடிய புத்தாக்கல் செயற்றிட்டம் தொடர்பாகவும், அதன் மூலம் நோயாளர்களுக்கு வழங்கக்கூடிய சேவை தொடர்பான விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.
அதன் பிரகாரம் அனைத்து வைத்தியசாலைகளும் தமது புத்தாக்கல் முயற்சிகளும் வைத்திய மேம்பாட்டுத் திட்டமும் தொடர்பான விவரங்களை அனுப்பியிருந்தன.
இந்த விவரங்களின்படி சுகாதார அமைச்சால் முதற்கட்டமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, மாவனல்ல வைத்தியசாலை, ஹோமாகம வைத்தியசாலை ஆகியவற்றால் வழங்கப்பட்ட புத்தாக்கல் வைத்திய மேம்பாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியக் கலாநிதி ஜீ.மகிபால அறிவித்துள்ளார். (ந-ஐ-9)

# கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
கோண்டாவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.35 மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ந-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவைக் கைப்பற்றியது என் தலைமையிலான படையே

## கோத்தா பொய் சொல்கின்றார் என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, மார்ச் 21
மண்டைதீவினை கோத்தபாயவின் 'கஜபா' படையணி கைப்பற்றவில்லை. எனது தலைமையில் செயற்பட்ட 'சிங்க ரெஜிமென்டே' அதனைக் கைப்பற்றியிருந்தது. ஆனால் கோத்தபாய அந்தப் பெயரையும் – புகழையும் என்னிடமிருந்து பறித்துக் கொண்டார். – இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, இராணுவத்தில் இருக்கும்போது எவ்வாறு செயற்பட்டார் என்பது தொடர்பில் குறிப்பிடும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மண்டைத்தீவைக் கைப்பற்றுவதற்கு செல்லும் போது சரத் பொன்சேகா தனக்குக் கீழ் செயற்பட்டார் என்று கோத்தபாய ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

> மண்டை தீவைக் கைப்பற்றியது 'சிங்க ரெஜிமன்ட்' என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அதன்பின் கோத்தபாய இராணுவத்திலிருந்து சென்று விட்டார். அவருடன் எந்த தொடர்பும் இருக்க வில்லை. மீண்டும் அவர் பாதுகாப்பு செயலாளராகவே இங்கு வந்தார். அப்போது அவர் மாறியிருப் பார் என்று நான் நினைத்தேன். ஆனால் அவரிடம் எந்த மாற்றமும் இருக்க வில்லை. இராணுவத்தில் இருக்கும்போது எவ்வாறு மற்றவர்கள் செய்யும் வேலைக்கு தனது பெயரை உள்வாங்கிக் கொண்டாரே அதே செயலையே செயலாளராக வந்தபோதும் மேற்கொண்டார்.

நான் தலைமை வகித்த 'சிங்க ரெஜிமன்ட்' படையணியை கோத்தாவின் 'கஜபா' படையணிக்கு உதவி செய்யுமாறு டென்சில் கோப்பேகடுவ தெரிவித்திருந்தார். அந்த வகையில் நான் அவருக்கு அந்தக் களத்தில் உதவி புரிந்தேன்.

மாலை 5 மணியளவிலேயே இந்தக் கட்டளை எமக்கு கிடைக்கப்பெற்றது. 5.30 மணியளவில் கோத்தபாய மண்டைத்தீவைக் கைப்பற்றுவதற்கு தனது படையணியுடன் மண்டை தீவின் கீழ் பகுதிக்கு வந்திருந்தார். அந்தப் பகுதி களப்பு பகுதியாக இருந்தது. படையணியில் கோத்தாவும், சவேந்திர சில்வாவும், சுமேந்திர பெரேராவும் கரையிலிருந்தார்கள். ஏனையவர்கள் தண்ணீரில் இறங்கினார்கள். அந்தப் பகுதியிலிருந்து தெற்கு திசையில் வயல் நிலம் காணப்பட்டது. படையினர் அவ்வழியால் சென்றிருந்தால் அவர்கள் திரும்பி வந்திருக்க மாட்டார்கள்.



இதனை நாங்கள் உணர்ந்து கொண்டு மேல்திசையால் சென்று தாக்குதல் நடத்தினோம். அவ்வாறே தாக்குதல் நடத்திக் கொண்டு முன்நோக்கி சென்றோம். இவ்வாறு மண்டை தீவை முற்றாக கைப்பற்றினோம். ஆனால் கோத்தபாய தொடர்ந்து களப்புக்குள்ளேயே இருந்தார். இந்தப் போராட்டத்தில் 60 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். மறுநாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன இதனை பார்க்க வந்தார். உயிரிழந்த சடலங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பகுதியில் 'கஜபா' என்று பெரிய எழுத்தில் பதாகையொன்று வைக்கப்பட்டு கோத்தா உள்ளிட்ட அந்தப்படையணியினர் ஊடகங்களுக்கு காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மண்டைதீவைக் கைப்பற்றியது 'சிங்க ரெஜிமன்ட்' என்பது யாருக்கும்தெரிந்திருக்கவில்லை.

அதன்பின் கோத்தபாய இராணுவத்திலிருந்து சென்று விட்டார். அவருடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. மீண்டும் அவர் பாதுகாப்பு செயலாளராகவே இங்கு வந்தார். அப்போது அவர் மாறியிருப்பார் என்று நான் நினைத்தேன். ஆனால் அவரிடம் எந்த மாற்றமும் இருக்கவில்லை. இராணுவத்தில் இருக்கும் போது எவ்வாறு மற்றவர்கள் செய்யும் வேலைக்கு தனது பெயரை உள்வாங்கிக் கொண்டாரோ அதே செயலையே செயலாளராக வந்த போதும் மேற்கொண்டார் – என்றார். (ந-5)

## நிம்மதி வழங்கிய மகிந்தவிடமே ஆட்சியைக் கையளிக்க வேண்டும்

### விமல் வீரவன்ச கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 21
தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து நாட்டுக்கு நிம்மதி வழங்கிய மகிந்த ராஜபக்சவிடம் மீண்டும் ஆட்சி கையளிக்கப் படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச சார்பு எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டம் கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் லைக்கா குழும நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிறுவனம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பான லைக்காவுக்கு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

நல்லாட்சி அரசு என்று சொல்லிக் கொள்வோர் புலம்பெயர் விடுதலைப்புலி அமைப்பான லைக்காவுக்கும் அதையொத்த ஏனைய புலி அமைப்புக்களுக்கும் இலங்கையில் காலூன்ற அனுமதி வழங்கியுள்ளனர்.– என்றார். (ந-5)

## நாமலிடம் விசாரணை

கொழும்பு, மார்ச் 21
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவிடம் கடந்த வியாழக்கிழமை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசேட விசாரணை நடத்தியுள்ளனர்.

இந்தியாவின் 'கிரிஸ்' நிறுவனத்துடன் நாமல் ராஜபக்ச முன்னெடுத்த 70 மில்லியன் ரூபா பெறுமதியான கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு கிடைத்தது. இதனையடுத்தே விசாரணைக்காக, நாமல் ராஜபக்ச அழைக்கப்பட்டிருந்தார். நேற்றுநாமலிடம் 4 மணி நேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பின் மத்தியில் இந்தியாவின் கிரிஸ் நிறுவனத்தால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட வதிவிடம், மற்றும் கடைத் தொகுதியை உள்ளடக்கிய கட்டடத் தொகுதியை நிர்மாணிக்க அனுமதியை பெற்றுக் கொடுக்க ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் இதன் போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவித்தன. (ந-5)

## அமைச்சரவைப் பத்திரம் மூலம் மின் நிலையங்கள் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 21
அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தனியாருக்கு சொந்தமான மூன்று மின்சக்தி உற்பத்தி நிலையங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படும் என்று அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

100 மெகாவாட்ஸ் உற்பத்தியைக் கொண்ட புத்தளம் ஹெலடானவி உற்பத்தி மையம், 100 மெகாவோட்ஸ் உற்பத்தியைக் கொண்ட எம்பிலிப்பிட்டிய உற்பத்தி நிலையம், 60 மெகாவாட்ஸ் உற்பத்தியைக் கொண்ட மாத்தறை நிலையம் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யும் திட்டமே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அவசர தேவைகளின் நிமித்தம் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. எனினும் மின்சார சட்டப்படி ஏல முறையில்லாமல் தனியார் மின்சார நிலையங்களை கொள்வனவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-5)

## நல்லாட்சிக்கு எதிரான அடுத்த கட்டம் என்ன ?

கொழும்பு, மார்ச் 21
அரசுக்கு எதிரான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயக் கூட்டு எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடவுள்ளனர்.

மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க் கட்சிகள் கடந்த வியாழக்கிழமை அரசுக்கு எதிரான முதலாவது மிகப் பெரிய பேரணியை நடத்தியிருந்தது. இந்தப் பேரணியில் பெருமளவில் மக்கள் திரண்டுள்ளனர். இது தமக்கு கிடைத்த வெற்றி என்று கூட்டு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், அரசுக்கு எதிரான பேரணியை அடுத்து எங்கே, எப்போது நடத்துவது என்று நாளை செவ்வாய்க் கிழமை மகிந்த ராஜபக்சவுடன் நடக்கவுள்ள பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்படவுள்ளது. தமிழ்–சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர், அரசுக்கு எதிரான அடுத்த பேரணியை நடத்த வேண்டும் என்ற கூட்டு எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (து-வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆதரவு கூட்டத்தின் விளைவு விரைவில்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 21

மகிந்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை சில நாள்களில் பாருங்கள். - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பகா தொகுதி அமைப்பாளர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒரு கோஷ்டி தற்போது அங்குமிங்கும் ஓடித் திரிகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஒருவர் அங்கு இருக்கின்றார். அங்கு இருப்பவர்கள் அனைவரும் திருடர்களும். கொலையாளிகளும் ஆவர். எமது அரசு தற்போது வழங்கியுள்ள ஊடக சுதந்திரம் காரணமாக அவர்களின் கூட்டங்கள் குறித்து போதுமான அளவு செய்திகளை வெளியிடுகின்றனர். கொழும்புக்கு சுமார் 12 ஆயிரம் பேர் வரவழைக்கப்பட்டிருந்தனர். எனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு எதிரில் தான் பொலிஸார் கூட்டத்துக்கு வந்த வாகனங்களை நிறுத்த அனுமதி வழங்கியிருந்தனர். அங்கு 250 முதல் 300 பஸ்கள் உட்பட வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. மிகவும் நீளமான பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நான் வாழ்க்கையில் அப்படி நீளமான பஸ்களைப் பார்த்ததில்லை. பஸ்ஸில் ஏறுவதற்கு வந்த அனைவரும் கையில் சாராயப் போத்தல்களை வைத்திருந்தனர். அவர்கள் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தனர். காலை, மதியம், இரவு உணவுகளை வழங்கி இவர்கள் ஆள்களை அழைத்து வந்துள்ளனர். எமக்கு அப்படி செய்து, இவர்களை விட 3 மடங்கு மக்களை அழைத்து வர முடியும். எனினும் நாங்கள் அதற்குத் தயாரில்லை.



இவர்கள் கூட்டங்கள் நடத்த முடியும். ஆனால் அதில் கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சியினர் செல்வார்களாயின் அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள். அடுத்து சில நாள்களில் அவர்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்று பாருங்கள். நன்றாகச் சாப்பிடும் ஒருவருக்கு ஒரு வாரம் சாப்பாடு கொடுக்காவிட்டால் என்ன நடக்கும். பைத்தியம் பிடித்தவர் போல் நடந்து கொள்வார். கிடைக்கும் எதனையும் சாப்பிடுவார். பொய் சொல்லி திருடிச் சாப்பிடுவார். இவர்கள் இப்படித்தான் நடந்து கொள்கின்றனர் - என்றார். (ந-ஐ-5)

## எம்.பிக்களின் கொடுப்பனவு குறித்து அரசு இன்னமும் தீர்மானிக்கவில்லை

கொழும்பு, மார்ச் 21

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அரசு இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என சபாநாயகர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கூடியிருந்த செயற்குழுவால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரச ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டதன் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருந்துள்ளது. ஆனாலும், சில தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்ததால் அது பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தலொன்றின் பின்னரே இதுபற்றிக் கவனம் செலுத்துவதே அனைவரினதும் கருத்தாகியிருந்தது.

செயற்குழுவால் விடுத்த தீர்மானங்களைப் போல், தமது போக்குவரத்து வசதிகள், கடிதங்கள், ஆவணங்களுக்கான செலவினங்கள், அலுவலக வசதிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தற்காலத்துக்கு ஏற்ப போதுமானவைகள் அல்ல என்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்னர் இருந்தே சுட்டிக்காட்டப்பட்டன.

தென்னாசிய வலயத்தின் ஏனைய நாடுகளின் நாடாளுமன்ற அமைச்சுக்களின் பிரதிநிதிகளின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் ஒப்பீட்டளவில் இலங்கையின் நிலைப்பாடு பெரிதும் கீழ்மட்டத்தில் நிலவுதல் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறான போதிலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி இன்னமும் அரசு இறுதி முடிவொன்றுக்கு வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-22)

# இனம்காணாத காச நோயாளர் நாடு முழுவதும் 3 ஆயிரம் பேர்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

காசநோய்க்குச் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்லாது சமுதாயத்திலுள்ள ஏனையோருக்கும் நோயைப் பரப்பும் வகையில் நாடு முழுவதிலும் உள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்களைத் தேடிக் கண்டறிவது சுகாதாரத்துறைக்குப் பெரிய சவாலாகியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் 2014 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களுக்கு அமைய, இலங்கையில் 9 ஆயிரத்துக்கும் 11 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட காசநோயாளர்கள் இருக்கின்றனர் என்று தெரிய வந்துள்ள போதும், 14 ஆயிரம் பேர் வரையில் உள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் தேடிக் கண்டறிய வேண்டியுள்ளது என்றும், அவர்களைத் தேடிக் கண்டறிவது சவாலான விடயம் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

காச நோய்க்கான சிகிச்சைகளை வழங்கும் 26 மார்பு நோய் கிளினிக்குகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டுள்ளதுடன், முப்பதுக்கு மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் அவற்றில் சேவையாற்றுகின்றனர்.

இந்தக் காச நோயானது காற்றின் மூலமாகப் பரவக் கூடியதாகும். நோய் கண்டுள்ள ஒருவர் பெரிதாகச் சிரிக்கும் போது, இருமும்போது, தும்மும்போது வெளிப்படுத்தும் நோய்க் காரணியான பக்ரிறீயாக்களைக் கொண்டுள்ள துளிகள் சுவாசத்தின் மூலமாக உட்செல்வதால் சுகதேகியான ஒருவருக்கு நோய்த் தொற்று ஏற்படுகிறது.

இது முற்றாகவே சுகப்படுத்திவிடக் கூடிய நோயாகும். சுகமடைந்துள்ள ஒருவரிடமிருந்து மீளவும் பரவாது எனவும் தெரிவித்திருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர், நோயைப் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதன் மூலமாக இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்தார். (ந-ஐ-22)

## ஐ.தே.க. இல்லாத அரசு அமைக்க அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆதரவு!

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய தேசிய கட்சி இல்லாமல் அரசு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சி முன்வைக்கும் கோரிக்கைக்கு அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு மாதங்களில் கூட்டு எதிர்க்கட்சி மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் குழுக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுடன் இது தொடர்பில் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கமைய ஐக்கிய தேசிய கட்சி இல்லாமல் அரசு ஒன்றை உருவாக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவை அங்கத்தவர்கள், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகர மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டு எதிர்கட்சியின் கூட்டத்தின் பின்னர் புதிய அரசு உருவாக்கும் யோசனை கட்சிக்குள் வலுவாக முன்வைக்கப்படுகின்றது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-ஐ-5)

## எட்கா உடன்படிக்கை வரைவு இலங்கை அரசிடம் கையளிப்பு

### இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சின்ஹா தகவல்

கொழும்பு, மார்ச் 21

இலங்கை - இந்திய பொருளாதார, தொழில்நுட்ப கூட்டு உடன்படிக்கை (எட்கா) தொடர்பான வரைவை, இலங்கை அரசு இந்திய அரசிடம் கையளித்துள்ளது என்றும் அதனை இந்திய அரசு ஆராய்ந்து வருகின்றது என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சின்ஹா தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டிருந்த அவர், ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய போதே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியா - இலங்கைக்கு இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு உடன்படிக்கை, இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப்பயணத்தின் போது பரிந்துரை செய்யப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன்னதாக, இந்த ஒப்பந்தம் தொடர்பான முதற்கட்ட வரைவு இலங்கை அரசால் இந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வரைவை இந்திய அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய இந்திய அரசின் பதில் வழங்கப்படும்.

இலங்கையின் சுகாதார சேவையை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இந்திய அரசால், இலங்கை அரசுக்கு 7.5 மில்லியன் டொலர் பெறுமதியுடைய அதி நவீன நோயாளர் காவு வண்டிகள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களுக்காக 88 நோயாளர் காவு வண்டிகளை வழங்கவிருக்கின்றது. இந்த வண்டிகள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இவற்றில் பணியாற்றுவதற்காக 600 இலங்கையர்கள் பணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கு இந்தியாவின் ஹைதராபாத் நகரில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும். -என்றார். (ந-ஐ-5)

## மைத்திரி அரசு பழிவாங்குகிறது

கொழும்பு, மார்ச் 21

தற்போதை அரசு நிர்வாகத்தை சரியாக செய்யாது, பழிவாங்கலை மாத்திரம் சரியாக செய்து வருகின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார். அப்புத்தளையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது அபிவிருத்தியை காணமுடியவில்லை. மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அரசு வாக்குறுதிகளை தாறுமாறாக மீறி வருகிறது.

இந்த அரசு நாட்டைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதாகக் கூறியே ஆட்சிக்கு வந்தனர். ஆனால் வேகமாகப் பழிவாங்கி வருகின்றனர். இதை மட்டும் நன்றாகச் செய்கின்றனர்.

மக்கள் கஷ்டத்தில் விழுந்துள்ளனர். சாப்பிட முடியாதுள்ளனர். இந்த அரசு தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் நாட்டுக்கு என்ன நடக்குமோ தெரியாது - என்றார். (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கேட்கும் மகிந்த ராஜபக்ச...!

கடந்த 17 ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் கூட்டு எதிர்க்கட்சியினரால் நடத்தப்பட்ட இன்றைய அரசுக்கு எதிரான கூட்டத்துக்குத் தலைமை வகித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிகழ்த்தியதாக வெளிவந்துள்ள செய்திகளை படிக்கும்போது, அவர் தமது பேச்சில் அழுத்தம் கொடுத்து வெளியிட்டுள்ள மிக முக்கிய கருத்துக்களில் ஒன்று பின்வருமாறு அமைந்திருந்துள்ளது:

"எனது குடும்பத்தை சிறையில் அடைத்தாலும், சிறையில் அடைத்துத் தண்டித்தாலும் எனது அரசியல் பயணத்தை இவர்களால் தடுக்கவே முடியாது. இவர்களால் முடியவில்லை என்றால் ஆட்சியை என் னிடம் தரட்டும். நான் மீண்டும் நாட்டை மீட்டெடுத்து மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவேன்" என்பதாகும் அது!

இந்த நாட்டை பத்து ஆண்டு காலம் சகல அதிகாரங்களும் பெற்ற ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச ஆட்சி புரிவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தார்கள் இந்த நாட்டு மக்கள்.

நெடுஞ்சாலைகளை அமைத்தேன், மத்தள விமான நிலையத்தை உருவாக்கினேன், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிறுவினேன் என்றெல்லாம் வரிசைப் படுத்தித் தமது சாதனைகளைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார் அவர். இவற்றால் நாட்டு மக்களுக்கு இவை எந்தவகையில் அவசரமாகத் தேவைப்பட்டன, அவைகளில் பலவும் பயனற்றுப் போயுள்ளமை - குறிப்பாக மத்தள விமான நிலையம் பற்றியோ மூச்சு விட்டதாகத் தெரியவில்லை.

சிங்களப் பேரின மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் அதற்கும்கூட அன்று இலங்கை இராணுவத்தை முன்னின்று நடத்தியவரும் தற்கொலைப் போராளியின் தாக்குதலில் இருந்து தப்பியவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பகிரங்கமாக உரிமை கொண்டாடத் தொடங்கியிருக்கிறார் இன்று.

தமது குடும்பம் பழி வாங்கப்படுவதாக அங்கலாய்ப்புடன் கூட்டத்தில் பிரலாபித்துள்ள மகிந்த ராஜபக்ச, 2005 ஆம் ஆண்டு தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்டவரான முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தேர்தலை அடுத்து இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டு இராணுவ நீதிமன்றால் சிறையில் அடைக்கப்பட்ட சம்பவத்தை அன்று தாம் நிகழ்த்திய பழிவாங்கலாக ஏற்றுக்கொள்வாரா...? அவர் வெளியிட்டுள்ள கருத்து அதிகாரப் பதவியில் மீண்டும் அமருவதற்கான அவருடைய அவாவையே பிரதிபலிக்கின்றது. ஆட்சியை உடனடியாகத் தம்மிடம் தந்தால் நடத்திக் காட்டுவதாகக் கூறும் ராஜபக்ச முன்னர் தந்திருந்த வாக்குறுதிகளைப் பற்றி சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறியே பதவிக்கு வந்தவர் அவர். பதவியில் அமர்ந்த பின் அதனை மறந்து போனார்.

போர் முடிவுற்ற கையோடு ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கும், இந்தியத் தலைவர்களுக்கும் கொடுத்த வாக்குறுதி அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும் மேல் சென்று தமிழர்களுக்கு தீர்வு வழங்குவேன் என்பதாகும். அந்தத் திருத்தத்தை மேலும் சீர்குலைக்க மட்டுமன்றி, அதனை இல்லாமற் செய்யவே முயற்சி எடுத்தார்.

அதிகாரப் பேராசையில் மூன்றாவது தடவையும் பதவியில் அமர்வதற்கு 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டார். வெளிநாட்டிலிருந்து தம்பிமார்களை அழைத்து பதவிகளில் அமர்த்திக் கொண்டது மட்டுமன்றி தனக்கு வேண்டியவர்களை அடிவருடிகளையெல்லாம் முக்கியமான திணைக்களங்களிலும் அமைச்சரவையிலும் அமர்த்திக் கொண்டார். மொத்தத்தில் அவரது காலத்தில் குடும்ப ஆட்சியே நடைபெற்றது என்பதே குற்றச்சாட்டு.

இவைகள் அனைத்தையும் பார்த்து அதிருப்தியுற்றதின் காரணமாகவே 2015 ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் அவரைப் பதவியில் இருந்து இறக்கினார்கள். மீண்டும் பதவியில் அமர்ந்தால் அந்த ஆட்சி எப்படி இருக்கும் என்பதை மக்கள் அறியாதவர்கள் அல்லர்.



# இனியும் தாமதிக்கலாமா ஜனாதிபதி?

■சேரலாதன்

ஜனாதிபதியின் கடுமையான எச்சரிக்கைகளையும் மீறி மகிந்த ஆதரவுடனான கூட்டு எதிர்க்கட்சியினரின் கூட்டம் கொழும்பில் நடைபெற்று முடிந்துள்ளது.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவராவது இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென அந்தக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆனால் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மைத்திரி அணி, மகிந்த அணியென இரண்டாகப் பிளவுபட்டு நிற்கின்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர். மைத்திரியின் எச்சரிக்கையையும் மீறிச் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டமை இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

இதேவேளை பலத்த ஆரவாரங்களுக்கு மத்தியில் இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச, எனது குடும்பத்திலுள்ள அனைவரையும் சிறையில் அடைத்தாலும் எனது அரசியல் பயணம் ஓயாது, தற்போதைய ஆட்சியாளர்களுக்கு ஆட்சி செய்யத் தெரியாது விட்டால் அரசை என்னிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறி விடலாம், நான் நல்லமுறையில் நாட்டை ஆட்சி செய்து காட்டுவேன் என்றெல்லாம் ஆவேசத்துடன் கூறியிருக்கின்றார். மகிந்தவுக்கு ஆதரவான இத்தகையதொரு கூட்டம் இடம்பெற்றுள்ளமை அரசுக்கு நிச்சயமாகக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால், அரசு கவிழக்கூடிய நிலைமை இன்னமும் உருவாகவில்லை.

### மகிந்தவுக்கு ஆதரவான இடதுசாரிகள்

மகிந்தவுக்கு ஆதரவாக இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் களத்தில் இறங்கியிருப்பதுதான்

"மைத்திரியின் எச்சரிக்கையையும் மீறிச் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டமை இங்கு கூர்ந்து கவனிக்கத் தக்கது."

பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. கொள்கைவாதிகள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்கள் நாட்டைக் கொள்ளை அடித்தவரெனக் குற்றம் சுமத்தப்படும் ஒருவருக்கு ஆதரவு தெரிவிப்பதும் அவருடன் ஒட்டி உறவாடுவதும் நகைப்புக்குரியது. கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டுத் தமது சுயநலத்தைப் பேணி வருகின்ற இவர்கள் போலிக் கொள்கைவாதிகள்தான். ஒரு காலத்தில் மகிந்தவைக் கடுமையாக விமர்சித்தவரும், தமிழர்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவருமான சோமவன்ச அமரசிங்கவும் இறுதியில் மகிந்தவைத் தஞ்சம் அடைந்து தன்னைக் கறைபடுத்திக் கொண்டுள்ளார்.

### ஜனாதிபதியின் நடவடிக்கை என்ன?

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் கட்சிக் கட்டுப்பாடுகளை மீறிய மகிந்த உள்ளிட்ட ஏனைய சுதந்திரக் கட்சியினர் மீது ஜனாதிபதி என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார் என்பதுதான் நாட்டுமக்களின் வியப்புக் கலந்த எதிர்பார்ப்பாகவுள்ளது. ஏனென்றால் இது தொடர்பாக அவர் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளதால் அது தொடர்பான எதிர்பார்ப்பும் அதிகமாகவுள்ளது. இதேவேளை முன்னாள் ஜனாதிபதி தம்மீதும், தமது குடும்பத்தினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகச் சிறிதும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. அரசு தம்மையும் தமது குடும்பத்தினரையும் பழிவாங்குவது போலவும், தாம் குற்றமற்றவர்களெனவும் காட்டிக் கொள்வதிலேயே மகிந்த முனைப்புடன் செயலாற்றி வருகின்றார். இதில் ஓரளவு வெற்றியும் அவருக்குக் கிடைத்துள்ளமை தெரிகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் அது அரசுக்கு நல்ல சகுனமாக இருக்கப் போவதில்லை. ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினால் அது மெய்யாகி விடும் என்பதற்கேற்ப மகிந்தவின் பொய்யுரைகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலையொன்று உருவாகுமானால் மகிந்தவின் கை ஓங்கி விடுவதை எவராலுமே தடுத்து நிறுத்திவிட முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# சிக்கல் மேல் சிக்கல்







அரசியலைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் மக்களுக்குச் செய்கின்ற அநியாயங்களை விடவும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்குச் செய்கின்ற அநியாயங்கள்தான் அவர்களை அதிகம் திருப்பித் தாக்கும்.

தமது ஆட்சியில் எதிர்க்கட்சியினர் எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தப்பட்டார்களோ, அவ்வளவு கொடுமையை ஆட்சி மாற்றத்தின் பின் பழைய ஆட்சியாளர்கள் அனுபவிக்க நேரும் என்பதற்கு மகிந்த ராஜபக்சவின் ஆட்சி நல்ல உதாரணம்.

அவரது அரசியல் எதிரிகளை மகிந்த எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தினார் என்பதை நாம் அறிவோம். அதன் விளைவாக அவரும் அவரது குடும்பத்தினரும் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருப்பதையும் அறிவோம்.

**மகிந்தவால் பழிவாங்கப்பட்ட பொன்சேகா**

அந்த வகையில், மகிந்தவால் அதிகம் பழிவாங்கப்பட்ட - அதிகம் பாதிக் கப் பட்ட அரசியல்வாதி என்றால் அது சரத் பொன்சேகாதான். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் போட்டியிட்டதைத் தவிர மகிந்தவுக்கு எதிராக சரத் பொன்சேகா வேறு எதையும் செய்யவில்லை என்பதை நாம் அறிவோம். இதற்குப் பழிவாங்குவதற்காக மகிந்த பொன்சேகாவை சிறையில் தள்ளினார். அதனூடாக பொன்சேகாவை அரசியலில் வளர்த்தும்விட்டார்.

பொன்சேகாவின் விடுதலையைத் தொடர்ந்து இடம்பெற்ற மத்திய மாகாண சபைத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கட்சி இரண்டு ஆசனங்களைப் பெறும் வகையில் சரத் பொன்சேகா முன்னேறி இருந்தார். ஆனால், அதன்பின் 2016இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவரால் வெல்ல முடியாமல் போனது. நல்லாட்சியின் பின்னால் மக்கள் சென்றமையே அதற்குக் காரணம்.

தன்னைச் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்திய மகிந்தவைப் பழிவாங்குவதற்காக பொன்சேகா சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆட்சி மாற்றமும் அதன் பின் அவர் ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பியாக நியமிக்கப்பட்டமையும் அவருக்குப் பெரும் வாய்ப்புகளாய்ப் போயின. அவர் எம். பியாக நியமிக்கப்பட்ட பின் நிகழ்த்திய முதலாவது நாடாளுமன்ற உரையில் இருந்தே மகிந்தவுக்கு எதிரான போரை தொடக்கி வைத்துள்ளார்.

**பிரபாகரனின் கொலை தொடர்பாக பொன்சேகா**

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொலை தொடர்பாக அங்கு அவர் தெரிவித்த தகவல் இன்னும் அரசியல் அரங்கைச் சூடாக்கிக் கொண்டே இருக்கின்றது. அந்தச் சூடு தணிவதற்குள் அடுத்த தாக்குதலை பொன்சேகா தொடக்கியுள்ளார். இந்தத் தாக்குதல் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. ரவிராஜ் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரைக் கொலை செய்தவர் கோத்தபாய தான் என அவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

இதனால், ராஜபக்ச குடும்பம் இன்னும் சிக்கலை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. பொன்சேகாவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அனைத்துக் கொடுமைகளுக்கும் காரணமான கோத்தபாயவை இலக்குவைத்து பொன்சேகாவால் தொடக்கி வைக்கப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் நடவடிக்கை ஒன்றோடு முடிவடையப் போவதில்லை.

ராஜபக்சவின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் விசாரணைக் கூண்டில் ஏறி நிற்கும் காலம் இது. ஆனால், இலகுவில் அவர்களால் இந்தக் கூண்டில் இருந்து இறங்கிவிட முடியாது என்றே தெரிகின்றது.

ராஜபக்சவின் குடும்பத்தில் இப்போது மகிந்தவின் மகன் யோசித, சகோதரர் பஸில் ஆகியோர் சிறிது காலம் தடுப்புக் காவலில் இருந்துவிட்டு பிணையில் வெளிவந்துள்ளனர்.

மகிந்த, கோத்தா மற்றும் நாமல் ஆகியோர்தான் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. ஆனால், நாமல் விரைவில் கைதுசெய்யப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனைத் தொடர்ந்து கோத்தாதான் எனத் தெரிகின்றது.

நாட்டில் இடம்பெற்ற பல முக்கிய கொலைகள் தொடர்பில் கோத்தாவுக்குத் தொடர்புகள் இருப்பதாக சொல்லப்படுகின்றது. அவை ஒவ்வொன்றாக ஆதாரத்துடன் வெளிப்படுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில்தான், லசந்த மற்றும் ரவிராஜ் கொலை தொடர்பான தகவலை பொன்சேகா இப்போது வெளியிட்டுள்ளார்.

**பொன்சேகாவின் இரண்டு நோக்கங்கள்**

பொன்சேகா நாடாளுமன்றத்திற்கு வந்திருப்பதே இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத்தான். ஒன்று படையினரின் ஆதரவை இந்த அரசுக்குப் பெற்றுக் கொடுத்தல், அடுத்தது மகிந்த குடும்பத்தின் ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்தி அவர்க ளுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுத்தல். இந்த இரண்டிலும் மகிந்த குடும்பத்தைப் பழிவாங்கும் நோக்கத்தில்தான் பொன்சேகா அதிக கவனம் செலுத்துகின்றார். அக்குடும்பம் புரிந்த அநியாயங்களை ஒவ்வொன்றாக வெளியிட்டு வருகின்றார்.

## சரியான காரணங்கள் இன்றைய தேவைகள்

ஆசிரியப் பெருந்தகைகள் இவ்வாறு செய்யலாமா என்றதொரு வாசகர் திருமுகம் கடந்த 15ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது. பெயரை மறைத்து வெளியிடப்பட்ட ஒரு மடல் அல்ல அது. பெயர் முகவரியுடன் நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே எனச் சாடிய திருமுகம் அது.

கல்வி தொடர்பான ஓர் ஆரோக்கியமான கட்டுமானம் கட்டியெழுப்பப்பட, அந்தத் திருமுகம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களை முன்வைக்க இது ஒரு தொடக்கமாக அமைய வேண்டும். பட்டியலிடப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குரிய விசாரணைகள் (உண்மையான பக்கச்சார்பற்ற) மேற்கொண்டு, பதிலளிக்க வேண்டிய கடப்பாடு, கல்வி நிர்வாக பீடங்களுக்கு உண்டு. பதில்கள் பூசி மெழுகப்படுவனவாக இல்லாதிருக்க வேண்டியது முகசியம். அண்மையில் அரியாலை ஆனந்த வித்தியாசாலை பற்றிய செய்திகள் வெளிவந்திருந்தன.

தமது வீட்டுக்கு அயலிலிருந்த கல்விகற்ற பிள்ளைகள் அருகிலுள்ள (500 மீற்றர்) அயற் பாடசாலையை விடுத்து இரண்டுக்கு மேற்பட்ட கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாடசாலையில், கல்வி நிர்வாகப் பகுதியினரால் இணைக்கப்பட்டனர்.

அதற்குப் பொருத்தமான ஒரு காரணத்தையும் கண்டுபிடித்து முன்வைத்தனர். சைவப் பாடசாலையில் அவர்கள் கட்டாயம் கற்க வேண்டுமென்பதால், தொலைதூர அயற்பாடசாலையுடன் இணைக்கப்பட்டனர் என்பதுதான் அது. அயலிலுள்ள அயற்பாடசாலையில் 100 வீதம் சைவசமயம் அற்றவர்களா கற்கின்றனரா என்கின்ற வினா இயல்பாகவே எழுந்ததைத் தவிர்க்க முடியவில்லை.

தொலைதூர அயற்பாடசாலையில் இணைக்கப்பட்ட 10 எண்ணிக்கைக்கு உட்பட்ட பிள்ளைகள் தொடர்ந்தும் பாடசாலைக்கு சமுகமளிக்கின்றனரா? அவர்கள் ஏதாவது இடர்களை எதிர்கொள்கின்றனரா? போன்ற விடயங்களில் வடமாகாணக் கல்வி நிர்வாகத்தை மேற்கொள்வோர் அக்கறை காட்டியிருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஏனெனில், பிரச்சினையாக்கப்பட்ட அந்த விடயம் பற்றி, தொடர் பின்னூட்டல் பெறப்பட வேண்டிய ஒரு தேவை. கல்வியியலாளர்கள் என்ற வகையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அதற்கான பதிலை எதிர்கொள்ள ஆவலாயுள்ளோம்.

நாம் மாகாண சபை உறுப்பினர்களாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ இல்லாத நிலையில், இத்தகைய வினாக்களை எழுப்ப ஜனநாயகத் தூண்களில் ஒன்றான பத்திரிகைகளையே நம்பியுள்ளோம்.

இதேபோன்று உதயனில் பட்டியலிடப்பட்டுக் குறித்துக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகம் அல்லது அந்த நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் தரப்பு, சமாளிப்பற்ற ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களை முன்வைத்து தமது தரப்பை நியாயப்படுத்தும் என எதிர்பார்க்கின்றோம். ஜனநாயகத்தின் 4 ஆவது தூண் பலம் பெறுவதாக.

**செ.செல்வானந்தன்,**
**அரியாலை**

## பாலியல் கல்வி தேவை இல்லை

உலகத்தில் சில விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில கல்வி முறைகள் தேவைதான், ஆனால் பாலியல் கல்வி என்பது தேவையில்லாதது. இயற்கையாக நடைபெறும் சில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. திருமணத்துக்குப் பின்பு நடைபெறும் விடயங்கள் கல்வி மூலம் கற்கத் தேவை இல்லை. ஏன் என்றால் அது இயற்கை. இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எமது உடம்பில் இயற்கையாகவே எம்மை அறியாமல் சில சம்பவங்கள் நடைபெறும். ஒரு சிவன் கோயில் மருதானையில் உள்ளது.

அதில் உள்ள சில சிற்பங்கள் அருவருப்பான முறையில் ஆண், பெண்ணில் சில உருவங்கள் வடிவமைத்துள்ளனர். ஏன் இதை எல்லாம் சமூக ஆர்வலர்கள் கண்டுகொள்ளவில்லை. நல்ல சமுதாயத்துக்கு நல்ல விடயங்களை நேர்மையுடன் இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும்.

**அன்பரசன்,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரிஸ் தாக்குதல் குற்றவாளி கைது

## பெல்ஜியப் பொலிஸார் அதிரடி


புருசல்ஸ், மார்ச் 21

பாரிஸ் தாக்குதலுக்கு முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட சலா அப்டஸ்லாமும், அவரது சகாக்களும் பெல்ஜியத்தில் பொலிஸாரின் அதிரடி சோதனையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். மேலும் இவர் தீவிரவாத செயற்பாடுகளுக்கு மூளையாக செயற்பட்டதாக பெல்ஜிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி ஐ.எஸ். அமைப்பினர் தற்கொலைப்படைத் தாக்குதல் மூலம் 130 பேரைக் கொன்று குவித்தனர். இதற்கு பிரதான காரணமாக இருந்த குற்றவாளிகளை சர்வதேச பொலிஸார் தேடி வந்தனர். உலக அளவில் தேடப்பட்ட குற்றவாளி பெல்ஜியத்தில் இருப்பதாகத் தகவல் அறிந்த பொலிஸார் பல ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் பலனாக பிரதான குற்றவாளி என கருதப்பட்ட சலா அப்டஸ்லாம் புருசல்ஸ் நகரில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டன. பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட பின்னரும் தப்பிக்க முற்பட்டதால் கால்களில் சுடப்பட்டு இவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவர்கள் தங்கியிருந்த வீட்டில் ஆயுதங்கள் வெடிபொருள்கள் என்பன காணப்பட்டன.

கைது குறித்து ஊடக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அதில் பிரான்ஸ் ஜனாதிபதியும், பெல்ஜியப் பிரதமரும் கலந்து கொண்டனர். பெல்ஜியப் பிரதமர் சார்ளஸ் மைக்கல் தெரிவிக்கையில், தீவிரவாதத்துக்கு எதிராக மேற்கொண்ட போரில் நாம் வெற்றி கொண்டோம் எனத் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதி ஹொலான்டே தெரிவிக்கையில், இடம்பெற்ற கோரச்சம்பவத்துக்கான முடிவை எட்டியுள்ளோம். தீவிரவாதிகள் பெல்ஜியம், பிரான்ஸ், ஐரோப்பா ஆகிய நாடுகளில் பரவலான வலையமைப்பைக் கொண்டுள்ளனர். அவர்களையும் விரைவில் கைது செய்வோம். பாரிஸ் தாக்குதலின் போது அதனை நடைமுறைப்படுத்திய, பொருளாதார ரீதியில் உதவி செய்தவர்களைத் தொடர்ந்து கைது செய்வோம். இது முடிவல்ல. குறித்த தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யும் வரை நாம் ஓயப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஐ-ரி4)



உலக அளவில் நேற்று முன்தினம் மின்வெட்டு ஏற்பட்டது. இரவு 8:30 மணியளவில் ஏற்பட்ட மின் வெட்டால் 178 நாடுகளில் மில்லியன் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். அதிகரித்து வரும் காலநிலை மாற்றத்தை உணர்த்துவதற்காக இந்த மின்வெட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகின் பிரதான நகரங்கள் இருளில் மூழ்கின. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இருளில் மூழ்கியிருந்தன. ஒரு மணிநேரத்துக்கு இந்த விழிப்பணர்வு மின்வெட்டு நடைபெற்றது. (ஐ-ரி4)

# 89 பேருக்கு சா

## கமரூன் நீதிமன்றம்

கமரூன், மார்ச் 21

கமரூனில் போகோஹராம் அமைப்பைச் சேர்ந்த 89 பயங்கரவாதிகளுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக 89 பேருக்கும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதக் குற்றங்களுக்கு சாவுத் தண்டனை வழங்க வகை செய்யும் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில், கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பல்வேறு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட 89 பேருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை விதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் போகோஹராம் பயங்கரவாத அமைப்பின் பிறப்பிடமான நைஜீரியாவையொட்டிய எல்லைப் பகுதியில் இராணுவத்திடம் பிடிபட்டவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கமரூன் சட்டப்படி கொலைக் குற்றங்களுக்கு சாவுத் தண்டனை விதிக்க முடியும் என்றாலும், கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அங்கு எவருக்கும் சாவுத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழலில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு சாவுத்தண்டனை விதிக்க வகை

> கமரூன் சட்டப்படி கொலைக் குற்றங்களுக்கு சாவுத் தண்டனை விதிக்க முடியும் என்றாலும், கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அங்கு எவருக்கும் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







ரஷ்யாவின் தெற்கு நகரில் டுபாயில் இருந்து புறப்பட்ட ப்ளை டுபாய் போயிங் ரக விமானம் ஓடு

# சீனாவில் பேஸ்புக் அனுமதிக்கு பேச்சு

பீஜிங், மார்ச் 21

பேஸ்புக் நிறுவனர் மார்க் சுகர்பேர்க் சீனாவின் ஆளும் கட்சி தலைவரான லியு யுனானுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இணையத்தில் பேஸ்புக் இலாபகரமான வளர்ச்சியை நாட்டுக்கும், மக்களுக்கும் வழங்கும் என தாம் நம்புவதாக லியு, மார்க் சுகர் பேர்குக்கு தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் மட்டுமல்லாமல் மேற்குலக நாடுகளின் ஏனைய சமூக வலைத்தளங்கள் சீனாவில் தடை செய்யப்பட்டுள்ளன. உலகில் அதிகமான இணையத்தள பாவனையாளர்களை சீனா கொண்டுள்ளது. சீனாவில் 668 மில்லியன் இணையத்தள பாவனையாளர்கள் உள்ளனர். சீனா இணையப் பாவனையில் கடும் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. இணையத்தள ஊடுருவல்கள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சமூக இணையத்தளங்களை தமது நாட்டினுள் அனுமதிப்பதில்லை என சீனா தெரிவித்துள்ளது. மேலும் இதற்கு முன்னரும் சந்திப்புகள் இடம்பெற்ற போதும் அவை எந்தப் பயனும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# மாணவர்களு காண்பித்த

வொஷிங்டன், மார்ச் 21

அமெரிக்காவில் ஐ.எஸ். தீ
களின் வீடியோக் காட்சிகளை
வர்களுக்கு காண்பித்த ஆசி
கல்வித்துறை அதிகாரிகள் நட
எடுத்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க்
அமைந்துள்ள பிராங்க்ஸ் அ
மேல்நிலை பாடசாலை மாணவ
ஊடகம் தொடர்பான வீடியோ
காண்பிக்கும் வகையில் ஐ.எ
வாதிகளின் வீடியோக் காட்சிகளை
ஆசிரியர் காட்டியுள்ளார்.

ஐ.எஸ்.தீவிரவாதிகள் தலை
டித்து தண்டனை வழங்கும் அந்
சிகள் மாணவர்களை அதிர்ச்
உள்ளாக்கியதாக கூறப்படுகிற
இதனிடையே சம்பவத்தில் தொ
புடைய ஆசிரியரை பாடசாலை
இருந்து உடனடியாக நீக்க வேண்
என கல்வித்துறை அதிகாரி
யுறுத்தியுள்ளனர்.

ஆனால் இது பெரிய குற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வுத் தண்டனை

## அதிரடி



செய்யும் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கமரூனில் 2014 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. கமரூனின் மராவுவா நகரச் சிறையில் 850 போகோஹராம் பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. போகோஹராம் பயங்கரவாதத் தாக்குதல்களால் கடந்த 7 ஆண்டுகளில் சுமார் 17 ஆயிரம் பேர் சாவடைந்தனர்

இந்த சாவுத்தண்டனைக்கு ஐ.நா அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. ஐ.நாவின் ஊடகப்பேச்சாளர் தெரிவிக்கையில், சதுக்கம் ஒன்றில் வைத்து 10 பேராக துப்பாக்கியால் சுடப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்தார்களா? என்பது குறித்த விவரங்கள் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. சாவுத் தண்டனையை முற்றாக ஒழிக்க வேண்டும் எனும் எமது கொள்கைக்கு எதிராக இடம்பெற்ற இத்தண்டனை, எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

(ஐ-ரி4)



# துருக்கியில் தாக்குதல்

## 4 பேர் சாவு: 36 பேர் காயம்

இஸ்தான்புல், மார்ச் 21

துருக்கியின் மத்திய இஸ்தான்புல் நகரில் தற்கொலைப் படைத்தாக்குதல் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில், குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். தாக்குதலில் அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகளில் தலா ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக இந்த நாட்டினர் உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் குண்டு வெடிப்பில் 36 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 7 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

காயமடைந்தவர்களில் 11 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள் என இஸ்ரேலின் வெளிநாட்டு அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது. இஸ்ரேலியர்களை குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்ட தற்கான காரணம் என்ன எனத் தெரியவில்லை என இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் இஸ்ரேல் காயமடைந்தவர்களை நாடு திருப்ப 2 விமானங்களை துருக்கிக்கு அனுப்பியுள்ளது. இஸ்ரேல், அயர்லாந்து ஆகிய நாட்டு மக்களை துருக்கிக்குப் பயணிக்க வேண்டாம் என அந்த நாட்டு மக்களின் நலன் கருதி அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். (ஐ-ரி4)





டுபாதையில் தரையிறங்க முற்பட்ட போது வெடித்துச் சிதறியது. இதில் பயணித்த 62 பேரும் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.(ஐ)

# ளுக்கு ஐ.எஸ்.வீடியோ

## ஆசிரியர் பணி நீக்கம்

. தீவிரவாதி
களை மாண
ஆசிரியர் மீது
நடவடிக்கை

ர்க் மாநகரில்
அகாடமியில்
ணவர்களுக்கு.
யோ ஒன்றை
ஐ.எஸ். தீவிர
சியை குறித்த

என்றும் ஊடகம் தொடர்பாக கல்வி பயின்று வரும் மாணவர்களும் ஐ.எஸ். குறித்து தெரிந்து கொள்வது அவசியம் எனவும் ஆசிரியர் கருத்து தெரிவித்துள்ளார். இதனையடுத்து அந்த ஆசிரியருக்கு 300 டொலர் மட்டும் அபராதமாக விதித்துள்ளனர்.

ஆனால் அந்தப் பாடசாலை நிர்வாகம் அவரது காரணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததை அடுத்து மாற்று ஆசிரியராக அவர் பல்வேறு பாடசாலைகளில் தற்போது பணியாற்றி வருகிறார். (ஐ-ரி4)

லை துண
அந்தக் காட்
அதிர்ச்சிக்கு
டுகிறது.
ல் தொடர்
சாலையில்
வேண்டும்
ரிகள் வலி

தற்றமல்ல

# அங்கோலாவில் 158 பேர் மஞ்சள் காய்ச்சலால் சாவு

## உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

லுவண்டா, மார்ச் 21

அங்கோலாவில் மஞ்சள் காய்ச்சலால் இதுவரை 158 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வருடத்தில் இருந்து தற்போது வரை இந்த இறப்பு எண்ணிக்கை பதியப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒருமாதத்துக்கு முன்னர் 50 உயிரிழப்புகள் எனப் பதியப்பட்ட போதும் சொற்ப நாள்களில் இதன் எண்ணிக்கை 158 என அதிகரித்துள்ளது என உலக சுகாதார நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

அத்துடன் மலேரியா, கொலரா, டயரியா போன்ற நுளம்பினால் பரவும் நோய்களும் லுவண்டாவில் அதிகரித்துள்ளன. நகரில் மாசுக்கள் நுகர்வின் குறைப்பு இந்த நோய்களுக்கு காரண[illegible] என சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

முறையான கழிவகற்றல் இன்மையே மஞ்சள் காய்ச்சலு[illegible] காரணம் என கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கண்டறியப்ப[illegible] நகர அதிகாரிகள் வகுத்த திட்டத்தில் கழிவுகளை வெளியே[illegible] தேவையான அளவு நிதி ஒதுக்கப்படவில்லை என தெரி[illegible]கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் உள்ள நோய்த்தாக்கம் ஏனைய ம[illegible]ணங்களில் பரவினால் இதன் தாக்கம் அதிகமாக இரு[illegible] அத்துடன் உயிரிழப்புகளும் அதி[illegible]கும் என உலக சுகா[illegible] நிறுவனத்தின் அங்கோலாப் பிரதிநிதி தெரிவித்தார். ([illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் விருச்சிகம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள்)*

### விருச்சிகம்

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**
உங்கள் தன-பூர்வ புண்யாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 8.1.2016 முதல் 12.7.2016 வரை கேதுபகவான் செல்வதால் செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். வேற்று மதத்தவர்கள், மாநிலத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். பிள்ளைகள் நல்ல வழிக்குத் திரும்புவார்கள். உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். தெய்வீக நம்பிக்கை அதிகமாகும். சித்தர் பீடம் சென்று தியானம் செய்வீர்கள். ராகுவின் சதய நட்சத்திரத்தில் 13.7.2016 முதல் 20.3.2017 வரை கேதுபகவான் செல்வதால் வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள். ஏமாந்து போன தொகையை நினைத்து வருத்தப் படுவீர்கள். ஏமாற்றிய நபர்களை நினைத்தும் ஆதங்கப்படுவீர்கள். உங்கள் ராசிநாதனும், சஷ்டமாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் முன்கோபத்தால் இழப்புகள் ஏற்படும்.
வழக்கறிஞர்களிடம் கலந்தாலோசித்த பின்னர் வீடு வாங்குவது நல்லது. இல்லையென்றால் வில்லங்கமான வீடோ அல்லது இடமோ வாங்கி விட்டு பிரச்சினைகள் வர வாய்ப் பிருக்கிறது. உடன்பிறந்தவர்களுடன் மனத்தாங் கல் வரும். வழக்கு சம்பந்தமான விடயங்களில் பின்னடைவு ஏற்படும். வியாபாரத்தில் காலையில் வியாபாரம் நன்றாக இருந்தால் மாலையில் சுமாராக இருக்கும். மாலையில் நன்றாக இருந் தால் காலையில் சுமாராக போகும்.
புது முத லீடுகளை யோசித்து செய்வது நல்லது. பங்குதாரர்களுடன் வளைந்து போங்கள். வேலை யாள்கள் முரண்பாடாகப் பேசுவார்கள். இந்த ராகு-கேது பெயர்ச்சி ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச் சுமையை தந் தாலும் விட்டுக் கொடுத்துப் போகும் குணத்தால் சந்தோத்தையும் தரும்.
கவனம் தேவை. தங்க நகைகளை இரவல் தரவோ, வாங்கவோ வேண்டாம். யாருக்கும் பிணைக் கையெழுத் திட்டு பணம் வாங்கித் தர வேண்டாம். உங்கள் பெயரை சிலர் தவறாகப் பயன் படுத்து வார்கள். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்க வேண்டாம். தந்தை யாரின் உடல் நிலை பாதிக்கும்.
உங்கள் தன-சப்தமாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். மனைவி உங்களுடைய புதிய திட்டங்களை ஆதரிப்பார். சகோதரங்கள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். புதிதாக வீடு, மனை வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களையும் தெரிந்து கொள்வீர்கள்.
வேலையாய்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. பங்குதார ரால் ஏற்பட்ட நஷ்டத்தை சரி செய்வீர்கள். தள்ளிப் போன ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக் கையாளர்களின் எண்ணிக்கை அதிகமாகும். உத்தியோகத்தில் வேலையில் ஆர்வம் பிறக்கும். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பழைய பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். சக ஊழியர்களிடம் இதமாகப் பேசி வேலை வாங்குவீர்கள்.
இந்த இராகு-கேது பெயர்ச்சி ஒருபக்கம் உங்களை எதிர்நீச்சல் போட வைத்தாலும் மற்றோரு பக்கம் விழுந்து கிடந்த உங்களை தலை நிமிரச் செய்வதுடன், சமூகத்தில் புது கௌரவத் தையும் பெற்றுத் தரும்.

(தொடரும்)

# நன்னீரை வழங்குவதற்கு திடசங்கற்பம் பூணுவோம்

திருமதி. சு. கார்த்திகா
உதவிப் பொறியியலாளர் -
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

ஒவ்வொரு வருடமும் உலகநீர் தினமானது மார்ச் 22ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகில் நீரின் முக்கியத் துவம் கருதியும் நீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற் படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபையினால் மார்ச் 22ஆம் திகதி அறி முகப்படுத்தப்பட்டது.
3ஆம் உலகப்போரொன்று ஏற்படுமானால் அது நீருக்காகவேயன்றி யாதொன்றுக்குமாகவல்ல என்று சூழலியலாளர்கள் எச்சரித்துள்ள நிலையில் அபாயகரமான உலகில் வாழ்ந்து வருகின்றோம். இயற்கை நீர் முழு உலகுக்கும் உரிய நன் கொடை என்ற போதிலும் நன்னீரைப் பெறுவதற்கு மனிதன் போரிட வேண் டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளான். கடந்த வருடத்தில் உலகநீர் தினக் கருப்பொருளாக நீடித்த அபிவிருத்திக்கான நீர் என்பதாக இருந்த போதிலும் நாம் கடந்த வருடம் எமது அபிவிருத்தியில் நீரின் முக்கியத்துவம் பற்றி எவ்வளவு தூரம் விழிப்படைந்தோம் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஏனெனில் விழிப்புணர்வு மூலம் தங்களை சுதாகரித்து சூழலை காக்கும் மனப்பான்மை இன்னமும் மக்களிடையே மலரவில்லை என்பதே நிதர்சனம்.
இந்த வருடத்துக்கான கருப்பொருளின் அடிப்படையில் பார்க்கும்போது உலகத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 1.5 பில்லியன் தொழிலாளர்கள் நீருடன் தொடர்பு பட்டுள்ளனர். அதேபோல் பெரும்பாலான கைத்தொழில்களும் நீரை அடிப்படை மூலப் பொருளாக கொண்டதேயாகும்.
எனவேதான் இவ்வருடத்துக்குரிய கருப் பொருளின் நோக்காக தொழிலாளர்களின் வாழ்க்கையைத் தாராளமானதும் தரமான துமான நீரின் மூலம் மாற்றுவதும் அதை சமூகத்துக்கும் பொருளாதாரத்துக்கும் ஊடுகடத்துவதும் ஆகும்.

**உலக நீர் தினம் நாளை**

இதற்கேற்ப தாராளமானதும் தரமானது மான நன்னீரைப் பெற்றுக்கொள்ள உலகநாடுகள் விழித்தெழ வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றது. இதற் காக நீர் மாசடைவதை குறைப்பதும் நீரின் சிக்கனப் பயன்பாட்டை அதிகரிப்பதும் தேவையாகின்றது. உலக அளவில் நோக்கும் போது நீர் மாசடைதலுக்குரிய பல் வேறு காரணங்களை சமர்ப்பிக்கமுடியும். உலக மயமாதல், கைத்தொழில் மயமாதல், அணு மற்றும் இரசாயனப் பரிசோதனை, உள்நாட்டு மற்றும் உலக போர்கள்.
இவை தவிர மேலும் பல காரணங்களும் நீர் மாசடைதலுக்கு காரணமாகின்றன. இதனால் இலங்கை மட்டுமன்றி கைத்தொழில் அபிவிருத்தியில் முன்னேறிய பல்வேறு நாடுகளும் நீர் மாசடைதலில் இருந்து மீளமுடியாது பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றன. உலக வர்த் தகத்தில் ஏற்படும் போட்டித் தன்மையும் நீர் மாசாக்கத்தில் பிரதான காரணமாகும். அதுமட்டுமன்றி குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் நன்னீர் வளங்கள் மாசடை



வதும், பூகோள வெப்பத்தால் அழிவடைவதும் உலகுக்கு உண்டான தற்போதைய சவாலாகும்.
ஆபிரிக்காவை எடுத்து நோக்கும் போது நீரின்மையால் மடியும் உயிரங்கிகளின் எண்ணிக்கை ஆயிரங்களைத் தாண்டி விட்டது. இவ்வாறு செல்லுமிடத்து உயிர் பல்வகைமையற்ற தேசம் உருவாவதை யாரும் தடுக்க முடியாது.
நன்னீரை மாசடையாமல் தடுப்பதும் சிக்கனமாக பேணுவதும் ஒவ்வோர் மனிதனதும் கடமையாகும். எமக்காக கடந்த காலம் என்ன பரிசளித்தது என்பதையும் நாம் எதிர்காலத்துக்கு என்ன கொடுக்க போகின்றோம் என்பதையும் ஒப்பிட்டு நோக்குவோமானால் எம் அழிவின் ஆரம்பம் புரியும். இலங்கையிலும் நிலத்தடிநீர் பல்வேறு வகைகளில் மாசடைந்து வருகின்றது.
இதற்கு பல்வேறு காரணங்கள் காணப் படுகின்றது.
விவசாய இரசாயனங்கள் சேர்தல், எண்ணெய்க் கழிவுகள் சேர்தல், கைத் தொழில் கழிவுகள் சேர்தல் போன்றவற்றை குறிப்பிடலாம். நாட்டின் பல பாகங்களிலும் உவர் நீரை நன்னீராக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன. எனவே தான் கருத்திட்டங்களும், விழிப்புணர்வுகளும் மனித மனங்களில் மாற்றத்தை கொண்டு வரல்வேண்டும். சூழல்நேயத் தன்மையுடன் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய மனப்பாங்கு தோன்ற வேண்டும். இவ்வாறு இல்லாவிட்டால் எதிர் காலத்தை ஏமாற்றிய பொறுப்பு எங்களுக்கே உரியதாகும்.
ஆகவே இன்றைய பொழுதிலே முழு உலகுக்கும் நன்னீரை வழங்குவதற் காக திடசங்கற்பம் பூண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் மாசடைவதால் எமக்கு என்னாகும் என்பதை மனிதகுலம் சற்றும் சிந்திக்கவே இல்லை. எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கை என்னாகுமோ என்பதுதான் கேள்விக் குறி. எமது முன்னைய சந்ததியினர் எம்மிடம் பாதுகாப்பாக அளித்த வளம் இன்று வாழ்வா? சாவா? என்ற இக் கட்டான கட்டத்தில் உள்ளது."



உலக நீர் தினம் நாளை

# நீர் மாசடைதலை தடுப்போம்

செல்வி.தேவமதுசா தேவதீபன்

"நீரின்றி அமையாது உலகு" என்றார் பொய்யாமொழிப் புலவர். அக்கூற்றுக்கிணங்க நாம் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலே பெரிய சவால்களுக்கு முகம்கொடுத்து வாழ்ந்து வருகின்றோம். அந்த வகையிலே இன்று நீர் மாசடைதல் என்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகளாவிய ரீதியில் இன்று நீர்ப் பற்றாக்குறையும் ஏற்பட்டு விட்டது.

வாழ்வில் என்றுமே இன்றியமையாதது நீர் என்றால் அது மிகையாகாது. நீரின் பெருமையைச் சொல்லில் வடித்தல் என்பது இயலாத காரியம். நீரின் பயன்பாடுகளை நாம் ஒவ்வொன்றாக நோக்குவோம். நீர் விவசாய நடவடிக்கைக்கு அத்தியாவசியமான ஒன்றாக விளங்குகின்றது. மனிதர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சாதனமும் இதுவே. மின்சார உற்பத்தி மற்றும் ஏனைய பல தேவைகளினது செயற்பாடுகளுக்கும் நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இயற்கை அன்னை தந்தருளிய வரங்களில் அரிதான ஒரு வளம் நீர் வளமேயாகும்.

நீரின் முக்கியத்துவத்தை மனிதர்கள் இன்னமும் அறியவில்லை என்றுதான் கூற வேண்டும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்கிறது பழமொழி. அதாவது அன்று தொட்டு இன்று வரை நாம் நீரைச் சிக்கனமாகப் பேணுவதே இல்லை. இன்றைய சமுதாயத்தில் சுயநலமே தலை தூக்கி நிற்கின்றது. பொதுநலமோ மண்ணோடு மண்ணாகி விட்டது. இதுவே யதார்த்தம். எப்பொருளாயினும் அது இருக்கின்ற வேளை அதன் மகிமை எவருக்கும் தெரியாது. அது இல்லாத பொழுது தான் அதன் மகிமை புலப்படும். இன்னும் சில ஆண்டுகளில் நீர்ப்பற்றாக்குறை இந்த வையகம் முழுவதும் தலைவிரித்து ஆடப் போகின்றது.

இதற்குக் காரண கர்த்தா யார்? மனிதர்களாகிய நாம் தான். "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற பழமொழி இதை எமக்கு நினைவு படுத்துகின்றது.

நீர் நிலைகளின் இன்றைய நிலையை நோக்குமிடத்து மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. ஏனெனில், பல்வேறுபட்ட காரணிகளால் நீர் மாசடைந்துள்ளது. மனிதனால் கழித்து வீசப்படும் பொருள்கள் மற்றும் விலங்குக் கழிவுகள் என ஏராளமான கழிவுப் பொருள்கள் குளம், கடல், கிணறு போன்ற நீர்நிலைகளில் வீசப்படுகின்றன. இவ்வாறு இன்னும் பல மனித நடவடிக்கைகளினால் நீர் நிலைகள் மாசாகின்றன. எண்ணெய்க்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் பல்வேறுபட்ட வகைக் கழிவுகளால் நீர் நிலைகள் மாசடைகின்றன. இயற்கை அன்னையின் அதி உன்னதமான கொடையில் ஒன்றான நீர் வளத்தை மனிதர்களாகிய நாம் சின்னாபின்னமாக்குகின்றோம். இன்று நன்னீர் அருகி வருகின்றது. எவ்வாறாயினும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினால் கடல் நீரை நன்னீராக மாற்றும் வேலைத்திட்டம் நடைபெறுகின்றது.

வீதிப் புனரமைப்புப் பணிகளுக்காக எத்தனை மரங்கள் அழிக்கப்பட்டன? மரங்களை அழிப்பதனால் மழை வீழ்ச்சி குன்றி வறட்சி பூமி எங்கும் நிலவுகின்றது. இன்னும் சிறிது காலங்களில் நீர் என்பது எட்டாக் கனியாகவே காணப்படும். இதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

நீர் மாசடைவதால் எமக்கு என் னாகும் என்பதை மனிதகுலம் சற்றும் சிந்திக்கவே இல்லை. எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கை என்னாகுமோ என்பதுதான் கேள்விக் குறி. எமது முன்னைய சந்ததியினர் எம்மிடம் பாதுகாப்பாக அளித்த வளம் இன்று வாழ்வா? சாவா? என்ற இக் கட்டான கட்டத்தில் உள்ளது.

நமது முன்னோரும் எம்மை மாதிரி பொறுப் பில்லாமல் சுயநலத்தோடு இருந்திருந்தால் நாம் இவ்வரிய வளத்தைப் பயன்படுத்தியிருக்க முடியுமா? காலம் கடந்து விட்டது. இனியாவது விழித் தெழ வேண்டும். இல்லையாயின் எமது கையில் எதுவுமே இருக்காது. இயற்கையை மனிதன் அழிக்கின்றான். மனிதனும் இயற்கையாலேயே அழிகின்றான். இதுவே உண்மை. இதை நாம் புரிந்து கொண்டால் மனித குலத்திற்கு நன்மை உண்டாகும்.

நீரினைப் பேணிப் பாதுகாப்பது எப்படி என நோக்குவோமாயின் மரங்களை அழிக்காது கழிவுகளை சிறந்த முறையில் அப்புறப்படுத்தி மீள்சுழற்சிக்கு உள்ளாக்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒற்றுமையின் சிறப்பைப் பல்வேறுபட்ட பழமொழிகள் எடுத்துரைக்கின்றன. அதாவது "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்கிறது பழமொழி. அந்த வகையில் நாம் அனைவரும் களத்தில் இறங்கியாக வேண்டும். இது நிர்ப்பந்தம் ஆகும். இதுவே காலத்தின் கட்டாயமும் ஆகும். நீரைச் சிக்கனமாகப் பேணி எதிர்கால சந்ததியைக் காப்பாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐம்பூதங்கள்

ஒரு நாள் என்பது ஆறு சிறு பொழுது களைக் கொண்டது. அதில் ஒரு பொழுதுதான் சாமம். இரவு பத்து மணி முதல் பின்னிரவு இரண்டு மணி வரையிலான நேரம் இது. இரவு பன்னிரண்டு மணி யாகப் போகிறது. ஓரி டத்தில் முகாமிட்டுத் தங்கியிருந்தனர், நம் பசுமைப் பாடசாலைக் குழந்தைகள். அவர் கள் இன்னமும் உறங்கவில்லை. வானில் நகரும் நில வைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந் தார்கள். அவர்களுடைய அடுத்த பாடத்தின் தலைப்பு ஐம்பூதம். பெயரைக் கேட்டதி லிருந்து அவர்களுக்கு அச் சம். இவ்வளவு நாளா நல் லாத்தானே போச்சு! இப்போ என்ன திடீரெனப் பூதம், பேய், பிசாசு என்றெல்லாம் சொல் கிறார்கள் என்று கொஞ்சம் குழம்பினார்கள். சரியாக அந்த நேரம் பார்த்தா, ஒரு கிறீச் சொலி கேட்க வேண்டும்! குழந்தைகள் வெலவெலத் துப் போய்விட்டனர். உண்மை யாகவே பூதம் வந்துவிட்டதோ? ஒலி வந்த திசையைத் திரும்பிப் பார்த்தபோது ஒரு வெளவால் தெரிந்தது.

"வெளவாலே, ஏன் இப்படிக் கத்தினாய்? நாங்கள் பூதம் வந்துவிட்டதோ என்று மிரண்டு விட்டோம்' என்றாள் இன்னிலா.

"எதற்கு பூதம் பற்றிய நினைப்பு?" எனக் கேட்டது வெளவால். "எங்களுக்கு நாளைக்கு ஐம்பூதம்"பற்றிய பாடம். ஒரு பூதம் என்றாலே அஞ்சுவோம். ஐந்து பூதங்கள் என்றால் நடுங்காதா? என்று கேட்டாள் இன்னிலா.

"பூதம் என்றால் ஏன் அஞ்ச வேண்டும்? வெளவால் என் றாலே வெளிநாட்டினர் ரத்தக் காட்டேரி என்று அஞ்சுவார் கள். நீங்கள் சொல்வதும் அதுபோலத்தான் இருக்கிறது. இரண்டுமே தப்பு. ஐம்பூதம் என்றால் முழுவதும் இயற்கை யினாலான பூதம். இதைப் பஞ்ச பூதம் என்றும் சொல் வார்கள். உண்மையில் இந்தப் பூதங்களை வாழ்க, வாழ்க என வாழ்த்த வேண்டும்."

"அப்படியா? அவை என் னென்ன பூதங்கள்?" "நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகிய வைதான் அந்த ஐம்பூதங்கள்"

"அப்பாடி! இவ்வளவுதானா? நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் குழந்தைகள்"

"உண்மையில் நீங்கள் தமிழ்க் குழந்தைகளாக இருப்பதற்குப் பெருமைப்பட வேண்டும்" என்றது வெளவால். "எதற்காக இப்படிச் சொல்கிறாய்?" குழந் தைகள் ஆர்வமாகக் கேட்டார் கள். "கடவுள்தான் உலகைப் படைத்தார் என்று மதங்கள் கூறும். ஆனால், இவ்வுலகம் என்பது இந்த ஐம்பூதங்களால் உருவானது என்று அக்காலத்தி லேயே அறிவியல் பேசியிருக்கி றது தொல்காப்பியம். இது பெருமை இல்லையா?"

"உண்மையிலேயே பெருமை தான்!" "பொதுவாகக் கதையில் வரும் பூதங்கள் எல்லாம் மனி தர்களை அச்சுறுத்தும். ஆனால், இன்றைக்கு உண்மை நிலைமை அப்படி இல்லை. மனிதர்கள் தான் இன்று பெரும்பூதங்களாக மாறி, இந்த ஐம்பூதங்களையும் அச்சு றுத்திக்கொண்டிருக்கிறார்கள்"

"எப்படி?"

"இதைப் பற்றித்தான் நீங்கள் படிக்கப் போகிறீர்கள். இப்போது நான் இரை தேடப் போக வேண் டும். தினமும் என் உடல் எடைய ளவு பூச்சிகளைப் பிடித்துத் தின்று மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் பூச்சிகளைக் கட்டுப் படுத்தும் கடமை எனக்கிருக் கிறது, வரட்டுமா?" "வெளவால் கூடப் பிறருக்கு உதவி செய்கி றது, மனிதர்கள்? அவர்கள் ஐம்பூதங்களுக்கும் அப்படி என்ன தீங்கு செய்கிறார்கள்? குழந்தை களோடு நாமும் காத்திருப்போம்.





# வரலாற்றில் இன்றைய தினம்

1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து அரசரானார்.

1913 - டோரோன் ஓஹியாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் 360 பேர் சாவு. 20 ஆயிரம் வீடுகள் அழிந்தன.

1919 - ரஷ்ய ஒக்ரோபர் புரட்சியின் பின் ஐரோப்பாவில் முதலாவது கம்யூனிட் ஆட்சியான ஹங்கேரின் சோவியத் குடியரசு உதயமானது.

1925 - பட்லர் சட்டத்தின் மூலம் மனித கூர்ப்புக் கொள்கை கற்பிக்கப்படுவது ரென்னிஸியில் தடை செய்யப்பட்டது.

1935 - ஈரானின் மன்னர் ஷா றெஷா ஷா பஹ்லவி, சர்வதேசத்திடம் பேர்சியாவை அதன் சொந்தப் பெயரான ஈரான் என அழைக்குமாறு முறைப்படி கேட்டுக் கொண்டார்.

1945 - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பர்மாவின் மண்டலேயை பிரித்தானியத் துருப்புக்கள் விடுவித்தனர்.

1960 - நிராயுதபாணிகளான தென் ஆபிரிக்க கறுப்பின ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தென் ஆபிரிக்கப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 69 பேர் சாவு, 180 பேர் காயம்.

2002 - காணாமற் போனோரில் 167 பேர் கொல்லப்பட்டுவிட்டனர் என்றால் ஏனையோர் எங்கேயென அன்னையர் முன்னணி கடுஞ் சீற்றத்துடன் வினா.


2008 - கிழக்கிலிருந்து அதிரடிப் படை வடக்கின் போர் முனைக்கு நகர்வு. பாதுகாப்புத் தரப்பின் புதிய வியூகம் இது.



# கல்வியைப் போற்றுவோம்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
என்றே கூறி வைத்தனர் எமது ஆன்றோர்
கல்விக்கு ஈடானது உலகில் இல்லை
கல்வியே எம்மை உயர்த்தி வைக்கும்
ஆசிரியர் சொற்படி கேட்டு நடப்போம்
பாடங்கள் அனைத்தையும்
அக்கறையுடன் படிப்போம்
ஆசிரியர் கருத்துக்கு மதிப்பு வழங்குவோம்
கல்வியை மறந்தால் வாழ்வில் உயர்வில்லை
எதற்கும் அடிப்படை கல்விச் செல்வம்தான்
என்றுமே அழியாத செல்வமும் கல்விதான்
கல்வியைப் போற்றி வணங்கி நிற்போம்
எதிர்கால வாழ்வுக்கு அதனை நம்புவோம்.

சு.ரிஷானிகா



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இன்றைய இளைஞர்களும் மதுபானக் கலாசாரமும்

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

இலங்கைக்கு முதன் முதலாக பிரித்தானியர் காலத்தில் தான் மதுபானம் கொண்டுவரப் பட்டது. மது என்பது வேதனையையும் கவலையையும் மறக்க வைப்பதற் குரிய ஒரு பானம் அல்ல. அது ஒரு போதைப் பொருள். மனிதன் அதைக் குடிப்பதால் தன் வாழ்நாளில் ஒவ்வொரு நாளாகக் குறைத்து இறுதியில் தன்னால் தானே அழிகின்றான்.

ஆதிகாலத்தில் பிரித்தானியர்கள் கீழைத் தேய நாடுகளையும் தம்வசப்படுத்த அந்த நாட்டு மன்னர்களிடையே மதுவைக் கொடுத்து அவர்களையும் மதுவின் பால் கவரும் ஈர்ப்பு விசையாகப் பயன்படுத்தினார்கள். அதன் மூலம் அந்த அரசர்களுக்குத் தெரிந்த உண்மையையும் மனமாற்றத்தையும்பெறவும் இது (மது) ஒரு உந்துசக்தியாகக் காணப்பட்டது.

திரைப்படங்களில் கூட முதல் தொடக்கத்தில் புகைபிடிப்பதும் மது அருந்துவதும் உடல்நலத்துக்கு தீங்கு என்றும் மது வீட்டுக்கும் நாட்டுக்கும் உயிருக்கும் கேடு எனவும் குறிப்பிடுவார்கள். மதுவைத் தற்காலத்தில் தெரியாத மனிதர்கள் எவருமிலர். எல்லோருக்கும் மது என்றவுடனே ஆங்கிலத்தில் பியர் என்ற சொல் ஞாபகத்திற்கு வரும். மதுக்கடைகளைக் காண முடியாத இடமே இல்லை என்று சொல்லலாம்.

இதன் பால் ஈர்க்கப்பட்டவர்களில் இளைஞர்கள் கூட்டமே அதிகரித்து வருகிறது. இவர்கள் வீதிக்கு வீதி நின்று மதுவை அருந்தி அங்குவரும் இளம்பெண்களுக்கும் மற்றும் அந்த வீதியால் வரும் வேறு ஆட்களுக்கும் இடையூறாகவும் குழப்பம் விளைவிக்கும் தன்மையைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். இன்னும் ஒருசிலர் வீட்டில் தம் தாய் தந்தையிடம் இருந்து பணத்தை எடுத்து அதனை வீணாக மதுவுக்கும் புகையிலைக்கும் செலவிடுகின்றனர்.

இந்தக் காலத்தில் மனிதனை அடிமையாக்க மது ஒரு உந்து கோலாக உள்ளது. ஒரு மனிதனுக்கு நோயை உண்டு பண்ணவும் மது ஒரு காரணமாகும். புற்று நோய், நுரையீரல் நோய்கள் என்பன ஏற்படுகின்றது. மது இரத்த அழுத்தத்தையும் உண்டுபண்ணும். குடிக்கும் ஒவ்வொரு துளியும் எமக்கு நாமே கொள்ளியைப் போடுவது போலத்தான் உள்ளது. இன்றைய கால இளைஞர்களின் அடாவடித்தனமான அனைத்திற்கும் காரணமாக மதுவும் இருக்கிறது. ஒருவிளையாட்டுப் போட்டியில் இரு குழுக்கள் மோதிவிளையாடுகின்றனர். அந்த விளையாட்டில் சிறுகுழப்பம் என்றால் போதும். மதுபானத்தைக்குடித்து மதுபானப் போத்தலை உடைத்து தமக்குள் தாமே குத்துப்பட்டு வெட்டுப்பட்டு அழிகின்றனர். இவ்வளவு அதி பயங்கரவேகத்தில் மதுவின் ஆதிக்கம் தொடர்வதால் இனிவரும் சந்ததிகளைக் காப்பாற்றப் போவதற்கு எவருமிலர். போதையின் ஆட்சியால் தீயவை நிகழ்கின்றன. இனிவரும் காலமாவது மதுவை அழித்து உலகத்து மனிதர்களுக்கு விடிவைக் கொடுக்க வேண்டும்.

ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.

# ஆபாச கலப்புல ஊடகங்களைத் தவிர்ப்போம்

உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். நீங்கள் இரு கண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, ஒற்றைக் கண்ணராய் இறையாட்சிக்கு உட்படுவது நல்லது.(மாற் 9:47)

இன்று ஒவ்வொரு வீடும் குட்டித் திரையரங்காக மாறிவிட்டது. சின்னத்திரைமோகம் அனைவரையும் ஆக்கிரமித்துள்ளது. குடும்ப உரையாடல்களுக்கும் இன்பதுன்ப பகிர்வுக்கும். இது அன்பான உணவுப்பரிமாற்ற வேளைகளுக்கும் தடையாகவுள்ளது. அடாவடித் தனங்கள், இருதார உறவுகள், மாமியார் மருமகள் இழுபறிகள், பழிவாங்கல்கள் நிறைந்த சீரியல்களே அதிகம் காணப்படுகின்றன. இவைகளே இன்று சமூக வாழ்விலும் பிரதிபலிக்கின்றன.

மேலும் கணினி வலைப்பின்னலூடான ஆபாசக் காட்சிப் பதிவிறக்கங்கள் திரைப்பட ஆபா சக்காட்சிகள். அலைபேசியில் ஆபாசப் படச் சேமிப்பு என்பன கண்களூடான பாவங்களில் விழ ஏதுவாக அமைகின்றன. விஞ்ஞான வளர்ச்சிக்காகவும் மக்களின் தொடர்பாடல் சுருக்கத்துக்காகவும் உருவான நவீன கண்டுபிடிப்புக்களை இன்று தீய வழிகளில் பயன்படுத்துவது மேலோங்கிக் காணப்படுகின்றது.




இறைவன் தந்த ஒவ்வொரு உறுப்பும் பெறுமதி வாய்ந்தது. அவற்றைப் பயன்படுத்தும் தன்மையைப் பொறுத்தே அவற்றின் மதிப்பு வெளிப்படுகின்றது. வாய்வழி செல்வது அனைத்தும் பின்வழியால் வெளியேறிவிடும் ஆனால் கண்வழி செல்வது சிந்தனையில் சிக்கென ஒட்டிக்கொள்ளும். எனவே ஊடகங்களினூடாக தீயவற்றைப் பார்ப்பதைத் தவிர்த்து அறிவுக்கும், வாழ்வுக்கும், மனித நேயத்துக்கும் வித்திடும் அம்சங்களை நாடுவோம். இந்த தவக்காலத்திலிருந்து சின்னத்திரை மற்றும் ஆபாசகாட்சித் தேடல்களுக்கு அடிமையாகாது பாசத்திலும் கடமையிலும் குடும்ப அக்கறையிலும் பின்னிப்பிணைந்தவர்களாக ஒன்றாகச் செபிக்கும் மக்களாக வாழ்வோம். என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இந்தச் சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக் கல்லைக் கட்டி கடலில் தள்ளி விடுவதே அவர்களுக்கு நல்லது(மாற் 9:42)

எஸ்.யேசுதாஸ்

# போக்குவரத்து சீராகுமா?

வடக்கில் போக்குவரத்துப் பிரச்சினை விபத்துக்களால் நிறைந்துள்ள நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய செயலாற்று முகாமையாளர், யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதியால் அண்மையில் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார். வடக்கில் உள்ள பிரச்சினைகளில் அரச பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் என்பவற்றுக்கான இணைந்த நேர அட்டவணையைத் தயாரிப்பதில் உள்ள இழுபறிநிலையும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

இரண்டு தரப்பினரதும் பஸ்கள் போட்டி போட்டு ஓடுகின்றமை, அதனால் விபத்துக்கள் ஏற்பட்டு சாவுகளும் படுகாயங்களும் ஏற்படுகின்றமை, பொருள் உடைமைகள் சேதமடைகின்றமை, அங்கவீனமாகின்றமை, அதனால் வைத்தியசாலையில் மருந்து உள்ளிட்ட பல செலவுகள் ஏற்படுகின்றமை, வைத்தியசாலைகளில் ஏற்கனவே ஆளணிப் பற்றாக்குறை இருக்கும் நிலையில் அவர்களைக் கண்காணிப்பதில் உள்ள நெருக்கடி, அதனால் சிகிச்சைகளின் தரத்தில் தரம் பற்றிய கேள்விகள், விபத்துக்களால் ஏனைய பயணிகளின் போக்குவரத்து இடையூறு என்று பாதிப்புக்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அதனை ஓரளவு கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் பாதிப்புக்களைக் குறைக்கலாம். பயணிகள் பஸ்களில் ஏறுவதற்கு வீதிகளில் காத்திருப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகளைத் தீர்க்க இணைந்த நேர அட்டவணை உதவும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

அதனைச் சீர்ப்படுத்தப் பலமுறை முயன்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் அதற்கு ஒத்துழைக்காத காரணத்தால் இன்னும் தீர்க்கப்படவில்லை. அரச அதிபரும் பலமுறை எடுத்துக் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. அதனால் மாதக் கணக்கில் ஒருங்கிணைந்த நேர அட்டவணையைத் தயாரிக்க முடியவில்லை. இந்நிலையில் அரச அதிபர் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதிக்குக் கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்குமளவுக்கு வட பிராந்திய செயலாற்று முகாமையாளரான தென்பகுதியைச் சேர்ந்தவர் அக்கறையற்றுச் செயற்பட்டுவருகிறார் என்பது தெளிவாகியது. யாழில் பணிபுரிவதென்றால் உரிய முறைப்படி பணி செய்ய வேண்டும் அல்லது தென்பகுதிக்கே இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை தான் செயல்வடிவம் பெறும் என்பதாக நீதிபதி கடுமையாக எச்சரித்து அனுப்பியிருந்தார். இலங்கைப் போக்கு வரத்துச் சேவையில் உள்ள தமிழ் அரச அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனர் என்றும் நீதிபதி எச்சரித்திருந்தார். நீதிபதியின் எச்சரிப்புக்கு அகப்பட்டுக் கொண்ட தமிழ் அதிகாரி யாழ். சாலை முகாமையாளரே. ஏனைய அதிகாரிகள் இன்னும் அகப்படவில்லை. அவர்களின் செயற்பாடுகளைப் பொறுத்து அவர்களும் விரைவில் அகப்படலாம் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் தென்பகுதி அதிகாரிகள் சிலர் தாம் நினைத்தவாறு செயற்படுவதும் தாம் நினைத்தவாறு விடுப் பில் சென்று பல நாள் இருந்துவிட்டு வரும் நிலையும் இன்னும் தொடர்வதாகக் கூறப்படுகிறது. வடபிராந்திய செயலாற்று முகாமையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் பார்க்கப்படாமல் இருந்ததிலிருந்து அவரது பணி ஒழுங்கு கேள்விக்கு உட்படுகிறது. அதனை உரிய அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.




எதுவாகிலும் போக்குவரத்து பொது மக்களுக்கானது. அதில் குறைபாடு இருக்குமாயின் மேற்சொன்ன பல பாதிப்புக்களும் உருவாகும்.

அதனால்தான் பொதுப்போக்குவரத்துத் தொடர்பில் பலரதும் கவனம் திரும்பியுள்ளதோடு அதனைத் தீர்க்க வேண்டும் என்றும் கோரப்பட்டுவருகிறது. ஆனால் அதில் இரு தரப்பினரதும் இலாபம்தான் பிரதானமாகக் கொள்ளப்படுகிறது. பொதுப்போக்குவரத்து என்றிருந்தாலும் அதில் இலாபம் கருதியதாகவே அரச மற்றும் தனியார் செயற்படுகின்றனர். ஆனால் இலாபம் மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. இலாபம் கருதிய செயற்பாடுகளால்தான் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. திருநெல்வேலியில் பாடசாலை சென்றுதிரும்பிய சிறுவன் தனியார் பஸ்ஸினால் மோதிக் கொல்லப்பட்டான். முன்னரும் பல விபத்துக்கள் இருதரப்பினரதும் பஸ்களால் இடம் பெற்றுள்ளன். தவிர கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் அரச பஸ் தனியார் பஸ்ஸை மோதிச் சேதப்படுத்திப் புரட்டியெடுத்துள்ளது. இதற்கு வேகக் கட்டுப்பாடு இல்லாமையே காரணம் என்று கூறப்பட்டது. இவ்வாறு பல சம்பவங்கள் வரையறை யின்றித் தொடர்கின்றன.

மேல்நீதிமன்ற எச்சரிக்கையின் பின்னர் வடமாகாண இணைந்த போக்குவரத்து நேர அட்டவணை இனியும் தாமதிக்காது என்று எதிர்பார்க்க முடியும். அதற்கு அரச பஸ் தரப்பினரும் அட்டவணை தயாரிப்பவர்களும் விரைந்து செயற்படலாம். அதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆனால் அடுத்த மாதம் ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுவிடும் என்றுதான் இன்னும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது. இனிமேல் யாரால் தாமதம் ஏற்படுகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** பணிகளில் முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். சீரான ஓய்வு, உடல்நலம் பாது காக்க உதவும். பெண்களுக்கு, பேச்சில் நிதானம் தேவை.



**இடபம்:** இஷ்டதெய்வ அருள் துணை நிற்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.



**மிதுனம்:** தாமதமான பணி, நிறைவேற வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**கடகம்:** எதிரித் தொல்லை நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள வருமானம் கிடைக்கும். சுப விடயத்தில், எதிர்பார்த்த நல்ல முடிவு உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கும்.



**சிங்கம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடும். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.





**கன்னி:** சுயநலம் கருதாமல், செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த, குறுக்கீடு விலகும். ஆதாயம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.



**துலாம்:** வாழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். வருமானம் அதிகரிக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவருடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் விலை மதிப்புள்ள பொருள்களைக் கவனத்துடன் பாதுகாக்கவும்



**தனுசு:** மனதில் இனம் புரியாத கவலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். நிர்ப்பந்தத்தின் பேரில், கடன் வாங்க வேண்டாம்.



**மகரம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை பெறுவர்.



**கும்பம்:** தர்ம சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.



**மீனம்:** பேசுவதில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமார். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெண்கள் உறவினர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 5 | | | |
| 5 | 9 | | | | 4 | | | 3 |
| | | | 2 | 3 | | | | |
| | 8 | | | | | 5 | | |
| 4 | | 1 | 7 | 6 | 3 | 2 | | 8 |
| | | 9 | | | | | 7 | |
| | | | | 1 | 2 | | | |
| 7 | | | 9 | | | | 4 | 6 |
| | | | 6 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 1 | 5 | 2 | 3 | 7 | 9 |
| 1 | 3 | 5 | 4 | 9 | 7 | 8 | 2 | 6 |
| 9 | 7 | 2 | 3 | 6 | 8 | 1 | 5 | 4 |
| 5 | 1 | 9 | 2 | 3 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 8 | 3 | 6 | 1 | 5 | 4 | 9 | 2 |
| 2 | 4 | 6 | 8 | 7 | 9 | 5 | 3 | 1 |
| 6 | 2 | 1 | 9 | 8 | 3 | 7 | 4 | 5 |
| 4 | 5 | 8 | 7 | 2 | 6 | 9 | 1 | 3 |
| 3 | 9 | 7 | 5 | 4 | 1 | 2 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இறுதிக் கட்டத்தில் வெள்ளிமூங்கா

சுந்தர் சி இயக்கத்தில் சமீபத்தில் வெளிவந்த “அரண்மனை 2” படத்தையடுத்து அவர் நடித்து வந்த அடுத்த படத்தின் படப்பிடிப்பு 40 நாள்கள் முடிந்து விட்டதாகவும், தற்போது இந்தப் படம் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. மலையாளத்தில் சூப்பர் ஹிட் வெற்றி பெற்ற “வெள்ளிமூங்கா” என்ற படம் தற்போது தமிழில் ரீமேக் செய்யப்பட்டு வருகிறது. சுந்தர் சி.யின் உதவி இயக்குனர் வெங்கட் ரீமேக் செய்யும் இந்தப் படத்தில் சுந்தர் சி முக்கிய வேடத்திலும் அவருக்கு ஜோடியாக “அரண்மனை 2” நாயகிகளில் ஒருவரான பூனம் பாஜ்வாவும் நடித்து வருகின்றனர். சுந்தர் சி இன் உதவியாளர் வெங்கட் இயக்கி வரும் இந்தப் படத்தில் முக்கிய வேடங்களில் சதீஷ் மற்றும் கிரண் ரத்தோட் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

ஆசிரியர், திருடன், வழக்கறிஞர் மூவரும் ஒரே சமயத்தில் இறந்து போனார்கள். சொர்க்கத்தின் வாசலில் ஏகப்பட்ட கூட்டம்.

“நான் கேட்கும் கேள்விக்கு சரியான பதில் சொன்னால் உடனடியாக உள்ளே விடுவேன்” என்று வாசலில் இருந்த தேவதை சொன்னது.

முதலில் ஆசிரியரிடம் தேவதை கேட்டது, “ஐஸ்பெர்கில் விபத்துக்குள்ளாகி மூழ்கிய பிரபல கப்பலின் பெயர் என்ன?”

டைட்டானிக் என்று சொன்னார் ஆசிரியர்.

“நீங்கள் உள்ளே செல்லலாம்” என்று அனுப்பி வைத்தது தேவதை.


அடுத்து திருடனிடம், “விபத்தில் எத்தனை பேர் இறந்து போனார்கள்?” என்று கேட்டது.

“டைட்டானிக் திரைப்படத்தைப் பார்த்த வகையில் ஆயிரத்து ஐநூறு பேர் இறந்து போனார்கள்” என்று பதிலளித்தான் திருடன்.

அவனும் உள்ளே அனுப்பி வைக்கப்பட்டான்.

கடைசியாக வழக்கறிஞரைப் பார்த்து தேவதை கேட்டது, “இறந்து போன அவர்களது பெயர்களை இப்போது நீங்கள் சொல்லுங்கள்” என்று அவருக்குப் பதில் தெரியவில்லை. சொர்க்கத்துக்கும் அனுமதி கிடைக்கவில்லை.






சந்தர்ப்பம் சூழ்நிலையை பயன் படுத்துக. உங்களுக்கு திறமை இருந்தால் உருவாக்கி கொள்ளுங்கள்.. அப்போ தான் விழுந்தாலும் மீண்டும் மீண்டும் எழலாம்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | அச்சுவேலி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 25 | 25 |
| கத்தரி | 80 | 80 | 100 | 100 | 100 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 | 80 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 60 | 60 | 100 | 80 | 60 | 50 | 50 |
| பாகல் | 120 | 100 | 150 | 160 | 100 | 120 | 110 | 110 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80 | 80 | 60 | 120 | 20 | 20 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 60 | 90 | 65 | 65 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 | 40 | 60 | 35 | 35 |
| தக்காளி | 30 | 40 | 30 | 40 | 20 | 40 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கீரை | 40 | 30 | 40 | 15 | 30 | 30 | 15 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 35 | 20 | 30 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 140 | 120 | 120 | 200 | 120 | 120 |
| புடோல் | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 50 | 50 |
| கோவா | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 40 | 40 |
| வெண்டி | 50 | 60 | 40–80 | 60 | 80 | 80 | 60 | 60 |
| போஞ்சி | 140 | 80 | 100 | 140 | 120 | 120 | 70 | 70 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 120 | 100 | 160 | 70 | 70 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 100 | 140 | 40 | 110 | 110 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 140 | 120 | 80 | 80 |
| இராசவள்ளி | 150 | 150 | 140 | 120 | 140 | 140 | 110 | 110 |
| முருங்கைக்காய் | 800 | 300 | 400 | 300 | 280 | 400 | 400 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 05 | 04 | 02 | 05 | – | – | – |



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | பாசையூர் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 750 | 500 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 500 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 500 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 600 | – | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 300 | 500 | 350 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 400 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 400 | 300 | – | – | 250 | – | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 | 200 | 150 | – |
| நகரை | 200 | 250 | – | – | 250 | 150 | – |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 120 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | – | – | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 250 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 350 | 250 | 300 | 250 |
| கொய் | 100 | 100 | 60 | 120 | 120 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 300 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 250 | 250 | 250 |

## பெண்களுக்கான வண்ணப்பட்டி

பெண்களின் ஆடைகளுக்கு தகுந்த வண்ணப்பட்டிகள் அறிமுகமாகியுள்ளன. தோலில் உருவான இவை அனைத்து வண்ணங்களில் கிடைப்பதனால், ஆடைக்கு தகுந்தாற்போல் அணிய முடியும். இவற்றின் விலை 100 தொடக்கம் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.




**நாளை**
பங்குனி -09
செவ்வாய்க்கிழமை
22.03.2016
திதி: சதுர்த்தசி
பி.ப.04.02 வரை
நட்சத்திரம்:
பூரம் பி.ப.04.58 வரை
ராகுகாலம்:
03.16-04.46 வரை
சுபநேரம்:
10.46-12.16 வரை

## சமையல் ருசிக்க



- மொருமொருப்பான அதிகம் எண்ணெய் இல்லாத பஜ்ஜிக்களை தயாரிக்க வேண்டுமானால், சிறிதளவு அரிசி மாவையும் அதன் கலவையுடன் சேர்த்துக் கொள்ளவும்.
- கீரையைச் சமைக்கும்போது கொஞ்சம் சீனி சேர்த்தால், அதன் பச்சை வண்ணம் அவ்வாறே காணப்படும். ருசியும் அதிகரிக்கும்.
- சைவ மற்றும் அசைவ குழம்பு வகைகளை செய்யும் போது அதன் ருசியை அதிகரிக்க வேண்டுமானால், சிறிதளவு பார்லிப் பவுடரை சேர்க்கலாம்.
- மொரு மொருப்பான உருளைக்கிழங்கு அல்லது வாழைப்பழ சிப்ஸ் செய்ய வேண்டுமானால், அவற்றை பொரிப்பதற்கு முன் உப்புத் தண்ணீரைத் தெளிக்கவும்.

## பேரீச்சம்பழச் சட்னி

### தேவையானவை

பேரீச்சம்பழம் - 200 கிராம்
சீரகப்பொடி கால் தேக்கரண்டி
பச்சைமிளகாய் - 4
புளித்தண்ணீர் - 1 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
இஞ்சி - சிறு துண்டு
வெல்லம் - 50 கிராம்
எண்ணெய் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு


### செய்யும்முறை

- பேரீச்சம்பழக் கொட்டைகளை நீக்கி, பச்சைமிளகாய், இஞ்சி, மிளகாய்த்தூள், தனியா, சீரகம் இவற்றைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும்.
- அதை புளித் தண்ணீரில் போட்டு கலக்கி, தேவையான அளவு உப்பும் சேர்த்து சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகைத் தாளித்து, சட்னியில் கொட்டினால் பேரீச்சம்பழச் சட்னி தயார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## இணைய மோகத்தில் இருந்து விடுபடுவதற்கு

நவின உலகில் இணைய மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் இணைய வாசிகளுக்கு புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஃபாரஸ்ட் அப் எனும் இந்தச் செயலியை தொடுதிரைக் கைபேசியில் கவனம் செலுத்தாமல் வேறு முக்கிய பணிகளில் ஈடுபட விரும்பும் போது இயக்க வேண்டும்.

உடனே திரையில் ஒரு மரம் வளரத் தொடங்கும். அடுத்த அரை மணி நேரத்திற்குச் செயலி அப்படியே இயங்கிக்கொள்ள அனுமதித்தீர்கள் என்றால் மரம், முழுமையாக வளரும். அதுவரை நீங்களும் உங்கள் பணியில் மூழ்கி இருக்கலாம். மரத்தை வெட்டாமல் இருக்க வேண்டும் எனும் நல்லெண்ணத்தில் நீங்கள் போனில் கை வைக்காமல் இருக்க வேண்டும். மரம் வளர்ந்து நிற்பதைப் பார்க்கும்போது உற்சாகம் ஏற்படும் அல்லவா? அதற்காகப் பொறுமையாக இருக்கத் தோன்றும். வேலையையும் கவனிக்கலாம்.

இந்தச் செயலி அண்ட்ரொய்ட், ஐ.ஓ.எஸ் இயங்குதளங்களில் செயற்படுவதோடு, இணைய உலாவிகளிலும் செயற்படுகிறது. இணைய உலாவியில் பயன்படுத்தும்போது, அரை மணி நேரத்துக்கு இணையத் தளங்களின் பக்கம் செல்லாமல் இருக்க வேண்டும். எந்தத் தளங்களைத் தடை செய்ய வேண்டும் எனும் பட்டியலைப் பயனாளிகள் தீர்மானித்துக்கொள்ளலாம். கவனச் சிதறல்களுக்கான வாய்ப்பு இணையத்தில் அதிகம் இருக்கும் நிலையில், அவற்றில் இருந்து மீள இந்தச் சேவை கைகொடுக்கும்.



## பாதுகாப்பை அதிகரிக்கும் முன்னணி இணையத்தளங்கள்

இணையமானது பல்வேறு நன்மைகளைத் தருகின்ற போதிலும் பல சமயங்களில் பெரும் தலைவலியாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு பிரச்சினைதான் இணையத்தின் ஊடாகத் தனிநபர் தகவல்கள் திருடப்படுதல் ஆகும்.

இதற்காக இணைய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தகவல்களைக் குறிமாற்றம் செய்து (Encryption) பரிமாற்றம் செய்வதுண்டு.

எனினும் தற்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்திலும் குறைபாடுகள் காணப்படுவதனால் தமது பயனர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் முகமாக கூகுள், பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் என்பன குறிமாற்றம் செய்யப்படும் தன்மையை அதிகரிக்க எண்ணியுள்ளன.

தகவல் குறிமாற்றம் தொடர்பில் அப்பிள் மற்றும் எவ்பிஐ நிறுவனங்கள் நீதிமன்ற வழக்கை எதிர்நோக்கியுள்ள நிலையிலும், எதிர்காலத்தில் வாட்ஸ்அப் சேவையும் இதே பிரச்சினையை எதிர்நோக்கலாம் என்ற எதிர்பார்ப்பிலும் மேற்கண்ட நிறுவனங்கள் அதிரடி மாற்றத்தை மேற்கொள்ள எண்ணியுள்ளன.

# ஆர்ப்பிக்கோ சுப்பர் ஸ்ரோர் திறப்பு






ஆர்ப்பிக்கோ சங்கிலித் தொடர் நிறுவனம் அதன் 18ஆவது பல்பொருள் விற்பனை நிலையத்தை மாலபேயில் திறந்து வைத்ததன் மூலம் அதன் சுற்றாடல் பிரதேசங்களில் வசிக்கும் நுகர்வோருக்கும் அவ்வழியாகப் போக்குவரத்துச் செய்யும் பல்லாயிரக் கணக்கானோருக்கும் விசாலமான இடத்தில் 40,000 பொருள்களில் விரும்பியதை சௌகரியமாகக் கொள்வனவு செய்யும் வாய்ப்பை அளித்துள்ளது.

சிங்கள, தமிழ் புதுவருடம் விரைவில் பிறக்க இருக்கும் நிலையில், இந்த ஆகப்பிந்திய ஆர்ப்பிக்கோ சுப்பர் ஸ்ரோர், 741, தலங்கம வடக்கு, மாலபே என்ற முகவரியில் றிச்சார்ட் பீரிஸ் குழும தலைவர் டொக்டர் சேன யத்தேஹிகேயினால் இம்மாதம் 14ஆம் திகதி அந்தப் பிரதேசத்தில் பொருட் கொள்வனவுகளை விருத்தி செய்யும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

17,000 சதுர அடி விஸ்தீரணமானஆர்ப்பிக்கோவின் விசாலமான பொருட் கொள்வனவு இடங்கள், 50க்கும் அதிகமான வாடிக்கையாளர் வாகன தரிப்பிடங்கள் ஆகியவற்றுடன் பல்வகை பொருள் வகையறாக்களையும் கொண்டுள்ள மாலபே ஆர்ப்பிக்கோ சுப்பர் ஸ்ரோர் ஒரு யதார்த்தமான ஒரே கூரையின் கீழான விற்பனை நிலையமாக விளங்குகிறது என்று கம்பனி தெரிவித்துள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் அதிகமாகக் கொள்வனவு செய்யப்படும் நுகர்வுப் பொருட்கள், உடன் உற்பத்திகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், நிகரற்ற வகைகளிலும் விருப்பத் தேர்வுகளிலுமான இலத்திரன் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யலாம். மருந்தகம், சிற்றுண்டிச்சாலை, சிட்டைக் கொடுப்பனவு வசதிகள் யாவும் உண்டு.

ஆர்பிக்கோ சங்கிலித் தொடர் நிறுவனத்தில் மாலபே விற்பனை நிலையம் 59ஆவது நிலையமாகும். இந்த சங்கிலித் தொடரில் 18 ஆர்ப்பிக்கோ சுப்பர் சென்ரர் மற்றும் சுப்பர் ஸ்ரோர், 18 ஷோ றூம்ஸ், 23 மினி சுப்பர் மார்க்கெட் ஆகியன அடங்குகின்றன. விசாலமான வாகனத் தரிப்பிடங்கள், சிட்டை கொடுப்பனவுக் கரும பீடங்கள், வங்கி நடவடிக்கைகள், வாழ்க்கைத் தேவைகள் ஆகிய வசதிகளுடன் நாட்டில் அதிக ஷொப்பிங் வசதிகளைக் கொண்ட விற்பனை நிலையங் களாக ஆர்ப்பிக்கோ சுப்பர் சென்ரர் விளங்குகின்றன.

இந்த வருட ஆரம்பத்தில் பெறுமதி சேர்ப்பதில் குறிப்பாக வாடிக்கையாளர்களுக்கென தனது அர்ப்பணிப்பான சொந்த வாடகைக் கார் சேவையை ஆரம்பித்ததன் மூலம் இதுவரை சங்கிலித் தொடர் நிறுவனம் எதுவும் மேற்கொள்ளாத ஒரு சேவையை ஆர்ப்பிக்கோ நிறுவனம் ஆரம்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்ததக்கது.

**வணிகம்**

# தரத்துக்கான தமது உறுதிமொழிகளை மீளுறுதி செய்யும் செரன்டிப் மா ஆலை

இலங்கையில் கிடைக்கக் கூடிய தரத்தில் சிறந்த கோதுமை மாவை உற்பத்தி செய்வதற்கான அர்ப்பணிப்பை செரன்டிப் மாஆலைகள் எப்போதும் கொண்டிருக்கின்றது. அதிகளவு ஊட்டச்சத்தைக் கொண்ட உச்சதரமான கோதுமை மாவை உற்பத்தி செய்வதை உறுதிசெய்வதற்கான சிறந்த பயிற்சிகளையும், நடைமுறைகளையும் நிறுவனம் பின்பற்றுகின்றது. நிறுவனத்தின் பிரதான ஆலை வசதியில் தரக் கட்டுப்பாட்டின் அனைத்து அம்சங்களையும் செரன்டிப் மாஆலைகளின், தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் திருமதி ஹேமானி குணதிலக்க கண்காணித்து வருகின்றார்.

நிறுவனத்திற்கான ஹேமானியின் பங்களிப்புக்கான பாராட்டு மற்றும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தின் பொருட்டு, அவரது நாளாந்தச் செயற்பாடுகளை பிரதிபலிப்பதாகவும், தரக்கட்டுப்பாட்டின் முன்னோடியாக திகழ்வதற்கு செரண்டிப் மா ஆலைகளின் நிலையை உறுதி செய்வதற்கு அவரதும் அவ ரது அணியினதும் பல்வேறு செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாகவும் இந்த நேர்காணல் அமைகின்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியலில் (கௌரவ) இளமாணிப்பட்டத்தை ஹேமானி பெற்றார். அத்துடன், எஸ்.எல்.எஸ்.ஐ இடமிருந்து தரமுகாமைத்துவத்திற்கான டிப்ளோமாவையும் அவர் பெற்றார்.



ஐ.எஸ்.ஓ 14004/ஐ.எஸ்.ஓ 22000 சான்றிதழ் மதிப்பீட்டை முன்னெடுப்பதற்கான முன்னணிக் கணக்காய்வாளராக அவர் தகுதிபெற்றுள்ளார். அத்துடன், முன்னணி பிஸ்கட் உற்பத்தி நிறுவனத்தில் தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வில் எட்டுவருட அனுபவங்களையும் கொண்டுள்ளார்.

[illegible] தரக்கட்டுப்பாட்டுக்கான ஊக்கக் காரணியாக அவர் விளங்குகின்றார். அத்துடன், கோதுமைமா உற்பத்தி,பேக்கிங் செய்தல் மற்றும் கோதுமை பகுப்பாய்வு தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் கற்கைகளிலும் அவர் தொடர்ச்சியாகப் பங்குபற்றி வருகின்றார்.அவர் தொடர்ச்சியாக டுபாய், தாய்லாந்து, கனடா மற்றும் இந்தியாவுக்குப் பயணம் செய்து கோதுமை மா சார்ந்த கற்கைகளை முன்னெடுத்து வருகின்றார். மாஉற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளில் முழுமையான திறன்களைக் கொண்டு தமது துறையில் விற்பன்னராக அவர்திகழ்கின்றார்.

கொழும்பு துறைமுகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் அமைந்துள்ள இந்த மா ஆலையானது, உலகின் மிகப்பெரிய தனிவரிசை மா ஆலைகளில் ஒன்றாக உள்ளது. தானியங்கிமா அரைக்கும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னர் உலகின் முன்னணிக் கோதுமை தானியங்களை உற்பத்திசெய்யும் நாடுகளில் இருந்து மிகவும் தரமான கோதுமை தானியங்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்படுகின்றது. நாளாந்தம் 1000 தொன் கோதுமையை அரைக்கும் வசதி இங்கு காணப்படுவதுடன், பேக்கிங் செய்வதற்கான மா,வீட்டுத் தேவைக்கான மா, றொட்டி மா, முழுத் தானிய மா எனபல வகைகள் உள்ளடங்கலாக ஆட்டாமா மற்றும் அனைத்துத் தேவைகளுக்கானமா என்பன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹக்கீமுக்கு

உயர் பீட உறுப்பினர்களான சம்மாந்துறை கலீல் மற்றும் தெல்தோட்டை இல்யாஸ் ஆகிய இரு மௌலவிகளும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸின் 19ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளாத, கட்சியின் பொதுச் செயலாளர் ஹஸன் அலி மற்றும் மாநாட்டின் இடைநடுவில் பங்கேற்ற கடசியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தியில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்காலிக இடைநீக்கத்துடன் அவர்களிடம் விளக்கம் கோரியுள்ளதாகவும், இது தொடர்பில் பேச்சுகள் நடந்து வரும் நிலையில், அவர்களைக் கட்சியை விட்டு நீக்க முடியாது. அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின், இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை செல்லும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஹக்கீம் கண்டியைச் சேர்ந்தவர் என்பதால், அவர் அம்பாறை மாவட்டத்தைப் புறக்கணிக்கும் வகையில் சில தீர்மானங்களை எடுப்பதாகவும், ஆகவே, கட்சித் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்கிவிட்டு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஒருவரை அதற்கு நியமிப்பது தொடர்பிலே கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இரகசிய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் ஆரம்ப உறுப்பினர்களுக்கு எதிராகக் கட்சித்தலைமை செயற்படுவதாகவும் அதற்கமையவே ஹஸன் அலியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதாகவும் குறித்த கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளது.

இந்த இரகசிய கலந்துரையாடல் தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாலமுனையில் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில், ஹக்கீமிடம் வீடியோ ஆதாரங்கள் ஒருவரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், மு.கா. மஜ்லிஸ் சூறா சபையின் தலைவரும், கட்சி உயர்பீட உறுப்பினருமான சம்மாந்துறை கலீல் மௌலவி மற்றும் கண்டி - தெல்தோட்டையைச் சேர்ந்த இல்யாஸ் மௌலவி ஆகியோர் கட்சியிலிருந்து இடைநீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் தேசிய மாநாட்டில் பொதுச் செயலாளர் ஹஸன் அலி கலந்துகொள்ளாமை தொடர்பில் எழுத்துமூல விளக்கத்தைக் கட்சித் தலைமை கோரவுள்ளதாகவும், அதன் பின்னர் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மு.கா. பொதுச் செயலாளர் ஹஸன் அலியைத் தொடர்புகொண்டபோதிலும் அது பயனளிக்கவில்லை. எனினும், அவர் இணையதளம் ஒன்றுக்கு வழங்கியிருந்த செவ்வியில்,

தன்னிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட அதிகாரங்களை தேசிய மாநாட்டுக்கு முன்னர் வழங்குவதாக தலைவர் ஹக்கீம் வாக்குறுதி வழங்கியபோதிலும், அதனை நிறைவேற்றவில்லை என்றும், தனது அதிகாரங்கள் பறிக்கப்படும் அளவுக்கு கட்சிக்கு முரணாகத் தான் எதனையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், கட்சியிலிருந்து நீக்கும் அதிகாரம் தலைவருக்குக் கிடையாது என்றும், இடைநிறுத்தம் செய்து விசாரணை செய்யமுடியும். அதற்குத் தான் முகங்கொடுக்கத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

(த-வ-சி)

## தேசிய

நிலையில், முதல் 12 இடங்களைப் பிடித்த மாணவர்களின் பெயர் விவரங்களை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டது.

இதன்படி, முதல் 12 இடங்களைப் பிடித்த மாணவர்களில், ஒன்பது பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

முதலாவது இடத்தை கொழும்பு விசாகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சத்சரணி ஹெற்றியா ராச்சி என்ற மாணவி பெற்றுள்ளார். கொழும்பு நாலந்தா கல்லூரி மாணவர் சமல் புன்சர இரண்டாமிடத்தையும், கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவி மலீனா இரத்நாயக்க மற்றும் கண்டி மகாமய பாலிகா வித்தியாலய மாணவி இந்தீவரி உமயங்க குமாரி இரத்நாயக்க மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளனர்.

இவர்களை அடுத்து முதல் 12 இடங்களை கொழும்பு, கம்பகா, கண்டி, காலி, மாத்தறை மாவட்ட மாணவர்களே பெற்றுள்ளனர்.

இலங்கை வரலாற்றிலேயே மிக அதிகளவான மாணவர்கள் தோற்றிய பரீட்சையாக இடம்பெற்ற குறித்த ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு 6 லட்சத்து 64 ஆயிரத்து 537 மாணவர்கள் தோற்றியிருந்தனர். எனினும், தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எவரும் இந்தமுறை முதல் 12 இடங்களுக்குள் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் 24 மாணவிகள் 9ஏ தரப்பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முன்னிலையில் உள்ளனர். யாழ்.இந்துக் கல்லூரியில் 18 மாணவர்கள் 9ஏ தரச் சித்தி பெற்று இரண்டாமிடத்திலுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் 9ஏ பெறுபேற்றை 24 மாணவிகளும், 8ஏபி பெறுபேற்றை 27 மாணவிகளும், 8ஏசி பெறுபேற்றை 22 மாணவிகளும், 8ஏஎஸ் பெறுபேற்றை 3 மாணவிகளும், 7ஏ2பி பெறுபேற்றை 16 மாணவிகளும், 7ஏபிசி பெறுபேற்றை 12 மாணவிகளும், 7ஏபிஎஸ் பெறுபேற்றை 2 மாணவிகளும், 7ஏ பெறுபேற்றை 30 மாணவிகளும் பெற்றுள்ளனர் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்.இந்துக் கல்லூரியில் 9ஏ தரப் பெறுபேற்றை 18 மாணவர்களும், 8ஏ பெறுபேற்றை 43 மாணவர்களும், 7ஏ பெறுபேற்றை 26 மாணவர்களும், 6ஏ பெறுபேற்றை 29 மாணவர்களும் பெற்றுள்ளனர் என்று பாடசாலைத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (த-வ-4)

## மின்மாற்றிகள்

புகள் தொடர்பாக, ஜேர்மனி நிபுணர்கள் குழு விசாரிக்கவுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சின் செயலர் சுரேன் பட்டகொட தெரிவித்துள்ளார்.

மின்மாற்றிகள் வெடிக்காது என்று அவர்கள் உறுதியளித்துள்ளனர். நிபுணர் குழுவினர் இங்கு வந்து பார்வையிட்டு, இது தொழில் நுட்பக் கோளாறால் ஏற்பட்ட வெடிப்பா, அல்லது நாசவேலையா என்று ஆராயவுள்ளனர்.

இரண்டு மின்மாற்றிகளும் ஒரே விதமாக வெடித்ததில், நாடுமுழு வதும் மின் தடை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பியகம மற்றும் கொடுகொட ஓபாத உப மின்நிலையத்தில் அமைந்துள்ள இரு மின்மாற்றிகளை ஜப்பான் நிபுணர்கள் ஆய்வுக்குட்படுத்தியுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் தலைவர் அநுர விஜேபால தெரிவித்தார்.

பியகமவில் தீப்பற்றிய உப மின்நிலையத்துக்குப் பதிலாக, புதிய மின்மாற்றியொன்றை பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-வ-சி)

## ராணுவத்தை

வருகின்றனர்.

கடந்த ஆண்டு இரண்டு தேர்தல்களில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட பின்னரும், ராஜபக்ச ஆட் சிக் காலத்து தலைவர்களால் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர்கள் இந்த நாட்டை தமது தனிப்பட்ட சொத்தாக நினைக்கின்றனர். எப்படியாவது அதிகாரத்துக்கு வர முனைகின்றனர்.

இரண்டு தேர்தல்கள் நடக்கவுள்ளன. 2020 ஆம் ஆண்டு முக்கியமான ஒன்றாக இருக்கும்.

அடுத்த நாடாளுமன்றத்தை யார் அமைப்பது, அடுத்த ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது என்று ஜாதிக ஹெல உறுமயவும், ஏனைய பரந்துபட்ட சிந்தனையுள்ள சக்திகளும் தீர்மானிக்கும் என்றார். (த-வ-5)

## குளிக்கச்

பரிசோதனைக்காக - கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் புனரமைப்புக்காக, தற்போது குளத்தின் தண்ணீர் வாய்க்காலில் திறந்துவிடப்பட்டுள்ளது. குறித்த வாய்க்காலில் நீராடச் சென்றபோதே குறித்த மாணவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அவதானித்த சக மாணவர்கள் உடன் தகவல் வழங்கியதையடுத்து, தண்ணீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டு, மாணவன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும், அவர் உயிரிழந்துவிட்டார் என்பது பரிசோதனையில் தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(த-வ-4,101)


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் (சிவம்)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் (சிவம்) 17.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கருணேஸ்வரியின் (கருணா) அன்புக் கணவரும், கல்பனா (நோர்வே), தனுசன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், தவராசாவின் (நோர்வே) மாமனும், யாகினி, யாதவன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, சிவப்பிரகாசம், சிவபாக்கியம் மற்றும் சிவபூசணி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (சி/29885) (11,17,16,20) தகவல்: மருமகன் (த.சிவனடியான்)

077 668 2032

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இந்திராணி ஹரீந்திரன்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி ஹரீந்திரன் 20.03.2016 அதிகாலை காலமானார்.

அன்னார் கொட்டடி காலஞ்சென்றவர்களான இளையதம்பி சுப்பிரமணியம் (முன்னாள் இறைவரிப் பரிசோதகர்- யாழ் மாநகரசபை)- நாகரத்தினம் சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மகளும் செல்வரத்தினம் ஹரீந்திரனின் (இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும் சுரேந்திரநாதன்,புஸ்பராணி, கதிர் காமநாதன் (இந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் யசோதா, மாலினி, வாசுகி, சசீலா, வானதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2016) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வில் லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

22, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (69454) (12.18.20) தகவல்: செ. ஹரீந்திரன் (கணவர்)

### சந்தியாப்பிள்ளை சேவியர் வில்பிரட் (பாலசிங்கம்)



அல்லைப்பிட்டி, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை சேவியர் வில் பிரட் (பாலசிங்கம்) நேற்று (20.03.2016) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை- பிலோமினா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிலிப் பையா மற்றும் விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும் லூட்ஸ்மேரியின் (செல்வம்) அன்புக் கணவரும் ஜெயரூபன் (நிலஅளவை திணைக்களம்- வந்தாறுமூலை), ஜெஸ்மின் கார்மேலா(பிரதேச செயலகம்- ஊர்காவற்றுறை), ஜெனற் காமலிற்றா(கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்ற அன்ரன் மரியநாயகம்(துரைசிங்கம்) மற்றும் டொமினிக் அல்பிறட் (யோகம்), அமலேஸ்வரி(சித்ரா- ஆசிரியை- நல்லூர் சென் பெனடிக்ற்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆதித்தனின் (பிரதான தபாலகம்- யாழ்ப்பாணம்) பாசமிகு மாமனாரும் தவமலர், கிரேசா சிறிய புஸ்பம் ( உப அதிபர் - ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), தேவதாசன், காலஞ்சென்ற நீற்ரா புஸ்பராணி மற்றும் சகாயராசன்(கனடா), ஜெமி.எம் லூயிஸ் (கனடா), அன்ரோனியா டெய்சி, மேரி ஜெசிந்தா(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கபிஷனாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அல்லைப்பிட்டி பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.எ இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி. (69454)(12.18.20) தகவல்: குடும்பத்தினர்

076 884 0130


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனுவல் சாராள் பாக்கியம்

யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்த திருமதி மனுவல் சாராள் பாக்கியம் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எஸ்பீரியல் (முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்), திருமதி பிலோமினா தேவதாஸ், சேவியர், அலன்றோஸ், சில்வெஸ்ரர், திருமதி லற்றீசியா மரியதாஸ், திருமதி றீசா மரியநாயகம் ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 56, சென். செபஸ்ரியன் வீதி பாசையூர் யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் 22.03.2016 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, அடக்கத்திற்காக பண்ணையிலுள்ள கிறிஸ்துநாதர் ஆலய கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை சபையார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மாறன் மரியநாயகம்** (பேரன்)

### திருமதி இராமாசிப்பிள்ளை (செல்லம்மா) நமசிவாயம்



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை இல்லற வாழ்க்கையில் இணைந்தவரும் இல 35, கோயில் வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும் இராமாசிப்பிள்ளை (செல்லம்மா) நமசிவாயம் 19.03.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் அமரர் பத்மநாதன், சந்திரபாலன்(சுவிஸ்),பத்மராணி(ஜேர்மன்) அமரர் புவனேஸ்வரி, தனலட்சுமி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசிலாதேவி(ஜேர்மன்), வசந்தாதேவி (சுவிஸ்), கயிலையன் கிரிநாதன்(ஜேர்மன்), தர்மசீலன் (மதுவரி அத்தியட்சகர் யாழ். மாவட்டம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றமேஸ் (ஜேர்மன்), றாஜ்கரன் (ஜேர்மன்), நிலுசா( ஜேர்மன்), சாருஜன்(சுவிஸ்), வினோஜன் (சுவிஸ்), தனுஜா(ஜேர்மன்), சிந்துஜன் (ஜேர்மன்), தேனகா (இலங்கை), ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தெய்வானப்பிள்ளை செல்லையா, வள்ளிப்பிள்ளை தில்லையம்பலம், சண்முகம் வள்ளிப்பிள்ளை, ஏரம்பு, பொன்னம்மா வல்லிபுரம், ஆறுமுகம் சரஸ்வதி, சற்குணம் முத்துச்சாமி, அன்னப்பிள்ளை தர்மலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லம்மா, நல்லையா, ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்**

### மயில்வாகனம் கமலேஸ்வரன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கமலேஸ்வரன் 19.03.2016 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதியரின் மகனும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஸ்ரீ அப்பாசாமி-கமலாதேவி தம்பதி யரின் மருமகனும், ஸ்ரீரஞ்சி னியின் அன்புக் கண வரும், சுதர்சினி, சுபாசினி, கமலதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.03. 2016)செவ்வாய்க்கிழமை மாலை ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னகம்**
**பங்களா ஒழுங்கை,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

0776665567, 0768466881
0061398770662

# மக்களின் நிலங்களை அபகரிக்காமல் விமானத் தளத்தை தரமுயர்த்தலாம்

## இந்தியத் துணைத்தூதரிடம் தெரிவித்தார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்காமல், பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு முடியுமாயின், அதனை எதிர்க்கவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை நேற்றுமுன்தினம் இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட வந்த, சென்னை விமான நிலையப் பணிப்பாளர் தீபக் சாஸ்திரி தலைமையிலான குழுவினர், கடந்த வியாழக்கிழமை பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட்டு, அங்கிருந்து இந்தியாவுக்கான விமான சேவையை ஆரம்பிக்க முடியுமா என ஆய்வில் ஈடுபட்டனர்.

இவர்களின் ஆய்வின் இறுதியில் பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றம் செய்வதற்காக, சில தரமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டுமே அன்றி, மேலதிக ஒடு பாதைகளோ அல்லது பிற தேவைகளுக்கான நில அபகரிப்போ தேவையில்லை எனப் பரிந்துரைத்தனர்.


குறித்த இந்தியக் குழுவினரின் இந்த முடிவை, இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனிடம் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், மக்களின் காணிகளை அபகரிக்காமல் விமான நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு, எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லையெனத் தெரிவித்துள்ளார். (வ -101)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் கந்தசாமி

(இளைப்பாறிய சுகாதார உத்தியோகத்தர்)



குழுப்பந்தோட்டம், இடைக்காடு, அச்சுவேலியை சேர்ந்த வல்லிபுரம் கந்தசாமி 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் நந்தினி, சிவகாந்தன், பாலகாந்தன், பத்மலோசினி, சறோசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், வனிதா, சோபா, ஆனந்தராசா, நகுலேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், பிரதீபா, அபிநயா, ஆரணி, அனு சியன், பிரசன்னா, தீபிகா, லதுசன், ஆரதி, கிருஷான், கபிசன், சாம்பவி, திருமால் ஆகியோரின் பேரனும் விஸ்னு கரனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (21.03.2016) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குழுப்பந்தோட்டம்,**
**இடைக்காடு, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி தவமணி நாகலிங்கம்



நீதிமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி நாகலிங்கம் கடந்த (19.03. 2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின்(கண்ணாடி - வோக்கர் அன்ட் கிறிக்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாரியாம்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் தெல்லிப்பழை காலஞ்சென்றவர்களான கணபதி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் ரவீந்திரன்(ரவி), ரவிச்சந்திரன்(ரகு), முரளீதரன்(சூட்டா -டோகா), சுகந்தி (பிரான்ஸ்), மைதிலி(வேவி) ஆகியோரின் தாயாரும் கருணாவதி, சஜீகலா, ராகினி, பக்தசீலன், ஜெயராஜ், பகீரதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மீனாட்சிதேவி(மணி), உமாதேவி காலஞ்சென்ற நடேசு, தங்கவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கோபிகா, பவன், சஞ்சயன், தரணிகா, சட்சயன், மாட்சிகா, தானியா, மெல்லினன், அட்சயா, வைஷாலி ஆகியோரின் பேர்த்தியும் வாசுகி, யசோதா, யசோதரன், கௌதமன், கௌசிகன், கௌரீசன், கௌதீபன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03. 2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல் லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிமன்ற வீதி,**
**மல்லாகம். 077 045 5132**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதடி விநாயகரின் உற்சவம்; பொலிஸாரின் விசேட அறிவிப்பு

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்து கொள்ளுமாறு, மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எச்.ஜீ.என்.டி.ஜெயவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்.

ஆலயத்திற்கு வருபவர்கள் தங்கள் உடைமைகளை பாதுகாத்துக் கொள்வது அவர்களின் கடமையே. எனவே ஆலயத்திற்கு வரும் போது, தங்க நகைகள் அணிவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

உற்சவத்தை முன்னிட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு, வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். உற்சவம் ஆரம்பித்த தினத்தில் இருந்து நிறைவடையும் வரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலய வளாகத்தைச் சுற்றி சீ.சீ.ரீ.வீ. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆலய சுற்றாடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் யாராவது காணப்பட்டால், அதனை பொலிஸ் காவலரணில் தெரிவிக்க முடியும்– என்றார். (வ–107)

## வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஆசிரிய வாண்மை விருத்தி நிறு வகத்தால் நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்வி நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு வைத்தீஸ்வராக் கல்லூரியில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடத்தப்படவுள்ளது என ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த செயலமர்வில் பேராசிரி யர் மா. சின்னத்தம்பியின் 'சமுதாய மாற்றமும் பாடசாலையும்' மற்றும் பா. தனபாலனின் 'சிங்கப்பூர் மலேசியக் கல்வி அனுபவங்கள் எம் மண்ணுக்குக் கற்பிக்கும் பாடங்கள் ஒப்பீட்டுக் கல்வி' நூலும் வெளியிடப்பட வுள்ளது.

அறிவுப் பொருளாதாரத்தில் சீனா, இந்தியா, அமெரிக்கா, பின்லாந்து, சிங்கப்பூர், தென் கொரிய நாடுகளின் வகிபாகம், சுதந்திர இலங்கையின் கல்விப் பிரச்சினைகள் ஒப்பீட்டு விமர்சனம், கல்வி விடய ஆய்வில் முகாமைத்துவ தலைமைத்துவ எண்ணக்கருக்கள், யப்பானிய 5 எஸ் தரவட்ட முகாமைத்துவம் தொடர்பான முக்கிய ஆவணங்களும், வினாத்தாள் விடைகளுடனான புள்ளித்திட்டங்களும் வெளியிடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–ரி)

## ஏழு கிலோ

கஞ்சா போதைப் பொருள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இந்த நிலையில் குறித்த கஞ்சாவை மீட்டதோடு, அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்களை, கைது செய்த கடற்படையினர், அவர்களை பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மூன்று பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக கஞ்சா போதைப் பொருள் கடத்தப்படுவது தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் இலங்கையர்கள் கைது செய்யப்பட்டு வரும் நிலையில், தற்போது இந்திய மீனவர்கள் கடத்தியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (து–வ–4,101,109)

## கொள்ளையரை

தொடர்பு உண்டா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், அது தொடர்பில் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடமும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

திக்கத்தில் கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரி-56 ரகத் துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றுடன் கொள்ளையர் வீடு புகுந்துள்ளனர். குறித்த பூசகரின் வீட்டிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் சீருடையினரின் முகாம் உள்ளது. அவர்கள் குறித்த பூசகரிடம் ஏதாவது உதவி கேட்டு வருவது வழமை. அத்துடன், அவரை சாமி என்று அவர்கள் அழைப்பதுண்டு.

சம்பவதினம் வீட்டுக்குள் அனைவரும் இருந்த போது, சாமி என்று அழைத்த சத்தம் கேட்டு, அவர் கதவைத் திறந்துள்ளார். 2 பேர் உள்ளே நுழைந்தனர். ஏனையவர்கள் துப்பாக்கிகளுடன் நின்றிருந்தனர். அவர்களில் சிலர் முகமூடி அணிந்தவாறும், ஏனையவர்கள் சாதாரண நிலையிலும் வீடு புகுந்து 18 பவுண் நகைகளையும் 5 லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்தனர்.

பூசகர் சத்தமிட்டபோது, சத்தம் போட வேண்டாம் என்று சிலர் சிங்களத்தில் கூறினார்கள். அது தொடர்பில் மறுநாள் காலை பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள பாதிக்கப்பட்ட பூசகர், சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரும் வந்து விசாரித்துச் சென்றனர் எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னர் ஒருமுறை எமது வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை விற்க முற்பட்டபோது, இரண்டு தரகர்களும் ஒரு இளைஞரும் வீட்டுக்கு வந்து பார்த்துச் சென்றனர். அப்படி வந்தவர்களில் இளைஞன் மீது பலத்த சந்தேகம் உள்ளது.

இவ்வாறு கொள்ளையடித்தவர்களில், சிலர் கஞ்சா உள்ளிட்ட வழக்குகளில் ஏற்கனவே தொடர்புடையவர்கள் என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள். இந்தநிலையில் எமது வீட்டில் கொள்ளையில் ஈடுபட்டவர்களில் சிலரைச் சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு தடவையும் சாவு வீட்டில் ஒரு தடவையும் கண்டு, பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தேன்.

ஆனால் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. இறுதியாக பருத்தித்துறை நீதிமன்றிலிருந்து சிறைச்சாலை வாகனத்தில் குறித்த கொள்ளையர்களில் ஒருவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, அவரைக் கண்டு அது பற்றியும் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தேன்.

எனினும் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறித்த நபர் போதைப் பொருள் வழக்கில் விளக்கமறியலில் உள்ளார் என்றும், எதிர்வரும் முதலாம் திகதிவரை அவர் பருத்தித்துறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தகவல் கிடைத்தது.

இவ்வாறு 3 தடவைகள் கொள்ளையர்களை நாம் கண்டு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தபோதும், பொலிஸார் அவர்களைக் கைது செய்ய முயற்சி கூட எடுத்திருக்கவில்லை. கொள்ளை இடம்பெற்று 3 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், அதுபற்றி இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறுகோரி, காங்கேசன்துறைப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாரசிங்கவிடம், சுமார் 10 நாள்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன், கடந்த மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரிக்குமாறு பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகப் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார். ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இது எமக்கு சவாலான விடயமாக உள்ளது. கொள்ளை தொடர்பில் விசாரிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்துவதால், எமது பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ளவேண்டிய நிலையை எதிர்கொண்டுள்ளோம் - என்றார்.

(த-வ-4)

## போர்ட்சிற்றி

காலம், மற்றும் மீட்கப்படும் நிலத்தின் அளவு தொடர்பாக, பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

தற்போது நடத்தப்படுகின்ற பேச்சுக்களில், தாமதத்துக்கான இழப்பீடு தொடர்பாகவும் பேசப்படுகிறது. இதுவும் திருத்தப்பட்ட உடன்பாட்டில் உள்ளடக்கப்படும்.

அதிகாரிகள் இணக்கப்பாட்டை எட்டியதும், அது பற்றிய வரைவு அமைச்சரவைக் குழுவிடம் வழங்கப்பட்டு, அனுமதி பெறப்பட்டு இறுதி அனுமதிக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த திட்டத்துக்கான சுற்றுச்சூழல் அனுமதி 72 நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனைகளுக்கு அமைய திட்டத்தை தொடர்வதற்கு சீன முதலீட்டாளர் இணங்கியுள்ளார் - என்றார்.

(த-வ-5)

## பரீட்சையில்

மறவன்புலோவைச் சேர்ந்த மாணவி ஒருவரே தவறான முடிவு எடுத்துள்ளார். அவர் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் இரண்டு மாணவிகளும் தவறான முடிவு எடுத்து, பெற்றோரால் கண்டறியப்பட்டதால் உடனடியாகச் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். இவர்களும் குறித்த பரீட்சையில் சித்தியடையவில்லை என்ற காரணத்தினால்தான் அவ்வாறு தவறான முடிவுக்குச் சென்றதாக, ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

(த-வ-4,9,101)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் செல்வராணி ஐயாத்துரை

தோற்றம் 09.07.1926 | மறைவு 22.02.2016

கடந்த (22.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குலவிளக்கு அமரர் செல்வராணி ஐயாத்துரையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் சரீர உதவி, ஏனைய உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (22.03.2016) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கொல்லோலை வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. 077 728 6008 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையற்பிள்ளை சோமசுந்தரம் கடந்த (18.03.2016) வெள்ளிக்கிழமை 96 ஆம் அகவையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னுப்பிள்ளை (சிங்கப்பூர்), சுப்பிரமணியம் (மாவிட்டபுரம்),தெய்வானைப்பிள்ளை (மாவிட்டபுரம்), திருமதி தங்கம்(மாவிட்டபுரம்), சங்கரப்பிள்ளை (சாவகச்சேரி), சின்னத்துரை (துரை-மாவிட்டபுரம்), திருமதி செல்லம்மா (முழங்காவில்), பரமகுரு (சின்னமணி-சாவகச்சேரி), கந்தசாமி (பயினா -மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாவை.சேனாதிராசா (தலைவர், இலங்கைத்தமிழரசுக்கட்சி, பாராளுமன்ற உறுப்பினர்), செல்வரத்தினம் (இளைப்பாறிய எழுதுவினைஞர், இ.போ.ச. வட பிராந்திய அலுவலகம்),காலஞ்சென்ற இராசரத்தினம் (மாவிட்டபுரம்), தங்கராசா (ஜேர்மனி), செல்வமணி (மாவிட்டபுரம்), செல்வராணி (சுவிஸ்), இராஜேஸ்வரி (ரஞ்சி-சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும், பவானி (மாவிட்டபுரம்), விஜயகுமாரி (மாவிட்டபுரம்), இன்பதேவி (ஜேர்மனி), சிவகுமார் (இளைப்பாறிய கிராம அலுவலர்), யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜெயரட்ணம் (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், கலைஅமுதன் (லண்டன்), ஆராஅமுதன், தாரகா, கௌசல்யா, விஜிர்தா, திருமாவளவன், கமலமோகன், அமுதினி, மயூரன், சிவஜனனி,பகீரதி ( பிரதா), காலஞ்சென்ற பிரியா (ஜேர்மனி), அருள்விழி, இளமாறன் (சுவிஸ்), பிரசாந்தி, ரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காருண்யா, அபிநயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லீலாபேக்கரி லேன், சண்டிலிப்பாயிலுள்ள அன்னாரின் இளைய மகளான ரஞ்சியின் இல்லத்தில் 23.03.2016 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடை பெற்று பூதவுடல் மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனக் கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0094 0777 373 377 , 0094 21 222 8776

தகவல்: மாவை. சோ.சேனாதிராசா
மற்றும் குடும்பத்தினர் .

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திருமதி பிரபாதேவி இளந்திரையன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
குமாரசாமி கணேசன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/பரமன்கிராய் அ.த.க பாடசாலை, பூநகரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் அரியரத்தினம் ஸ்ரீதேவி



தோற்றம் 11.02.1958 | மறைவு 20.02.2016

கடந்த (20.02.2016) இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலணி, சுன்னாகம்.
077 613 3432
சி.அரியரத்தினம் (அரியம்)
(c 29886)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

**நாமகள் வி.க. தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க.தொடர்**

வவுனியாவைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக லீக் முறையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா-வைரவப் புளியங்குளம் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் காலிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் 'பி' அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதவுள்ளது.

**திக்கம் இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரவைசுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-23-108)



# மே.தீவுகளிடம் வீழ்ந்தது பங்களாதேஷ் பெண்கள் ரி-20 உலகக் கிண்ணத்தில்

பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீராங்கனைகளான மத்தியூஸ், ரெய்லர் இருவரும் நீண்ட நேரம் நிலைத்து நின்றாலும் அதற்கேற்ற சராசரி இருக்கவில்லை. மத்திய வரிசை வீராங்கனைகள் சராசரியில் மாற்றத்தை ஏற்படுத்த முனைய 20 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் அந்த அணி 4 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மத்தியூஸ் 41 ஓட்டங்களையும், ரெய்லர் 40 ஓட்டங்களையும், டொற்றின் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக நகிடா 3 இலக்குகளையும், ருமனா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷுக்கு ஆரம்ப வீராங்கனைகள் உட்பட முன்னணி வீராங்கனைகள் எவருமே நம்பிக்கை வழங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைப் பெறுவதற்கே படாதபாடுபட்டனர். இதே நிலைமை நீடிக்க முடிவில் 99 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பங்களாதேஷ். அதிகபட்சமாக நிகர் சுல்தானா 27 ஓட்டங்களையும், பர்கனா 17 ஓட்டங்களையும், இஸ்லாம் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக ரெய்லர் 3 இலக்குகளையும், மத்தியூஸ், டொற்றின் இருவரும் தலா 2 இலக்குகளையும், பிளெச்சர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# நடுவர்களுக்கான பரீட்சை

கரணவாய், மார்ச் 21

இலங்கை கபடிச் சம்மேளனம் தேசிய நடுவர்களைத் தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பரீட்சையொன்றைக் கொழும்பில் நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்பும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் எதிர்வரும்23ஆம்திகதிக்குமுன்னர்விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட கபடிப் பயிற்றுநர் கு.முகுந்தன் அறிவித்துள்ளார். (ம-108)

# பார்வையாளர்கள் குழப்பம்; இரு அணிகளும் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பத்மநாதன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென்.மேரிஸ், யங்ஹென்றிஸ் அணிகள் மோதிய இறுதியாட்டத்தில் பார்வையாளர்களின் குழப்பத்தாலும், போதிய வெளிச்சமின்மையாலும் இரு அணிகளும் சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மகாஜனக்கல்லூரியின் விளையாட்டு நிதியமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து முன்னாள் கால்பந்தாட்ட வீரரான ரி.பத்மநாதன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.கழகமும், இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகமும் மகாஜனக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று மாலை 4 மணியளவில் பலப்பரீட்சை நடத்தின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. பெரும் பரபரப்புக்களுக்கு மத்தியில் இரண்டாம் பாதி ஆரம்பமாகி 5ஆவது நிமிடத்தில் ஆதரவாளர்கள் மைதானத்துக்குள் இறங்கி குழப்பம் விளைவித்ததால் நேரம் வீணடிக்கப்பட்டது. தொடர்ந்து ஆட்டத்தை முன்னெடுக்க நேரம் போதாதமையால் இரு அணிகளின் சம்மதத்துடன் இரு அணிகளும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. சம்பியனாகும் அணிக்கான பரிசுத்தொகை இரு அணிகளுக்கும் சமமாகப் பகிர்ந்து வழங்கப்பட்டது.

(ம-23)

# கிண்ணம் உடுவில் கல்லூரியிடம்

மாங்குளம், மார்ச் 21

வலிகாம கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதபுரம் மகளிர் கல்லூரி அணி மோதியது. அதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 35:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)



# கொக்குவில் இந்துவிடம் கிண்ணம்

மாங்குளம், மார்ச் 21

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 17வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. அதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 23:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியன் ஆனது. மூன்றாமிடத்தை இடைக்காடு மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

# இறுதியில் ஆலடி சிந்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

வைகறை வி.கழகம் நடத்தி வரும் தாச்சித் தொடரில் ஆலடி சிந்து அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வள்ளுவர் அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடிசிந்து அணி 10:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# வலிகாம ஹொக்கியில் சம்பியனானது தெல்லிப்பழை யூனியன்

வலிகாமகல்விவலயப்பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான ஹொக்கித் தொடரில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

லீக் முறைப்படி நடைபெற்ற இந்த ஆட்டத்தில், யூனியன் கல்லூரி அணி தனது முதலாவது ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை 4:0 என்ற கோல் கணக்கிலும், தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றது. இதனையடுத்து புள்ளிகளின் அடிப்படையில் அந்த அணி சம்பியனானது. (ம-422)

# யாழ். இந்து மகளிர் கல்லூரி சம்பியன் யாழ். கல்வி வலய வலைப்பந்தாட்டத்தில்

மாங்குளம், மார்ச் 21

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுப் பெண்கள் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 31:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை பாசையூர் சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி பெற்றது. (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றோயல் கழகம் இறுதியில் சொந்தத் தொடரில் சாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

றோயல் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில், குறித்த கழகம் இறுதியாட்டத்துக்குச் செல்லும் இரு அணிகளில் ஒன்றாகத் தெரிவாகியுள்ளது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற பிளே ஓவ் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. றோயல் அணியின் கஜகோபன் முதல் பாதியில், ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார். மேலதிக கோல்கள் எவையும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியில் றோயலின் சார்பாக நிதர்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். கில்லறியின் சார்பாக ஒரு கோல் பதிவாக, முடிவில் றோயல் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## மகிழங்குளம் அ.த.க. பாடசாலை எறிபந்தில் கிண்ணம் வென்றது

மாங்குளம், மார்ச் 21

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான எறிபந்தாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலை கிண்ணம் வென்றது.

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியை எதிர்த்து மாதர்பனிக்கர்மகிழங்குளம்அ.த.க.பாடசாலை அணி மோதியது. இதில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலை அணி 25:7, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றிச் சம்பியனானது. (ம-422)

# மத்தியவரிசைத் துடுப்பாட்டச் சரிவினால் தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது ஆப்கான்




ரி-20 உலகக்கிண்ணத்தில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குயின்டன் டி ஹொக், அம்லா இருவரும் களமிறங்கினர். அம்லாவின் ஆட்டம் நேற்று எடுபடவில்லை. 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இங்கிலாந்தை மிரட்டியதுபோலவே ஆப்கானுக்கு எதிராகவும் இன்னிங்ஸை கட்டமைத்தார் குயின்டன் டி ஹொக். பிளாசிஸும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த பந்துப்பரிமாற்றத்துக்கு பத்து ஓட்டங்கள் என்ற அடிப்படையில் சென்று கொண்டிருந்தது தென்னாபிரிக்கா. 41 ஓட்டங்களுடன் ரண் அவுட் ஆனார் பிளாசிஸ். 5 ஓட்டங்களால் அரைச் சதத்தை தவறவிட்டார் குயின்டன். வில்லியர்ஸின் தாண்டவம் நேற்றும் இடம்பெற்றது. சடான் வீசிய பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ச்சியாக 4 சிக்சர்களை விளாசினார். 24 பந்துகளில் வில்லியர்ஸின் அரைச்சதம் பதிவானது. 64 ஓட்டங்களுடன் வில்லியர்ஸ் ஆட்டமிழக்க டுமினியும் மில்லரும் பின்வரிசையைப் பலப்படுத்தினர். முடிவில் தென்னாபிரிக்கா 5 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வில்லியர்ஸ் 64 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 45 ஓட்டங்களையும், பிளாசிஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பாக கம்சா, டி.சடான், எஸ்.சடான், நபி நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது ஆப்கானிஸ்தான். தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளரான ஸ்ரெயின் நேற்று களமிறங்காதமை சிறிது பின்னடைவை ஏற்படுத்தியது. ரபாடாவின் முதல் பந்துப் பரிமாற்றத்தை முறையாகக் கவனித்தார் செசாட். ரபாடா, அப்பொட் இருவரது பந்துவீச்சுக்களும் பிரித்து மேயப்பட்டன. சிக்சரும் பவுண்டரியுமே செசாட்டின் இன்னிங்ஸில் இருந்தது. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டம் தென்னாபிரிக்க வீரர்களின் கண்முன் வந்து சென்றிருக்கும். விழிபிதுக்கினார் பிளாசிஸ். 19 பந்துகளில் 44 ஓட்டங்களைக் குவித்து செசாட் ஆட்டமிழந்தார். தலைவரான ஸ்ரானிக்ஸ் நேற்று நிலைக்கவில்லை. நூர் அலி சடான், குல்படின் இணைந்து தென்னாபிரிக்காவின் பிடியை இறுகவிடாமல் பார்த்துக் கொண்டனர். 25 ஓட்டங்களுடன் நூர் அலி சடானும், 26 ஓட்டங்களுடன் குல்படினும் ஆட்டமிழக்க ஆப்கானின் ஆட்டத்தில் சிறிது தளர்வு ஏற்பட்டது. இறுதி நம்பிக்கையான நபி, சடான் இருவரும் பெரிதாக இல்லை. முடிவில் 20 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 172 ஓட்டங்களைப்பெற்றது ஆப்கானிஸ்தான்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மொறிஸ் 4 இலக்குகளையும், ரபாடா, அப்பொட், தாகிர் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். மொறிஸ் ஆட்டநாயகனானார். (ம)

## அபராதத்துடன் வரி செலுத்துகிறார் டோனி

தனது சொகுசுக் காருக்கு வரி செலுத்தாத காரணத்தினால் அபராதத்துடன் வரி செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் இந்திய அணித் தலைவரான டோனி.

டோனி கடந்த 2009ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கு (இந்திய மதிப்பில்) ஹம்மர் ஹெட் என்ற வெளிநாட்டு சொகுசுக் காரை வாங்கினார். ராஞ்சி போக்குவரத்துத் துறையில் காரை பதிவு செய்யும் போது ஹம்மர் காருக்கு என தனிப்பிரிவு இல்லாததால் ஸ்கார்பியோ என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ரூ.4 லட்சத்திற்குப் பதிலாக ஸ்கார்பியோ காருக்கான வரியாக 53 ஆயிரம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு காருக்கான வரியைச் செலுத்தவில்லை. எனவே தற்போது மொத்தமாக அபராதத்துடன் வரியைச் செலுத்த வேண்டும் என்று ராஞ்சி போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. (ம)



## யோகபுரம் ம.வி. கிண்ணம் வென்றது

மாங்குளம், மார்ச் 21

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15வயது ஆண்கள் பிரிவில் யோகபுரம் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 17ஆம் திகதி இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் யோகபுரம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் யோகபுரம் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை மாங்குளம் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

# கச்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி சம்பியனானது துணுக்காய் கால்பந்தில்



மாங்குளம், மார்ச் 21

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுப் பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில்கச்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 17ஆம் திகதி இறுதியாட்டம் நடைபெற்றது. இதன் இறுதியாட்டத்தில் கச்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணி மோதியது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால், கோல்கள் எவையும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலைமை. இதில் கச்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை மல்லாவி மத்திய கல்லூரி அணி பெற்றது. (ம-422)

# ஒட்டுசுட்டான் ம.வி. கிண்ணம் வென்றது

மாங்குளம், மார்ச் 21

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19வயது ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 17ஆம் திகதி இறுதியாட்டம் நடைபெற்றது. இந்த இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின. இதனால் முற்பாதியாட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற முடியவில்லை. இரண்டாம் பாதியில் ஒட்டுசுட்டான் மகா வித்தியால அணி ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை மல்லாவி மத்திய கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## சம்பியனானது சரஸ்வதி வித்தி.

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான எறிபந்தாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியை எதிர்த்து கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 25:7, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில்வெற்றிபெற்றுசம்பியன்கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)



## யாழ். மத்தி இறுதிக்கு முன்னேற்றம் யாழ். வலய கூடைப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிளே ஓவ் முறையில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 45:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகளிடம் இலங்கை சரண்
## கெயில் களமிறங்காத நிலையிலும்




ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இலங்கையின் ஆரம்ப வீரர்களாக சந்திமல் மற்றும் டில்சான். ரசல் வீசிய முதலாவது பந்துப்பரிமாற்றத்தை சிக்சர், பவுண்டரி என அற்புதமாக ஆரம்பித்தார் டில்சான். இலங்கை அணி 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரீத்வைட்டின் பந்தில் டில்சான் எல்.பி.டபிள்யு. என்று தீர்ப்பானது. மீள் பரிசீலனை முறையில் பந்து மூன்றாவது இலக்கில் இருந்து விலகிச் சென்றது. இருப்பினும் எழுதியது எழுதியதே. திரிமன்னே 5 ஓட்டங்களுடனும், கப்புகெதர 6 ஓட்டங்களுடனும் பத்ரியின் சுழலில் சிக்கினர். ரண்அவுட் ஆனார் சந்திமல். ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திரும்பினார் சிறிவர்தன. தற்பொழுது இலங்கை 47-5. களத்தில் மத்தியூஸ் மற்றும் திசர பெரேரா. இருவரும் இணைந்து இலங்கையின் பக்கமும் ஆட்டத்தை மாற்ற முனைப்புக் காட்டினர். சிறிது வெற்றியும் கிடைத்தது. ஆறாவது இலக்குக்காக 44 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன. பிராவோ வீசிய பந்தொன்றை தவறுதலாகக் கணித்து தற்காப்பு ஆட்டத்தால் வெளியேறினார் மத்தியூஸ். பெரேரா அடுத்தடுத்து சில பவுண்டரிகளையும் சிக்சர்களையும் விளாச இலங்கையின் சராசரி ஏற்றம் கண்டது. 29 பந்துகளில் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பெரேரா. முடிவில் இலங்கை 122-9.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக பத்ரி 3 இலக்குகளையும், பிராவோ 2 இலக்குகளையும், ரசல், பிரீத்வைட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது தீவுகள். பெங்களூரில் இலங்கையை எதிர்கொள்ளக் காத்திருக்கிறேன் என்று தெரிவித்து அதிக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திவிட்டிருந்த கெயில் நேற்று ஆரம்ப வீரராக களமிறங்கவில்லை. சாள்ஸுடன் ஆரம்ப வீரராக பிளெச்சர். முதல் பந்துப்பரிமாற்றத்தில் 13 ஓட்டங்களை அள்ளி வழங்கினார் மத்தியூஸ். தீவுகள் 39 ஓட்டங்களில் இருந்த வேளையில் வண்டர்சேயின் சுழலில் போல்ட் ஆனார் சாள்ஸ். 2012ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத்தை இலங்கையிடம் இருந்து பிரித்தெடுத்த சாமுவேல்ஸால் நேற்று முடிந்தது வெறும் 3 ஓட்டங்கள் மட்டுமே. ரம்டினை போல்ட் செய்தார் சிறிவர்தன. பிளெச்சர் அவ்வப் பொழுது சிக்சர்களை விளாசி ஆட்டத்தை தொடர்ந் தும் தீவுகளின் பக்கம் தக்கவைத்துக் கொண்டார். ரசல், பிளெச்சர் இணை இறுதிவரை களத்தில் நிற்க 10 பந்துகள் மீதமிருக்க இலங்கையை வீழ்த்தியது தீவுகள். குலசேகர, கப்புகெதர இருவரும் இரு பிடியெடுப்புக்களைக் கோட்டை விட்டதும் இலங்கையின் தோல்விக்கு காரணமாகியது. பிளெச்சர் 84 ஓட்டங்களுடன் இறுதிவரை களத்தில் நின்றார்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக சிறிவர்தன 2 இலக்குகளையும், வண்டர்சே ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பிளெச்சர் ஆட்டநாயகனானார். (ம)




# அயர்லாந்தை வீழ்த்தியது இலங்கை
## பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத்தில்

பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை, அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலக்குகள் சரிக்கப்படுவதும் இடையிடையே ஓர் இன்னிங்ஸ் கட்டமைக்கப்படுவதுமாக நகர 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் இலங்கை 7 இலக்குகள் இழப்புக்கு 129 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக கௌசல்யா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், ஜெயங்கனி 34 ஓட்டங்களையும், வீரக்கொடி 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அயர்லாந்து சார்பாக மெற்கல்பி 4 இலக்குகளையும், டிலனி, ரெய்லி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது அயர்லாந்து 20 பந்துப்பரிமாற்றங்கள் வரையிலும் தாக்குப்பிடித்த போதிலும் அந்த அணியால் 8 இலக்குகள் இழப்புக்கு 115 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக டிலனி 29 ஓட்டங்களையும், சி.ஜொய்ஸ் 29 ஓட்டங்களையும், ஐ.ஜொய்ஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பாக குமாரி 3 இலக்குகளையும் ரண்வீர, ரணசிங்க இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# இமாலய இலக்குகளை எட்டமுடியும்
## நம்பிக்கை தெரிவிக்கிறார் ஜோ ரூட்




தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி நிர்ணயித்த 229 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை எட்டிய பின்னர் ஏனைய ஆட்டங்களிலும் கடினமான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டால் அவற்றை எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக இங்கிலாந்தின் நட்சத்திர வீரரான ரூட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசை தொடர்பாக ரூட் தெரிவிக்கையில் - தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் எமது அணியின் துடுப்பாட்ட வரிசைப் பலம் சிறப்பாக வெளிப் பட்டது. அந்த அணிக்கு எதிராக கிடைத்துள்ள வெற்றியானது பெரிய அளவிலான நம்பிக்கையை எதிர்வரும் ஆட்டங்களுக்கும் கொடுத்துள்ளது. எங்களால் மீண்டும் இதுபோன்ற ஒரு இலக்கை விரட்ட முடியும். - என்றார். (ம)

O/L துரித மீட்டல்
வகுப்புக்கள் 24.03.2016
வியாழக்கிழமை காலை
7.30 மணிக்கு ஆரம்பம்
சதாபொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய்

# காலிறுதியில் சாய்னா நேவால்



சுவிற்சர்லாந்து பூப்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான சாய்னா நேவால். காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் செக்குடியரசின் கிறிஸ்டினாவை எதிர்கொண்ட சாய்னா, முதல் செற்றை 21:18 என்ற அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தார். இரண்டாவது செற்றிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய அவர் அந்த செற்றை 21:17 என்ற அடிப்படையில் கைப்பற்ற முடிவில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார். (ம)

எடிசன்
அக்கடமி
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்
2015 O/L
24 பேர் 9A

வீடு விற்பனைக்கு உண்டு
யாழ்- கொக்குவில் பொற்பதி வீதியில்
2 பரப்புக் காணியுடன் வீடு
விற்பனைக்குண்டு.
(தரகர் வேண்டாம்)
தொடர்புகளுக்கு: 077 6543926
078 4913262

# நெருக்கடியைச் சமாளிப்பதில் கோக்லி சிறந்தவர் - டோனி

நெருக்கடியைச் சமாளிப்பதில் இந்திய அணியின் துணைத் தலைவர் கோக்லி சிறந்தவர் என்று அந்த அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் விராட் கோக்லியின் பொறுப்பான அரைச்சதத்தின் மூலம் இந்திய அணி வெற்றி பெற்றதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் - நெருக்கடியை கையாள்வதில் விராட் கோக்லி மிகவும் சிறந்தவர். நெருக்கடியான நேரத்தில் பந்துகளை வீணடிக் காமல் சமாளிப்பதே அவரது வெற்றிக்கு காரணமாகும். எந்த ஒரு கிரிக்கெட்டிலும் நெருக்கடி இருக்கும் அந்த நேரத்தில் பந்துகளை வீணடிக்காதிருப்பது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் ஆட்டத்தை நிலைப்படுத்திய பிறகு அதிரடியாக விளையாடலாம். விராட் கோக்லியின் இந்த நுட்பம், பாராட்டும் வகையில் உள்ளது - என்றார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org